உ



# கணபதியே சரணம்! காலமெலாம் காத்து வரணும்

அறிவு சார்ந்த வாசகர்களே

நமது இதழ்கள் உலகம் முழுவதும் உலா வருவதற்கென உங்கள் பேராதரவுடன் கடந்த 3.8.2015 அன்று புதிதாக வெப்சைட் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இதில் எழுத்தாளர்களும் நமது விளம்பரதாரர்களும் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டு உள்ளது. நீங்களும் இதில் பங்கு பெற்று பயன் அடைவதுடன் உங்கள் நல்லாதரவுடன் உங்கள் கருத்துக்களையும் எங்களுக்கு பதிவு செய்திட அன்புடன் வேண்டுகிறோம். இதில் மேலும் பல மாற்றங்களும் பல ஏற்றங்களுடன் எதிர்பாருங்கள்.

**www.apsaraepublications.com**

விநாயகரின் அவதார சரிதம் சம்பவித்தது ஆவணி மாதத்து சுக்கில பட்ஷ சதுர்த்தியன்றாகும். அன்றிலிருந்து அத்தினம் இந்து மதத்தின் உயர்வான ஒரு புனித தினமாக ஆகிவிட்டது. தத்துவங்கள் தோன்றும் முறையில் முதற்கண் சுத்தமாயையில் இருந்து 'ஓம்' என்ற பிரணவ நாதமே தோன்றியது. பிள்ளையார் பிரணவ வடிவினர் ஆதலால் 'பிரணவன்' என்றும் 'மூத்த பிள்ளையார்' என்றும் அறியப்படுகின்றது. 'ஓங்கார நாத தத்துவம்' சிவனையும் சுட்டிநிற்பதால் சிவனும், பிள்ளையாரும் ஒன்றேயென்றும் முடிகின்றது. பிரணவத்தை முற்றறிந்தவர் என்பதால் பிரணவன், பிரணவநாதன் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார். 'ஓம்' என்ற பிரணவ மந்திர ரூபியான அவர் ஞானமே வடிவானவர். அவரது திருமேனிய ஒரு தத்துவ வித்தென ஆன்றோர் அறிவுறுத்தியுள்ளனர். அவருடைய இரு திருவடிகளிலே வலது திருவடியை "முற்றறிவு" எனும் 'ஞானசக்தி' என்றும்" இடது திருவடியை "முற்றுத்தொழில்" எனும் 'கிரியாசக்தி' என்றும் உணர்த்தப்படுகின்றது. இவ்விரு திருவடிகளின் துணையின்றி உயிர்கள் ஒன்றினை அறிந்துக் கொள்ளவோ, செயலாற்றவோ முடியாது.



எல்லாப் பொருட்களையும் ஆகாயம் தன்னுள் அடக்கவும், உண்டாக்கவும், விரிக்கவும், ஒடுக்கவும் கூடிய தன்மையைக்கொண்ட பரந்து விரிந்ததொரு பூதம். ஆகாயம் போலவே சகலவற்றையும் உள்ளடக்கியதாகவே அவரது பேருந்தி காட்சி கொடுக்கின்றது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்ச கிருத்தி யங்களையும் அவர் தனது ஐந்து கரங்களால் இயற்றுகின்றார் எனப்படுகின்றது. ஐந்து கருமங்கட்கும் அவரே அதிபதி என்பதனால் அவருக்கு 'ஐங்கரன்' என்ற திருநாமம் விளங்குகின்றது. அவரை 'பஞ்சகிருத்திகள்' என்றும் கூறுவர். அவரது முற்றறிந்த ஞானத்தை முறம் போன்று பரந்து விரிந்த இருசெவிகளும் விளக்குகின்றன. வலது பக்கமுள்ள ஒடிந்த கொம்பு "பாசஞானத்தையும்' இடது பக்கமுள்ள கொம்பு "பதிஞானத்தையும்' உணர்த்துவதாக உள்ளன. விநாயகரின் அடிக்கீழ் மூஷிகம் அமுந்தி அமைதியாகக் காணப்படுவதை, பிரணவ மூர்த்தியின் அடிக்கீழ் ஆணவ மலம் வலிகெட்டு அமைதி காக்கும் என்பதை விளக்குகின்றது. அவரது உந்தியைச் சுற்றியுள்ள சர்ப்பம் 'குண்டலினி சக்தியின்' வடிவம் என்பர். அதன் விரிவுகளும், சுருக்கங்களுமே பிரபஞ்சத்தின் தோற்றம், சுருக்கம் எனப்படுகின்றது. அதை அவர் உந்தியில் அணிந்திருப்பதானது, உலகிற்கு நிமித்த காரணர் அவர்தாம் என்பதையும் உணர்த்துகின்றது.

விநாயகர் முக்கண் உடையவரெனவும் விளக்கப்பட்டுள்ளது. முக்கண்ணுடைய பெருமை சிவனுக்கே உரியது. ஆயினும் கிரியா வழி, ரூப வழி அறியமிடத்து சிவனும் பிள்ளையாரும் ஒன்றே எனும் தத்துவத்தை உணர்ந்துக் கொள்ளலாம். விநாயகருக்கு 'சித்தி', 'புத்தி' என இரு சக்திகள் உள்ளதாகவும் புராணங்கள் புலப்படுத்துகின்றன. விநாயகரின் வலது முன்கை அபய முத்திரையைக் காட்டும், வலது பின்கையில் மழுவாயுதமும், இடது முன்கையில் மோதகம் அல்லது மாதுளம்பழம் வைத்திருப்பது போலவும், இடது பின்கையில் பாசக் கயிறோ அல்லது செந்தாமரை மலரோ கொண்டிருப்பது போலவும் சித்தரிக்கப்படுகின்றது. துதிக்கையில் நீர்க் கலசம் ஜகமண்டலம் ஒன்றை ஏந்தியிருப்பார். செம்பட்டு வஸ்திரத்தையே அணிந்திருப்பார். விநாயகருக்கு உகந்த முக்கிய நிவேதனப் பொருட்கள் மோதகம், கொழுக்கட்டை பஞ்சாமிர்தம், தேங்காய், அப்பம், அவல், பொரி, கரும்பு, சர்க்கரை முதலியனவாகும். செம்மலர்கள், அறுகம்புல் ஆகியவற்றைக் கொண்டு விநாயகரை அர்ச்சிப்பது மிகச் சிறந்தது.



**புராணம் சொல்லும் கதை:** ஒருமுறை சிவபிரான் வெளியே சென்றிருந்த சமயம் பார்வதிதேவி நீராடச் செல்வதற்கு எண்ணினார். அப்போது தனக்குக் காவல்காக்க ஒருவரும் இல்லையென்பதால், தனது நீராட்டுக்காக

உ
இராமாநந்தம் குருநாதா சரணம்

ஆன்மிகம் தழைத்தோங்கும் ஆல விருட்சம்

# திருவருள் சக்தி

(ஆன்மிகம் - ஜோதிடம் - மருத்துவ மாத இதழ்)

**செப்டம்பர் – 2015**

ஸ்ரீ சக்தி : 10 அருள் : 5

**ஆசிரியர் குழுமம்**
ஆசிரியர், வெளியிடுபவர்
**சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜு**
கௌரவ ஆசிரியர்
**பண்டிட். காழியூர் நாராயணன்**
இணை ஆசிரியர்கள்
**T.V. கிருஷ்ணமூர்த்தி**
**சித்தர் ஞானகுரு**
துணை ஆசிரியர்கள்
ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
**P.D. ஜெகதீஸ்வரன்**
புலிப்பாணி **மு.இளங்கோ**
**தெய்வீகன் மாரிமுத்து**
சிறப்பு ஆசிரியர்கள்
**பா. சுசீந்திரநாத்**
**சி. சிதம்பரம்**

தலைமை நிர்வாகி
**M.S. கிருஷ்ணா**
★ ★ ★
அலுவலக நிர்வாகம்
**வனிதா வெங்கட்**

இந்த இதழில் வெளியாகும் கட்டுரைகளின் கருத்துக்கள் அனைத்தும், கட்டுரையாளர்களின் கருத்துகளாகும், கட்டுரைகளைத் திருத்த, சுருக்க, தள்ளுபடி செய்ய ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்**
நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
Ph. : **044 2811 6770**
E mail : apsarapublications@gmail.com
**www.apsaraepublications.com**

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு **திருவருள் சக்தி** நிர்வாகம் பொறுப்பல்ல.

**Owned - Published by C. Raju at 18, (New No.67), P.V. Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai 600 014 and Printed by Mrs. R. Radha at Apsara Art Printers, 18, (New No.67), P.V.Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai 600 014.**
**Editor : Siddhar Adimai Sri C. Raaju**

**அட்டையில்**
**ஸ்ரீ விநாயகர்**



வைக்கப்பட்டிருந்த சந்தனக் குழம்பை எடுத்து ஓர் உருவம் அமைத்துத் தமது அனுக்கிரகத்தால் அதற்கு உயிரூட்டினார். அவரால் உயிரூட்டப்பட்டதால் அவ்வுருவம் அவரது பிள்ளை ஆகிவிட்டது. எவரையும் உள்ளே நுழைவதற்கு அனுமதிக்கக் கூடாதெனப் பிள்ளையாருக்கு அறிவுறுத்திவிட்டு பார்வதி தேவியார் நீராடச் சென்றுவிட்டார். அச்சமயத்தில் மீண்டுவந்த சிவபிரானைப் பிள்ளையார் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அதனால் சினங்கொண்ட சிவபிரான் பிள்ளையாரின் சிரத்தை அரிந்துவிட்டு உள்ளே சென்றுவிடார். நீராடி முடிந்ததும் தேவியார் வெளியே வந்து, பிள்ளையார் சிரச்சேதமுற்றுக் கிடந்த கோலத்தைக் கண்டு சீற்றங்கொண்டார். தான் உருவாக்கிய பிள்ளையாரைச் சிவனே சிதைத்துவிட்டதை அறிந்த அவர் ஆவேசங் கொண்டவராக காளியாக உருக்கொண்டு வெளியேறி மூவுலகிலும் தமது கண்ணில் பட்ட சகலவற்றையும் அழிக்கத் தொடங்கினாள். காளியின் ஆவேச நர்த்தனத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் சிவபிரானிடம் சென்று முறையிட்டனர். காளியைச் சாந்தப்படுத்துவதற்கு சிவன் எண்ணி, தனது கணங்களை அழைத்து 'வடதிசையாகச் சென்று முதலில் தென்படுகின்ற ஜீவராசியின் தலையைக் கொய்து வருமாறு பணித்தார். பணிப்பின் பிரகாரம் கணங்கள் வடதிசை நோக்கிச் சென்ற பொழுது அவர்களுக்கு ஒரு யானையே முதலில் தென்பட்டது. அவர்கள் அதன் தலையைக் கொய்து சென்று இறைவனிடம் கொடுக்கவும், அவர் அத்தலையை வெட்டுண்டு கிடந்த பார்வதியின் பிள்ளையாரின் முண்டத்தில் வைத்து உயிரூட்டிவிட்டார். இதைக் கண்டு சாந்தமடைந்த தேவியார் அகமகிழ்ந்து பிள்ளையாரைக் கட்டி அணைத்துக்கொண்டார். சிவபிரான் அந்தப் பிள்ளையாருக்கு "கணேஷன்" என திருநாமம் சூட்டித் தமது கணங்களுக்கு கணாதிபதியாகவும் நியமித்தாரென 'நாரத புராணத்தில்' தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்து மக்கள் அனுட்டிக்கின்ற விரதங்களில் விநாயக சதுர்த்தி விரதம் முக்கியமான ஒன்று. ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதச் சுக்கிலபட்ச சதுர்த்தித் திதியன்று விநாயக சதுர்த்தி அனுட்டிக்கப்படுகின்றது. அன்றைய தினம் உலகெங்கணுமுள்ள இந்துக்கள் பயபக்தியோடு விநாயக வழிபாடுயாற்றி, உண்ணா நோன்பிருந்து, தான தர்மங்கள் செய்து கொண்டாடுகின்றனர். நாட்டுக்கு நாடு அந்தக் கொண்டாட்டங்கள் வேறுபட்ட முறைகளில் கொண்டாடப்படுவதைக் காணலாம்.

பிள்ளையாரின் அவதார தத்துவம். பிள்ளையார், விக்னேசுவரர், கணேசர், கணபதி, கணாதிபர், ஐங்கரன், ஏரம்பன், இலம்போதரர், குகாக்கிரசர், கந்தபூர்வசர், மூத்தோன், ஒற்றைமருப்பினன், மூஷிகவாகனன், வேழமுகன், கயமுகன், ஓங்காரன், பிரணவன் போன்ற இன்னும் பல நாமங்கள் விநாயகருக்கு வழக்கிலுள்ளன. இவற்றுள் 'விநாயகர்' என்பது 'மேலான தலைவர்' என அர்த்தப்படும். வி — மேலான: நாயகர் — தலைவர் தனக்கு மேலாக ஒருவர் இல்லாதவர் எனப் பொருள்படும். அதுபோலவே 'விக்னேஸ்வரர்' என்றால் 'இடையூறுகளை நீக்குபவர்' என்றும், 'ஐங்கரன்' என்றால் (தும்பிக்கையுடன் சேர்த்து) ஐந்து கரங்களை உடையவரெனவும்' அர்த்தப்படும். 'கணபதி' என்பது கணங்களுக்கு அதிபதி என்று பொருள்படும். இவ்வாறே அவரது சகல நாமங்களுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் அந்தந்தப் பெயர்களிலேயே பொதிந்துள்ளன. உண்மையில் விநாயகர் அவதரித்த திதியையே (அவர் அவதரித்த தினம்) விநாயக சதுர்த்தி எனக் கொள்ளப்படுவதாக புராணங்கள் கூறுகின்றன.

கணபதியை தொழுவோம் காலமெலாம் நலமுடன் வாழ்வோம்

**சித்தர் அடிமை ஸ்ரீ சி.இராஜு** **Cell : 97104 21880**

# ஆல்ஃபா முத்ரா பவர் டிரெய்னிங்

## ஆழ்நிலை தியானப் பயிற்சி, தந்திர யோக முத்திரைகள்(30) பயிற்சி

The Greatest Power is the Power of the **Meditation Power** (Subconscious Mind)

| இடம் : திண்டுக்கல் 20.09.2015 | Tiruchy-Hotel Arun 19.09.2015 | Chennai-13.09.2015 Asha Nivas,Nungampakkam,Ratland Gate 5th Street |
|---|---|---|

தீராத **நோய்களிலிருந்து** விடுதலை பெறலாம்.
நீங்கள் **விரும்பிய நபராக** நீங்கள் மாறலாம்.
உங்களுக்கு **தேவையானது எதுவாயினும்** பெறலாம்.
உங்களுக்கு **தொல்லை தரும் நபர்களை** சமாளித்து அடக்க முடியும்
உங்களுடைய **தனிப்பட்ட** பிரச்சினைகளுக்கு விடை கிடைக்கும்.
நீங்கள் **நினைத்ததை சாதிக்க** முடியும்.
**பொருளாதாரத்தில்** உயர முடியும்.
நீங்கள் நினைத்த **தலைமைப் பதவி** அடையலாம்.
மற்றவர்களை கவரக்கூடிய தனிப்பட்ட **காந்தசக்தி** கிடைக்கும்.
உறவுகளில் **வெற்றி** கிடைக்கும்.
தேவையற்ற பழக்கவழக்கங்களிலிருந்து **விடுதலை** பெறலாம்.
வாழ்வின் **இலட்சியம்** எதுவாயினும் அடையலாம்.
அனைத்து காரியங்களிலும் **வெற்றி** கிடைக்கும்.
**ஞாபகசக்தி** அதிகரிக்கும்.
**கல்வியில் வெற்றி** அடையலாம்.
குடும்ப வாழ்க்கையில் **வெற்றி** அடையலாம்.
**செய்தொழிலில்** வெற்றி அடையலாம்.
**கடன் தொல்லைகளிலிருந்து** விடுபடலாம்.



வாருங்கள் வரவேற்கிறோம் – ஜாதி, மத, இன பேதமில்லை,
**ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.**
உங்களிடம் உள்ள **சக்தியை** உணருங்கள், உங்கள் வெற்றி உங்கள் **உள்ளத்தில்,**
உங்கள் வெற்றி உங்கள் கைகளில், உடம்பே கோவில் உள்ளமே இறைவன்









**சென்னை, பெங்களூர், திண்டுக்கல் நகரில் இதற்கு முன்னர் நடந்த பயற்சிகளில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் சுய முன்னேற்றம் அடைந்துள்ளனர்.**

(காலை **9.00** to மாலை **5.00**)
பயிற்சி நன்கொடை: **2,500/-மட்டுமே**
**(பயிற்சி கையேடு + மதிய உணவு + தேநீர் உட்பட)**

**தொலைபேசியில் முன்பதிவு செய்து நேரில் வரும் போது பணம் செலுத்தி கலந்து கொள்ளலாம்.**

Muneeswaran.G செல்: **89035 51587**



The Powerfull Self Improvement Training

# ஸகல சௌபாக்யம் அருளும் ஸ்ரீ அன்னையின் ஓர் அற்புத மந்திரம்




ஜோதிஷ ஞான சிரோன்மணி
"புஷ்கராம்ஸம்"
**கடகம் இராமசாமி**
செல் : 94431 67046


தேவியின் மந்திர மகிமை குறித்து ஹயக்ரீவர் அகஸ்தியருக்கு கூறியதாவது

எல்லாப் பொருள்களையும் விட சப்தமே சிறந்தது. எல்லா பொருட்களையம் விட சப்தமே சப்தங்களையும் விட வேதமந்திரங்களே சிறந்தவை. சகல வேதமந்திரங்களில் துர்க்கா மந்திரம் சிறந்தது. இதைவிட சிறந்தது சரஸ்வதி மந்திரங்கள். இதை விட சிறந்தது ஆம்னாய மந்திரங்கள். இவை எல்லாவற்றையும் விட உத்கிருஷ்டமானது லோபா முத்ரா. அதைவிட சிறந்தது காமராஜம், இதற்கு மந்திரராஜம் என்று பெயர்.

வேதத்திலிருந்து உலகம் உண்டாயிற்று. வேதம் காயத்ரியிலிருந்து உண்டாயிற்று. தேவி காயத்ரியே பஞ்சதசாக்ஷரி. 15 அட்சரங்கள். அதிலிருந்தே வேதமும் உலகமும் சகலமும் உண்டாயிற்று. ஏழு கோடி மந்திரங்களும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சக்தியைத்தான் குறிப்பிடுகின்றன. ஆகவே அம்பிகை "சர்வ மந்திர ஸ்வரூபிணி" என சொல்லப்படுகிறாள்.

மஹா மந்திரங்கள் எனப்படுபவை 'வாலை, புவனை, புவனேஸ்வரி, அன்னபூரனேஸ்வரி, பஞ்ச தசாக்ஷரி, ஷோடசி, பிரத்தியங்கிரா, பகளா என்று பலவித அம்பிகை மந்திரங்கள் உள்ளன.



பூஜையில் மூன்று வகை உண்டு. 1. அன்பினால் செய்யப்படுவது. 2. அறிவினால் செய்யப்படுவது. 3. இன்பத்தால் செய்யப்படுவது.

வேதம், தோத்திரம் சொல்லி வழிபடுவது அன்பு பூஜை. மந்திரங்களைச் சொல்லி மலர் போட்டு அர்ச்சிப்பது அறிவு பூஜையாகும். பஞ்சாக்ஷரம், பஞ்சதசாக்ஷரி போன்ற மந்திரங்கள் அகத்தில் தியானித்து ஜபிப்பது இன்ப பூஜையாம்.

ஸ்ரீஅம்பிகை மகாமந்திரங்களின் சொரூபமாக இருக்கிறாள் என்பதையே "மகாமந்திராயை" என்று லலிதா ஸகஸ்ரநாமத்தில் வருகிறது. இவ்வுலகமே தேவியின் ஸ்வரூபம். அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உண்டு என்பதால் அம்பிகை பிண்டமான இச்சரீரத்திலும் இருக்கிறாள். இந்த தேவியை உணர்ந்துக் கொள்வதே சக்தி உபாசனை. ஸ்ரீலலிதா பரமேஸ்வரியின் அங்க தேவதை "பாலா" ஆகவே இவளை வழிபட்டால் அம்பிகையின் அனுக்கிரகம் சுலபமாக ஏற்படும் என்பது உபாசனை இரகசியம்.

### ஸ்ரீபாலா ஸ்துதி

**அயீ ஆனந்தவல்லி அம்ருத நகர**
**தலீ ஆதி சக்தி**
**பராயீ மாயா மாயஸ்வரூபி**
**ஸ்படிகமணி மயீ மா மாதங்கி**
**ஷடங்கி**
**ஞானீ ஞான ஸ்வரூபி நலின**
**பரிமலீ நாத ஓங்கார யோகி**
**யோகீ யோகா ஸனஸ்தா**
**புவனவசகரீ ஸெந்தரி ஐம்**
**நமஸ்தே** – என பாலா ஸ்துதி மூல மந்த்ராத்மகம் ஒன்றை மட்டும் தினசரி காலை, மாலை பூஜாகாலங்களில் கோவில்களிலும் வணங்கும்போது 11 முறை ஒருமித்த மனதோடு சொல்லி அம்பிகையை வணங்கவும், முதலில் எம்மந்திரம் ஆனாலும் மஹா கணபதி மந்திரத்தை அவசியம் ஜபிக்க வேண்டும்.

அடுத்து ஓம் ஐம் கிலீம் ஸௌ: ஸௌ:க்லீம் ஐம்' என்ற மந்திரத்தை உபதேசம் பெற்று தினசரி 108முறை ஜபித்து வர தடைபட்டு வரும் திருமணம் விரைவில் நடக்கும். முடங்கிய தொழில் விருத்தியடையும் நோய் தொல்லையிலிருந்து விடுபடலாம். பிள்ளைப்பேறு கிட்டும். இழந்த பொருட்கள் மீண்டும் கைக்கு கிட்டும் இப்படி கோரிய வரத்தை எல்லாம் அள்ளித் தரும் ஸ்துதி மந்திரமாகும். (பாலா ஸ்துதி மந்திரம்) இதனோடு மூலமந்திரத்தையும் ஜபிக்க பலன்கள் இரட்டிப்பாய் வளரும். அமுதம் பருகியதாகும்.



எளிய பாலா யந்திரம்

மகா குரு சரணம்

# மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் தனிப்பட்ட எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் முழுமையான தீர்வு உண்டு )

மகிழ்வித்து மகிழ்
Web : mahilvithumahil.com

No.7, லைட் ஹவுஸ் காம்ப்ளக்ஸ்,
லிட்டில் பிளவர் ஸ்கூல் எதிரில்,
4 ரோடு, சேலம் – 636 009.

No. 3-A, சன்னிதானம்,
P. 54 விஷாகா அபார்ட்மெண்ட்,
6th- அவன்யூ, அண்ணா நகர், சென்னை–40.



**Cell : 98427-10545, 93677-10545, பெங்களூர் : 90350-10545**

சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, **S. ராஜகுமார்**

**"அரிது அரிது ஜோதிடராய் ஆவது அரிது - அதனிலும் அறிது நல்ல குரு அமைவது அரிது"**
**"வாருங்கள் குரு-சிஷ்யர் உன்னத பந்தந்திற்கு"**

## ஸ்ரீ ந்ருத்ரா யட்சினி தேவதை உபாசனை ( வாக்கு கூற )

இக்கலையை திரிகால சக்தியை முற்றிலும் உணர்ந்த ஞானிகள், யோகிகள், மகான்கள் போன்றவர்கள் கிரகித்து வைத்திருக்கும் அபூர்வ சக்தி யட்சினி சக்தி. அப்படிப்பட்ட யட்சினி சக்தியானது பிரபஞ்ச சித்தரின் சித்தியாலும், சூட்சும ப்ரயோக முறைகளாலும் சைவ முறை பூஜை மேற்கொண்டு இந்த ஸ்ரீ ந்ருத்ரா யட்சினி சக்தியை பெற்றுக் கொள்ள முடியும். பல ஜோதிடர்கள், நாம் சென்று உட்கார்ந்த உடன் எதற்காக வந்திருக்கின்றோம் என மிக துல்லியமாக கூறுவது நமக்கு ஆச்சர்யமாக இருக்கும். நமக்கு ஏற்படும் எதிர்கால நிகழ்வுகளை நாமே அறிந்து கொள்ளவும் உங்களால் முடியும். நடக்க போவதை முன்கூட்டியே அறியவும், ஒருவர் செய்திருக்கும் மாந்ரீக கோளாறுகளை நாமே அறியவும் பயன்படும் ஒரு அரிய கலை. பொதுவாக இச்சக்தியை வாக்கு கூறுவதற்கும், ஜோதிடர்கள் ஜோதிட துறைக்கு வரவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள். ஆண்கள் மற்றும் பெண்கள் கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு உன்னதமான கலை. எந்தவித பயமும் இல்லாமல், குடும்பத்தில் இருந்து கொண்டு கற்றிடும் ஒரு அபூர்வ கலை ஆகும். இதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. இறை சக்தியை உணர வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால் போதும்.

வாருங்கள், வித்தியாசமான அனுபவத்தை தீட்சையில் பெற்றிட, அபூர்வமான சக்தியை நீங்கள் பெற்றிட...

**இன்னும் என்ன யோசனை? வாழ்வில் முன்னேறுவதற்கு?**

**பல ஜோதிடர்களை மாந்திரீகர்களை உருவாக்கிய பயிற்சி**

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : **19.09.2015 சனிக்கிழமை** |
| இடம் | : **சேலம்.** |
| நேரம் | : **காலை 9.30 மணி முதல்** |
| சேவைக் கட்டணம் | : **ரூ. 7700/-** |

இதுவரை யாரும் அறிந்திடாத...

## சூட்சும உயர் சக்திகள்

**ஒரு குறிப்பிட்ட வம்சாவளியில் இரகசியமாக கையாண்டு வந்த, உலகின் அதி சூட்சும இரகசியங்கள் தற்பொழுது பயிற்சி வடிவில்...**

இக்கலையை தாங்கள் கற்பதன் மூலம் உங்களை கண்ட எதிரிகளும் விலகி ஓடுவர். வெளிநாடு செல்ல முயற்சி செய்தும் பலமுறை தோல்வி கண்டவர்கள், வெளிநாடு செல்லும் கனவை நனவாக்கும் பயிற்சி முறை. வாழ்வில் எல்லாம் இருந்தும் மன அமைதி இல்லையா? அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும், பணத்தினால் வாழ்வில் ஏற்படும் பலவித இன்னல்களை போக்கி, இழந்த பொருட்களை மீண்டும் பெறுவதற்கும், வாழ்வில் பல சறுக்கல்களை கண்ட நீங்கள் மற்றவர்கள் முன் தலைநிமிர்ந்து நின்றிடவும், ஜாதகத்தில் ஏற்படும் சகல தோஷங்களை பரிகாரம் இல்லாமல் உயர் சக்திகள் மூலம் தீர்த்திடவும், படிப்பில் மந்தமான நிலை, ஞாபக சக்தி குறைவான நிலை, தேர்வில் தோல்வி மேல் தோல்வி என இருப்பவர்களை வெற்றி படிக்கட்டில் ஏற்றிவிடும் ஒரு கலை. திருமண தடை விலகி ஓடிடும். மாந்ரீகத்தில் ஏற்பட்ட பாதிப்புகள், வாஸ்து கோளாறினால் ஏற்பட்ட பாதிப்புகள், இப்படி நீங்கள் வாழ்வில் முன்னேற எது தடையாக உள்ளதோ அதனை தவிடுபொடியாக்கி வாழ்வில் உயர இப்பயிற்சி வழிவகுக்கும்.

இனிப்பு என்றால் சுவை தெரியாது, சுவைத்து பார்த்தால் மட்டுமே சுவை தெரியும். பார்த்துக்கொண்டே இருந்தால் பலன் தெரியாது. கற்றுக் கொள்ளுங்கள். பிறகு நீங்களே பரிகாரம் சொல்வீர்கள் மற்றவர்களுக்கு.

வாருங்கள்...
இன்னும் நிறைய கற்பதற்கு

**ஆண்கள், பெண்கள் கற்றிடும் சைவ முறை பூஜை**

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : **20.09.2015 ஞாயிற்றுக்கிழமை** |
| இடம் | : **சேலம்.** |
| நேரம் | : **காலை 9.30 மணி முதல்** |
| சேவைக் கட்டணம் | : **ரூ. 5700/-** |

Card Accepted
MasterCard
VISA

**இக்கலையை கற்க பிராப்தம் உள்ளவர்களுக்கே இது கண்ணில்படும்.**

உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து தேவையில்லாத கேள்விகளை கேட்காதீர்கள். வாழ்வில் முன்னேற ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளவும்.

**சென்னையில் பயிற்சி : நாள் : 16.09.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**
**கோவையில் பயிற்சி : நாள் : 23.09.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**
**பெங்களூரில் பயிற்சி : நாள் : 30.09.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி**

**தனிப்பட்ட முறையில் VIP களுக்கு பயிற்சி அளிக்கப்படும். முன் அனுமதி பெற்று கற்கலாம்.**

**தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் பிரபஞ்ச சித்தரை முன் அனுமதியோடு சந்திக்கலாம்.**

**பிரதி மாதம் சென்னை : 5, 15, 25. பெங்களூர் : 16, மலேசியா, சிங்கப்பூர் (Appointment Only)**

**வாருங்கள்... வித்தியாசமான சக்தியை உணர்ந்து பாருங்கள்... நீங்களே பிரமிப்பீர்கள்...**
**நல்லதிற்கு மட்டும் வாருங்கள், வாழ்வில் அனைத்தும் நல்லதாக மாறுவதை உணர்வீர்கள்**
**தோல்விக்கு சவால் விடு, புகழ்ந்தால் என்னை தோற்கடி என்று...! - குருஜி ஐயா.**

குருவின் அருளுடன் குறைவில்லாத நிறைவைத் தரும்

# ஆன்மிக சூட்சும இரகசியங்கள்

## வலிப்பு நோய் மூளை பாதிப்பு நீக்கும் சிவவழிபாடு




புலிப்பாணி **மு.இளங்கோ**

செல்: 98943 85933


25

சிவனுக்கு பஞ்ச பிரம்மேந்திரன் என்று மற்றொரு பெயர் உண்டு. இதற்கு ஐந்து முகங்களை உடையவன் என்று பொருள் உண்டு. ஈசானம் தத்புருஷம் அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்ற இறைவனின் பஞ்ச பிரம்ம முகங்களில் அகோரமாகிய தெற்கு முகமான பிரம்மத்தில் உற்பத்தியான மூர்த்தமே ஞானமூர்த்தமாகிய தக்ஷிணாமூர்த்திஆகும். த — என்பதிற்கு அறிவு என்று பொருள். க்ஷி — என்பதற்கு மூன்றாவது கண் என்று அர்த்தமாகும். எண என்பதிற்கு உடையவர் என்று பொருள் படும். எனவே அறிவாகிய மூன்றாவது கண் உடையவர் என்று பொருள்படும்.

கோரம் என்ற சொல்லுக்கு அஞ் ஞானம் என்ற இருள் மாயை என்று பொருள் படும். அஞ்ஞானம் எப்பொழுது நம்மிடம் இருக்கும் அறிவு தெளிவு ஏற்படாதபொழுது ஆகும். அறிவு தெளிவு எப்பொழுது ஏற்படும் என்றால் முளையானது சரியாக செயல்படும் பொழுது ஆகும். இப்படிப்பட்ட அஞ் ஞான இருளை அகற்றி முளையை செயல்படுத்தி அறிவு தெளிவு பெறுதலையே அகோரம் என்று அழைப்பார்கள் அப்படிப்பட்ட அகோர முகத்தில் இருந்து தோன்றியவரே ஆதி குரு தக்ஷிணாமூர்த்தி ஆவார்.



நம்முடைய ஜோதிட சாஸ்திரத்தில் ஒரு குழந்தை பிறக்கும் பொழுது மாலை சுற்றி பிறந்தால் மாமனுக்கு ஆகாது என்றும் அதுபோல கொடிசுற்றி பிறந்தால் கோத்திரத்திற்கு ஆகாது என்றும் கூறுவார்கள். இங்கு மாலை என்பதும் கொடி என்பது ஒரே பொருள் படும். மாமன் என்பது தாய் மாமனையும் கோத்தரிம் என்பது தகப்பனையும் குறிக்கும். இதனை சொல்லி அந்த காலத்தில் மாமனுக்கும், தகப்பனுக்கும் உயிர் ஆபத்தை கொடுக்கும் என்று பலன் சொல்லி வந்தார்கள்.

உண்மையில் ஒரு குழந்தையின் கழுத்தில் கொடி சுற்றி பிறக்கும் பொழுது அதனுடைய கழுத்து பகுதியானது இறுக்கபடுகிறது. இதனால் மூளைக்கு போகும் இரத்த ஓட்டம் பாதிக்கப்படுகிறது. இதனால் அந்த குழந்தையின் மூளை வளர்ச்சி பாதிக்கப்படும் என்பது உண்மையிலும் உண்மை ஆகும். இதனால் அக்குழந்தைக்கு வலிப்பு நோய்உண்டாக கூடும். என்று இன்றைய நவீன மருத்துவம் தெளிவுபட கூறுகிறது. இப்படி பிறக்கும் குழந்தை பெண் குழந்தை யாக இருந்தால் அக்காலத்தில் தாய் மாமன் வீட்டின் திருமணம் முடிக்கப்படும். இதனால் மாமனுக்கும் குழந்தையை பெற்ற தகப்பனுக்கும் கஷ்டம் என்பதுதான் உண்மையான அர்த்தம் ஆகும். தற்பொழுதுமாமனுக்கோ மாமன் வீட்டிற்கு திருமணம் செய்து கொடுக்கும் வழக்கம் குறைந்து விட்டதால் மாலை சுற்றி பிறக்கும் குழந்தைகள் தாய்மாமனை ஒரு பொழுதும் பாதிக்காது.

புத்தி தெளிவு இல்லாததை அபஸ்மாரம் என்று அழைப்பார்கள். அதுபோல அபஸ்மாரம் என்பதிற்கு வலிப்புநோய் என்று அர்த்தம் உண்டு. இப்படிப்பட்ட நோய் மனிதனுக்கு பிறவியிலும் வரலாம். மனித வாழ்வில் இடையிலும் வரலாம். இதனை நீக்க தக்ஷிணாமூர்த்தி வழிபாடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

### மூலமந்திரம்

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் — ஓம் நமோ பகவதே தக்ஷிணா மூர்த்தியே த்ரிநேத்திமாய, திரிகாலக்ஞானாய ஸர்வ சத்ருக்னாய ஸர்வாபஸ்மரா விதாரணாய தாரய, மாரய மாரய பஸ்மீ குரு, பஸ்மீகுரு, ஏஹ்யேஹி ஹுாம்பட் சுவாகா.

1. குழந்தைகளுக்கு சுத்தமான தேனிலும், பசும்நெய்யிலும் ஜெபித்து உணவுடன் சேர்த்து கொடுக்க முளை பாதிப்பு நீங்கும்.

2. பெரியவர்களுக்கு வலிப்புநோய், முளைபாதிப்பு இருந்தால் பஞ்ச கவ்விய நெய்யில் இம்மந்திரத்தை "ஜெபித்து" கொடுக்க நோய் நீங்கும். கட்டாயமாக இந்த நோய் உள்ளவர்கள் சைவ உணவு சாப்பிட்டு வர விரைவில் நோய் விலகி பலன் கிடைக்கும் வாழ்க அறமுடன்.

ஸ்ரீ வரசித்தி விநாயகர் துணை ஸ்ரீ லட்சுமி வெங்கடேசபிரசன்ன

பெருமை மிக்க உங்களின் பேராதரவோடு சாதனை படைக்க இருக்கும்

# 100வது ஜோதிட பயிற்சி வகுப்பு

## ஆண், பெண் மற்றும் ஆர்வம் உள்ள அனைவரும் கலந்துக் கொண்டு பயன்பெறும் இரண்டு ஜோதிட சூட்சும பயிற்சிகள்

**பயிற்சி: 1 ஜோதிடத்தில் ஏற்றத்தை தரும் ஜோதிட எண் கணித சூட்சுமங்கள்**

**Numerlogoy**

| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N | O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 8 | 3 | 5 | 1 | 1 | 2 | 3 | 4 | 5 | 7 | 8 | 1 | 2 | 3 | 4 | 6 | 5 | 6 | 5 | 1 | 7 |

மனிதன் பிறக்கும்போதே, பிறந்த நேரம் என்று எண்ணும், பிறந்த மாதம் என்ற எண்ணும், பிறந்த வருடம் என்ற எண்ணும் உருவாகிறது.

அதேபோல் பிறந்த நேரத்தில் ஜோதிடத்தில் நமக்கு லக்கனம், நட்சத்திரம், ராசி என்று நம் வாழ்க்கையை நிர்ணயம் செய்யும் ஜாதகமும் உருவாகி விடுகிறது.

1. **நாம் வாசம் செய்யும் வீட்டிற்கு எண்கள் உண்டு.**
2. **நாம் வாழும் ஊருக்கு பின்கோடு என்ற எண்கள் உண்டு.**
3. **நாம் பயன்படுத்தும் வாகனத்திற்கு எண்கள் உண்டு.**
4. **நாம் தொடர்புக்கொள்ளும் தொலைபேசிக்கு எண்கள் உண்டு.**
5. **நம்மோடு இருக்கும் செல்போனுக்கு எண்கள் உண்டு.**
6. **நம் வங்கிக் கணக்கிற்கு எண்கள் உண்டு.**

இப்படி நம் வாழ்க்கையோடு ஒன்றிப்போன எண்களை, நமக்கு நிர்ணயம் செய்யப்பட ஜாதகத்தோடு இணைந்து கிடைத்த வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டு வளம் பெறும் ஏற்றத்தைத் தரும் ஜோதிட எண் கணித சூட்சமங்கள் பயிற்சி வகுப்பு

**பயிற்சி : 2 ஜோதிடத்தில் வெற்றிக்கு வழிகாட்டும் பஞ்சபட்சி சூட்சுமங்கள்**



மனித வாழ்க்கையில் எத்தனையோ, நல்ல நேரங்கள், கெட்ட நேரங்கள் வந்து போய்க்கொண்டே இருக்கின்றன. அப்படிப்பட்ட நேரங்களில் காலம் அறிந்து, நேரம் அறிந்து செயல்பட்டால் வெற்றிக்கு வழியுண்டு என்று நம் முன்னோர்கள் பஞ்ச பட்சி சாஸ்திரம் மூலம் கூறியுள்ளார்கள்.

அவரவர்கள் ஜாதகப்படி எந்த, எந்த நேரங்கள், காலங்கள், பலமான நேரங்கள் என்று தெரிந்து வழி வகுத்து பயன்படுத்தி வெற்றி காணும் வெற்றிக்கு வழிகாட்டும் ஜோதிட பஞ்சபட்சி சூட்சுமங்கள் பயிற்சி வகுப்பு.

**காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**

| திருச்சி 97வது வகுப்பு | மதுரை 98வது வகுப்பு | சேலம் 99வது வகுப்பு | சென்னை 100வது |
|---|---|---|---|
| **நாள்: 12.09.2015**<br>சனிக்கிழமை<br>**ரவி மினி ஹால்**<br>கலைஞர் அறிவாலயம் அருகில்<br>சத்திரம் பஸ்நிலையம்<br>திருச்சி - 2<br>**செல்: 96297 17671** | **நாள்:13.09.2015**<br>ஞாயிற்றுக்கிழமை<br>**மீனாட்சி மஹால்,**<br>10, மேல மாரட் வீதி,<br>opp.ஜங்ஷன்<br>மதுரை<br>**செல்: 96297 17671** | **நாள்: 19.09.2015**<br>சனிக்கிழமை<br>**ஸ்ரீ வாசவி சுபிட்ஷா ஹால்**<br>சுகவனேஸ்வரன் கோயில்<br>அருகில், சேலம் 636 001<br>**செல்: 96297 17671** | **நாள்: 20.09.2015**<br>ஞாயிற்றுக்கிழமை<br>**ஆஷா நிவாஸ்**<br>ரூட்லேண்டு கேட் 5வது<br>வீதி, எதிர்ல் தாஜ் ஹோட்டல்<br>நுங்கம்பாக்கம்<br>சென்னை 600 006,<br>**செல்: 96297 17671** |

குறிப்பேடு, காலை, மாலை தேனீர், மதிய உணவு உள்பட சேவைக்கட்டணம் ரூ.1500 மட்டுமே



**நடைமுறை "சூட்சும" ஜோதிடர்**

**Dr.G.பட்டாபிராமன்.Ph.d.,**

**தொடர்புக்கு: 96297 17671**

திருமண தசப் பொருத்த சூட்சுமங்கள் பாடபுத்தகம் இலவசமாக வழங்கப்படும்

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**கண்டிப்பாக தொலைபேசியில் முன்பதிவு அவசியம்**

**நூல் மதிப்புரை**

# ஞானம் அருளும் காலக்கண்ணாடி

T.G.பாலசந்திரன்,
வேத ஜோதிடர்
செல்: 94445 41239.



மனிதர்கள் வாழும் சூழ்நிலைகளும், சூழும் சந்தர்ப்பங்களும் நாளும் பாவ புண்ணியம் பறை சாற்றும் கர்மாவிற்கு காரண காரியம் கற்பிக்கும் விதியாகி விட அவ்விதியின் சூட்சுமத்தை விரிவாய் உதாரண ஜாதகங்களுடன் விளக்கும் அற்புத அனுபவக் கற்பகக் களஞ்சிய நூல்தான் "ஞானம் அருளும் காலக் கண்ணாடி" ஆகும். நவக்கிரகங்கள் ஆளும் பன்னிரு இராசிகளும் 27 நட்சத்திரங்களும் கூறும் விஞ்ஞானமும் பல கோடி மனிதர்களை வேறுபடுத்தி ஆளுக்கொரு கணக்கை கூறுபடுத்தி வைத்தாலும், தன் உபாசனை சித்தியாலும், பலகால தவ சக்தியாலும், தீவிர பக்தியாலும், தேர்ந்த அனுபவ யுக்தியாலும் குருமார்களின் அனுகிரகத்தாலும், ஸ்ரீஞான ஸ்கந்தப் பெருமானின் அருளாசியினாலும் தன் இறை ஞானத்தால் விதியான காலக்கண்ணாடியை ஒவ்வொரு ஜோதிடரும் அறிய, கற்றுத் தெரிய, உலகோர்க்கென "ஸ்ரீஸ்கந்த உபாசகர்" "ஜீவ நாடி கலையரசு" திரு.P.D.ஜெகதீஸ்வரன் அவர்கள் படைத்த பொக்கிஷம் தான் "ஞானம் அருளும் காலக்கண்ணாடி".

ஜோதிடம் பயில்வோர் பல அரிய, புதிய, நூல்களை வாங்கி கற்றுத் தெளிந்து, பல பயிற்சி வகுப்புகளில் பயின்று பார்த்து, புரிந்து, புலனாய்ந்தும் கூட பலன் கூறுவது மட்டும் வருவதில்லை என விழிப்போர் குறை தீர்க்க வாங்கி படிக்க வேண்டிய நூல்தான் "ஞானம் அருளும் காலக்கண்ணாடி" இந்நூலில் "திறமையான ஜோதிடரை உருவாக்கும் சூட்சும கிரக நிலைகள்" எனும் தலைப்பில் "ஜீவநாடி கலையரசு" அவர்கள் தெள்ளத் தெளிவாய் பலக்கோணத்தில் ஆய்ந்து, ஆராய்ந்து, உதாரண ஜாதகங்கள் மூலம் உறுதிபட விளக்கி, ஒருவர் ஜோதிடராகும் அமைப்பு எதுவென விவரிக்கிறார். ஜோதிடராக வரவேண்டி பலகாலம் முயற்சி மேற்கொள்வோர்கள் முதலில் தங்கள் ஜாதகத்தில் மேற்கூறிய அமைப்பு உள்ளதா என உறுதி செய்துக் கொள்ள உதவுவது தான் "ஞானம் அருளும் காலக்கண்ணாடி"

அறிமுகத்தின் திருமுகமாய் "கிரகங்கள் பேசுகின்றன" என்ற தலைப்பின் கீழ் அணிவகுத்து வரும் நவக்கிரகங்கள் கொங்கு தமிழ் எழில் கொஞ்சி தங்களை பற்றி தாங்களே பேசுவது போல கூறும் தகவல்கள் மிக எளிமையாக அருமையாக நவகிரகங்களை பற்றித் தெரியாத பல புதிய விஷயங்களை அறிய பெரிதும் உதவுகிறது.

பொதுவாக ஜாதகத்தில் மறைந்து இருக்கும் புலப்படாத மிக நுண்ணிய சூட்சுமமான விஷயங்களை சில ஜோதிடர்கள் ஆராயாமல் அஜாக்கிரதையால் கவனிக்காமல் தவற விடுவதின் விளைவு, நம்பி நாடி வரும் மக்கள் பல வேளைகளில் துன்பச் சகதியில் சிக்கி, எதிர்பாராத துயரச் சம்பவங்கள் நிகழ்ந்த பின்னே புலம்பும் துரதிஷ்டம் காண முடிகிறது. இக்குறையை நீக்கவே பல்லாயிரம் ஜாதகங்களில் உள்ள வேற்றுமையில் உள்ள ஒற்றுமையை கண்டு ஆராய்ந்து துள்ளிய பலன்களை சொல்லிட, மூல நூல்களில் கூறும் நெறிமுறைகளை வகுத்து வகைப்படுததியுள்ளார். திரு.P.D.ஜெகதீஸ்வரன்.




இன்றைய காலக்கட்டத்தில், கலி ஓட்டவேகத்தில் பொருளாதார மேன்மை ஒன்றே பொருட்டென கண்மூடித்தனமாய் ஓடும் மனிதர்கள் காணும் மனநெருக்கடி மற்றும் சிறு விஷயத்தை கூட சீரிய முறையில் நோக்காது அவசர கோலத்தில் அள்ளித் தெளிந்து எடுக்கும் முடிவுகளின் தவறுகளால் தத்தளிப்பவர்கள், உறுதியில்லா மனநிலையின் தேடும் இறுதியான முட்டாள்தனமான முடிவு

# வாழ்த்துரை வழங்கிய வள்ளல்கள்

எனது சீடன் ஸ்ரீ ஸ்கந்த உபாசகர் P.D.ஜகதீஸ்வரன் MCA,M.Phil., அவர்கள் ஞானம் அருளும் காலக்கண்ணாடி எனும் தலைப்பில் ஒரு புத்தகம் எழுதி வெளியிடுவது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தனது 18வது வயதில் ஜோதிடம் சொல்லத் தொடங்கி அந்த அனுபவங்களை அவ்வப்போது பல மாத இதழ்களில் எழுதி வெளியிட்டதைத் தொகுத்து இந்த புத்தகத்தில் தந்திருக்கிறார். இவரது 32ஆம் வயதில் மூன்று நூல்களை எழுதியிருக்கிறார் ஆனால் அதில் உள்ள கருத்துக்களைப் பார்க்கும்போது ஒரு 80 வயது உடைய முதிர்ந்த அனுபவம் அதில் இருக்கிறது எனில் நிச்சயம் அந்த முருகப் பெருமானின் ஆசிர்வாதம் தான் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆலயப்பணி, கல்லூரிப்பணி, பத்திரிகைப் பணி, ஆன்மிகப் பணி என பல்வேறு சேவைகள் செய்து வரும் இவர் இது போல் இன்னும் பல நல்ல நூல்களை எழுதி நாட்டு மக்களுக்கு இன்னும் பல சேவைகளைச் செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.



Dr. W. ஜோதி அக்பர் சாமி

உலகைக் காத்தருளும் பிரபஞ்ச சக்தியையும், நவக்கிரகங்களையும் போற்றி இவ்வாழ்த்துரையை துவக்குகிறேன். இதனால்தான் எத்தனையோ மகான்களையும் சித்தர்களையும் ஆன்மிக சக்திசாலிகளையும் கடவுள் தினமும் தன்னை நினைத்து, தன்னைப் போற்றி தன்னை வணங்க வைத்து, தன் பெயரைச் சொல்ல வைத்துள்ளார் போலும்! பலர் இந்த வரிசையில் இருந்தாலும், குறிப்பிட்ட சிலரை மட்டும் இறைவனே ஒரு குறிப்பிட்ட பணியில் ஈடுபடுத்துவதை, பிரத்யேகமாகக் காணலாம். இந்தக் காலக்கட்டத்தில் திருமிகு. P.D.ஜெகதீஸ்வரன் என்ற இளைஞரை, நாமாகிய ஆன்மிகப் பெரியோரும், ஜோதிடப் போராளிகளும், ஒரு முற்றிலும் மாறுபட்ட ஆன்மிக நாட்டமும், வாக்கு வன்மையும், இறை சக்தியும் நிறைந்த, பெரியோர் ஆசிதனைப் பெரிதெனக் கருதும் குணமும் நிறைந்த மாண்பு நிறை தெய்வப்பிறவியாய்க் காண்கிறோம். நெருங்கிச் சென்றவர்கள் இது முருகப் பெருமானின் அருள் அவர் மீது ஆசையுடன் அமர்ந்ததால் தான் என்பதை அறிவர். "ஞானம் அருளும் காலக் கண்ணாடி" இந்தப் புத்தகத்தில் சூட்சும பலன்கள், மிக வித்தியாசமான முறையில் காட்டப்பட்டுள்ளது.



குருவருள் நடராஜன்

ஸ்ரீ ஸ்கந்த உபாசகர் ஜீவ நாடி கலையரசு P.D.ஜெகதீஸ்வரன் அவர்கள் எழுதிய இராகு கேது பெயர்ச்சி பலன்கள், சனி பெயர்ச்சிப் பலன்கள், ஆங்கில புத்தாண்டு பலன்கள், தமிழ்ப் புத்தாண்டு பலன்கள் ஆகிய புத்தகங்களை திருவருள் சக்தி குருவருள் ஜோதிடம் ஆசிரியர் சித்தர் அடிமை ஸ்ரீ சி.இராஜீ என்னிடம் கொடுத்து அதை எழுதிய P.D.ஜெகதீஸ்வரன் அவர்களைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தார். அவரது புகைப் படத்தைப் பார்த்த உடனேயே மிகச் சிறிய வயது உடையவராகத் தெரிந்தாலும் நல்ல தேஜஸ் பொருந்திய முகமாக எனக்குப் பட்டதால் உடனே நான் சொன்ன வார்த்தை நல்ல சாமுத்ரிகா லட்சணம் பொருந்தியவர் இவர் என்பதுதான். ஸ்ரீ சி.இராஜீ அவர்கள் நானும் அடிக்கடி இந்த வார்த்தையை அவரிடம் சொல்லி இருக்கிறேன் இப்போது நீங்களும் அப்படியே சொல்கிறீர்கள் என்று அளவில்லாத ஆனந்தம் அடைந்தார். அதன் பின்பு P.D.ஜெகதீஸ்வரன் அவர்கள் எழுதி வருகின்ற கட்டுரைகளை வாசித்தேன், மிகச் சிறப்பான விஷய ஞானமும், ஆழமான ஆய்வுகளும் அதில் இருப்பது கண்டு உளம் மகிழ்ந்து வரும் வேளையில் ஞானம் அருளும் காலக் கண்ணாடி எனும் புத்தகத்தை அவர் எழுதியது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அந்த புத்தகத்தை எனது கரங்களால் வெளியிடுவதில் பெருமிதம் அடைகிறேன்.



பண்டித காழியூர் நாராயணன்

உங்கள் கைகளில் தவழ்ந்துக் கொண்டிருக்கும் "ஞானம் அருளும் காலக்கண்ணாடி" இப்புத்தகத்தை உருவாக்கி கொடுத்து உள்ளவர் "ஸ்ரீஸ்கந்த உபாசகர்" "ஜீவநாடி கலையரசு" P.D. ஜெகதீஸ்வரன் அவர்கள் பழகுவதற்கு இனியவர். பண்பில் சிறந்தவர். தன்னடக்கத்துடன் "திருவருள் சக்தி""குருவருள் ஜோதிடம்" வாசகர்களின் தேவையை தன்னலம் இன்றி பொது நலன் ஒன்றே புனிதத்தைக் கொடுக்கும் என்ற கோட்பாட்டையே கொள்கையாகக் கடைபிடித்து வருபவர். பொருளுக்கு ஆசைப்படாமல் இறைவன் அருளுக்கு அடிபணிபவர். ஆசை வார்த்தைக்கு ஆட்படாமல் அன்புக்கு தன்னை அர்ப்பணிப்பவர். வயது குறைந்தவர் ஆனாலும் கீர்த்தியில் உயர்ந்து ஓங்குபவர்.



படித்து பயன் பெறுங்கள் வாழ்வில் நன்மைகள் அனைத்தும் பெற்று நீங்கள் நலமுடன் வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம். துன்பங்கள் யாவும் நீங்கி இன்முகம் காட்டிடும் அன்புடன் ஆண்டவனை ஆராதிக்கின்றோம்.

சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜீ

தான் தற்கொலையாகும். வரும் துன்பம் நூறாயிரம் கோடியானாலும் பரவாயில்லை "சும்மா இரு" என அருணகிரியாருக்கு, அழகு வேலன், பாலமுருகன் தந்த தத்துவ மந்திர உபதேச மொழியின் சூட்சுமம் பல பிரச்சனைகள் ஏற்படும்போது நாம் அமைதி காத்து பொறுமையுற்றாலே, அது காலப்போக்கில் தானே காணாமல் மாயமாய் போகும். இது புரியாது வீணே உயிரை விடக் கூடிய அமைப்பு எதுவென தெளிவாய் "தன்னுயிரை தானே மாய்த்துக் கொள்ளும் ஜாதகங்கள்" என்ற தலைப்பில் தற்கொலை செய்துக் கொள்ளும் அமைப்பினை உதாரண ஜாதகங்கள் மூலம் உவகையுடன் விவரிக்கிறார் குடி குடியை கெடுக்கும் என ஊருக்கு கொடி பிடித்து பேருக்கு போராடி சாடுவோர் கூட திரைமறைவில் தினம் போதையில் பாதை மாறுவது சர்வசாதாரணமாகிவிட்டது. ஆணுக்கு பெண் சமமென முழங்கிய, புரட்சிகவி பாரதியின் ஒற்றை வார்த்தையை மட்டும் எடுத்துக் கொண்டு சில பெண்களும் வழிதவறுவதால் ஏற்படும் விபரீதம் தான் கொடுமை. போதை பழக்கத்திற்கு அடிமையாகும் அமைப்புகளை அழகாய் "போதை பழக்கம் பாதை மாறும் ஜாதகங்கள்" எனும் தலைப்பில் பலரும் பார்த்ததும் பலனறிய, பயனுற பாரோர்க்கு பறைசாற்றுகிறார். "திரு.P.D.ஜெகதீஸ்வரன்" அவர்கள்.

பெற்றோர்கள் தாங்கள் பட்ட கஷ்ட நஷ்டங்கள் தங்கள் பிள்ளைகள் படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் சகல விதமான வசதிகளும் செய்து தந்து ஆசைப்பட்ட செல்போன், லேப்டாப், பைக் என கேட்டது யாவும் கடனை உடனை வாங்கியாவது விரும்பிய கல்லூரியில் வேண்டிய படிப்பை கோரியபடி படிக்க அரும்பாடுபட்டு வைத்தாலும் உலகம் உணராத பிஞ்சுகள் கலகம் காணாத நெஞ்சில், நஞ்சாய் புகும் காதல், கத்தரிக்காயால் ஏற்படும் துன்பங்களால் சீரழியும் குடும்பங்கள் பல ஆயிரம். வளரும் வயதில் சுக்கிரன் ஆதிக்கத்தின் கீழ் வரும் செல்போன், லேப்டாப், பைக் மற்றும் இன்னும் பல ஆடம்பர விஷயங்கள் யாவும் எதிர்பாலரை ஈர்க்கும் சுக்கிரனின் காரகத்துவங்கள் என உணராத பெற்றோர்களின் அறியாமையால் பிள்ளைகளின் காதலால் ஏற்படும் அநியாய இழப்புகளை தடுக்க "விரும்பியனுடன் ஓடிபோகும் விபரித ஜாதக அமைப்பு" என்ற தலைப்பில் உதாரண ஜாதகங்கள் மூலம் தெளிவாய் ஜோதிடர்கள் உணர விரிவாய் விளக்கியுள்ளார்.

"மனதை ஆளும் மானசீக கிரகங்கள்" என்ற தலைப்பில் குணம் கெட்டு நாளும் திரிவோர் விதியாவும் மதியான மனதை ஆளும் சந்திரன் மற்றும் புத்தியை குறிக்கும் புதனின் பாதிப்பால் என்று 5ஆம் இட ஆராய்ச்சி மூலம் தசாபுத்தி தரும் அரிதான தெரியாத பல விஞ்ஞான விபரங்களை, கோச்சார சனிபகவானின் கோரங்களை மெய்ஞான முறையில் வரிசைப்படுத்துகிறார். பரிகாரங்கள் பலனளிக்காத காரணம் திரிகோண ஸ்தானமான 1,5,9ஆம் இடம் பாதிக்கப்பட்டு கெடுவதின் காரணமே என அரியத் தகவலை அற்புதமாக தந்துதவுகிறார். "ஆட்டி படைப்பது 6ஆம் இடமோ, 8ஆம் இடமோ" என்ற தலைப்பில் சஷ்ட அஷ்டஸ்தானங்களின் துஷ்ட பரிமாணங்களால் வரும் கஷ்டநஷ்டங்களை விவரிக்கிறார். திருமணம் யோகமாக நல்லதொரு குடும்பம் அமைய உறுதுணையாகும் 2ஆம் பாவப்பலன்களை "இல்லற பாவம் இயங்க வைத்திடும் சுபாவம்" என்ற தலைப்பில் "திருமண வாழ்வு திருப்புமுனையாகும் நிகழ்வு" யாருக்கு? என யாதார்த்தத்தை இயல்பாய் அடுக்குகிறார் திரு.ஜீவநாடி கலையரசு.

"ஸ்தானமும் கிரக காரக யோக நிலைகள்" என்ற தலைப்பின் கீழ் பல உபதலைப்புகள் கொண்ட ஆராய்ச்சி கட்டுரைகள் நவக்கிரகங்களின் இராஜயோக அமைப்புகளை விளக்குகிறது. புகழைத் தரும் 10ஆம் இட புதையல் தொழில்கள் என்ற தலைப்பின் மூலம் தொழில்கள் மூலம் பேரும் புகழும் பெற்றுத் தரும் அமைப்புகளை எடுத்துரைக்கிறார். இறுதியாய் மந்திரசித்திகள் அருளும் தந்திரயோக பிரயோகங்கள் தலைப்பில் சித்தர்களை பற்றியும் ஜீவ சமாதி மற்றும் அருட்சாதனங்களின் அருமை பெருமையை கூறும் கிரக நிலைகளை போற்றுகிறார்.

இப்படி தான் பெற்ற சகல விதமான ஞானத்தையும் காலக்கண்ணாடியான ஜாதகத்தை யாவரும் சரியாக பார்த்து பலன் கூறவேண்டும் என்ற நல்லதொரு எண்ணத்தில் தூய்மை உள்ளத்தில் படைக்கப்பட்ட நூல் தான் "ஞானம் அருளும் காலக்கண்ணாடி" இந்நூலின் சிறப்பு இதில் வெளியிடப்பட்ட ஏராளமான உதாரண ஜாதகங்களும் பளிங்காய் துலங்கும் விளக்கங்களும் தான். திரு. P.D.ஜெகதீஸ்வரன் அவர்கள் தன் அனுபவத்தில் பார்த்த ஜாதகங்களின் தொகுப்பை பெயர்களை வெளியிடாது விதியின் சாராம்சத்தை மட்டும் தந்துள்ளார். "ஞானம் அருளும் காலக்கண்ணாடி" ஜோதிடர்களின் அருட்பெரும் சொத்து கிடைக்கரிதான ஞானவித்து ஜோதிட அன்பர்கள் வாங்கி பயனுற்று வாக்குபலிதம் பெற வாழ்த்துக்கள்

**விலை ரூ.300/–**

மேலும் தொடர்புக்கு:

**அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்**

**நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.**
**போன்: 044– 2811 6770, செல்: செல்: 72999 21880** | Email: apsarapublications@gmail.com

நோய் வரும்முன் உணவே மருந்து ! நோய் வந்தபின் மருந்தே உணவு !

எல்லா உயிர்களும் இன்புற்றுஇருக்கவே யாம்ஒன்றும் அறியேன் பராபரமே !

உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும்
அடர்ப் பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே.

# M.S. ஹெர்பல்ஸ்

1 / 31, மாரியம்மன் கோவில் தெரு, கல்பகனூர் – 636 109, ஆத்தூர் Tk., சேலம் Dt. தமிழ்நாடு.

உலகிலேயே முதன்மையான மற்றும் தலைச்சிறந்த மருத்துவம் நமது சித்த மருத்துவம். சித்த மருத்துவத்தில் தலைச்சிறந்த பெரும் மருந்துகளான, **காலாந்தக கெளரி, லோகநாத பதங்கம், நவலோக செந்தூரம், நீலகண்டவாலை, பரிபூரணம், பஞ்சகல்ப செந்தூரம், மார்கண்டேய மெழுகு, இரசகந்தக பஸ்பம், கனகலிங்க கற்பூரமெழுகு** மற்றும் **முப்பு, குரு மருந்துகள்** மேலும் மூலிகைகளின் சத்துகளாகிய உப்புகளை எடுத்து அதை **கட்டு மருந்துகளாக்கி** நோய்களின் தன்மைக்கு ஏற்றவாறு சில நாட்கள், சில வாரங்களில் முழுமையாக குணப்படுத்தப்படும்.

## எமது நிறுவனத்தின் சிறப்பு

- நாள்பட்ட தோல் நோய்
- சரவங்கிவாதம், மூட்டு, தண்டுவடம்,
- இடுப்பு, கழுத்து வலிகள்
- குழந்தையின்மை, மகளீர் நோய்கள்
- அனைத்து ஆண்மை குறைபாடுகள்
- தீராத ஆஸ்துமா, சைனஸ், அடுக்குதும்மல்
- குடல்புண், சிறுநீரக கோளாறுகள்
- யூரியா, கிரேட்டின் அதிகரிப்பு
- யூரிக்ஆசிட் அதிகரிப்பு
- கண் குறைபாடுகள்
- ஹெப்பாடிடிஸ் B,C,வைரஸ்
- இரத்தக்கொதிப்பு
- வெள்ளைபடுதல், 9 வகையான மூலம்
- வெண்குஷ்டம், வெள்ளை தழும்புகள்
- அனைத்து வகையான புற்றுநோய்
- கொடிய வெட்டையான பாலியல் நோய்
- கருப்பை நீர்கட்டி, சதை கட்டி
- தலைமுடி பிரச்சனைகள்

**மற்றும் உள்ள அனைத்து நோய்களுக்கும் குரு பரம்பரை மூலமாக வரும் 100க்கு 100 குணமளிக்கக்கூடிய ஏந்தவித பக்கவிளைவுகள் இல்லாத பெரு மருந்துகளை கொண்டு சில நாட்கள், சில வாரங்களில் குணம் காணலாம்.**

**100க்கு 100 குணமளிக்கக்கூடிய குருபரம்பரை மூலமாக பல நூறு ஆண்டுகளாக கையாளப்பட்டு வந்த இம்மருத்துவ முறைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் நோக்கில், நேரடி செய்முறை பயிற்சி அளிக்கப்படுகிறது. மருத்துவர்கள் தொடர்பு கொண்டு பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவும்.**

## சித்த மருத்துவத்தின் இரகசியம்

பாகம் – 1

புத்தகம் – கலர் படங்களுடன்,
ஆய்வக சான்றிதழ்களின் எடுத்துகாட்டுடன்,
வீடியோ சிடியுடன் வெளிவர உள்ளது.
மருத்துவர்கள் தொடர்புகொள்ளவும்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க :**

சித்தாந்த ரத்தினம்
சன்மார்க்கி, குருபரம்பரை மருத்துவர்

**M. சுகவனேஸ்வரன்,** RAMP., SMP., B.A., D.Y.Ed., D.A.,

**Cell : 94438 53756** email : msherbalcare@gmail.com

# சுகம் தரும்

# ஸ்ரீ சுக்கிர பகவான்




ஜோதிடக் கலையரசி

**வசந்தா சுரேஷ் குமார்**

**போன்: 044–2498 0898**


இந்நிலவுலகில் பிறந்த ஆன்மாக்கள் அனைத்தும் முற்பிறவியில் செய்த புண்ணிய கைங்கர்யங்களுக்கு ஏற்றபடியே பட்டம், பதவி, வீடு, வாகனம், குடும்பம், செல்வ சுகம் என்று அமையப் பெறுகின்றன என்பது ஜோதிட விதி. அதன்படியே வாழ்வும் அமைகின்றது.

இருப்பினும் நாம் எல்லோரும் விரும்புவது வளமாக வாழ வேண்டும் என்பது தான். நம் சுகமான வாழ்விற்கு அவசியம் தேவையானவை உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இருப்பிடமும் என இம்மூன்றும் அவசியமாகின்றது.

கிரகம், இல்லம், குடில், மனை, வீடு என பலவாறாகப் போற்றப்படுவதும், வீட்டைக் கட்டிப்பார் என அக்காலத்திலேயே பெரியோர்களால் கூறப்பட்டதுமான இப்பழமொழியே இதன் பெருமையைக் கூறும்.

அத்துடன் வாகனம் வாங்கிப் பார் எனும் வாசகத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. இந்த நவீன காலத்தில் நம் அன்றாட அலுவல்கள் தடையின்றி நடைபெற வாகனமும் அவசியமாகின்றது.

இப்படிப்பட்ட அத்தியாவசியத்தேவைகள் நமக்கு கிடைக்கவும் நம் ஆசைகள், கனவுகள் என அனைத்து ஆசைகளும் நிறைவேற வேண்டுமெனில் உங்கள் ஜாதகத்தில் நவநாயகர்களில் அதிர்ஷ்ட எண்ணின் சொந்தக்காரரான சுக்கிரன் வலுபெற்றிருப்பது அவசியம். (உதாரணம்) ஒருவர் ஜாதகத்தில் இலக்கினாதிபதி ஆட்சியாகவோ (அ) உச்சம் பெற்று நின்றாலோ அவருக்கு ஆயுள் பலம் கூடுவதுடன் உணவும், உடையும் சிரமமின்றி கிட்டும்.



இதேபோன்று மிக அழகான, நவீனமான வீடும், வாகனயோகமும் இஃதன்றி செழிப்பும், புகழும், செல்வமும், நல்லோர்களின் நட்பு கிடைக்கவும், இல்லறம் இனிதே அமையவும், இசை, நாட்டியம், கவிதை, சினிமா போன்ற துறைகளில் சிறப்புடன் விளங்கவும் சுக்கிரபலம் தேவை. ஏன் சுக்கிரனின் பலம் அவசியம் தேவை என்ற எண்ணம் தோன்றுகின்றது அல்லவா? சுக்கிரன் எப்படிப்பட்ட பலம் உடையவர். அவரின் குணம், தன்மை, யோக பலன் அனைத்தையும் அறிய வாருங்கள் தொடருவோம்.

பிருகு மகரிஷியின் குமாரரான இவர்தன் புலன்களை ஒடுக்கி கடுந்தவம் புரிந்து சர்வேஸ்வரரால் அற்புதமான மந்திர உபதேசங்களைப் பெற்றவர். மிருத சஞ்சீவினி மந்திரத்தால் இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் ஆற்றல் பெற்றவர் இதனால் பார்கவன், வெள்ளி, வேதாங்க பாரகன், கவி, வேதன், பிரபு என பல பெயர்களை உடையவர்.

பனித்துளி, முல்லை, தாமரை போன்ற வெண்மை நிறமுடையவர். அசுரர்களின் குருவானவர். மழைக்கோள் இவர். சகல கலைகளுக்கும் காரகன் என்று போற்றப்படுகின்றார். அழகன், அழகு ரசிகன், விநோதம் புரிபவர். அனைத்துவிதமான இன்பங்கட்கும் வித்தானவர். காதலின் பிரதி—நிதி, கற்பனையின் ஊற்று, காவியமானவர். களிப்பூட்டுபவர், நறுமணம் இவரே.

மலர், மங்கை, அன்பு, ஆசை, நடனமங்கையர்களை உருவாக்குபவர். நாடகக் கலைஞர்களைத் தோற்றுவிப்பவர். மெல்லிசை நாயகன், வெண்திரைப்படத்திற்கு ஆதாரமாய்த் திகழ்பவர். யானைகள், குதிரைகள் இவற்றை விளங்க வைப்பவர், பெருந்தன்மை, ஒற்றுமை,

மதிப்பு, மாபெரும் அதிர்ஷ்டம் அனைத்திற்கும் சொந்தக் காரர் சுக்கிரனே யாவர்.

நம் உடலில் கண்களில் பிரதிபலிப்பவர். ஜனன உறுப்புகளை ஆட்சி செய்பவர். சிற்றின்பத்தை நுகரவைப்பவர். ஆண்பெண் உறவை பேணிக்காப்பவர். காதலில் வெற்றி தருபவர். அணிமணிகளால் அழகை சேர்ப்பவர். ஒரு பெண்ணின் இளம் வயதில் இவரின் திசை நடைபெறும் எனில் அவள் தேவலோக மங்கையாய் ஒளிவீசுவாள்.

ஓர் ஆணின் வாலிபப் பருவத்தில் இவரின் யோக திசை நடந்தால் மன்மதன் என அனைவராலும் போற்றப்படுவான். அழகான வீடு, கார், பங்களா, உல்லாசப் பயணம் என வாழ்க்கையில் வசதிகளை வாரி வழங்கும் ஆற்றல் கொண்டவர். இவருக்கு நிகர் இவரே ஆவார். ஏனெனில் திசைகளில் சுமார் 20 ஆண்டுகள் என பெரிய திசை இவருடையது.

நவரத்னங்களில் வைரம், ரத்தினமாகும். வெற்றி உலோக அதிபதியானவர் பரணி பூரம், பூராடம் இவரின் நட்சத்திரமாகும். இலட்சுமி, வருணன் போன்றோர் அதிதேவதைகளாவர்.

தன்னை பூஜிப்பவர்களுக்கு நன்மைகளை செய்யத் துடிக்கும் கிரகம் இவர். ஆய கலைகள் அறுபத்து நான்கின் சொந்தக்காரரான சுக்கிர பகவான் ஜாதகத்தல் 2,3,6,8,12 ஆகிய இடங்களில் ஆட்சி (அ) உச்சமாகவோ (அ) நட்புடனோ அமர்ந்திருக்கில் சிரமமின்றி சொந்தமான வீடு அமையும்.

பலம் பெற்ற சுக்கிரன் 1,4,7,9,10,11இல் நிற்பாராகில் நாடகம் நாட்டியம், சினிமா போன்ற கலைத்துறையில் மிகப் பிரபலமாய் எல்லோரும் பாராட்டும் வண்ணம் பிரகாசிப்பர். வெகுபலம் பொருந்திய சுக்கிரனின் திசையோ, புத்தியோ நடைபெறும் காலங்களில் மண் குடிசையில் வசிப்பவரையும், மாடி வீட்டில் கொண்டு சேர்க்கும் திறன் கொண்டவர்.

சிலருக்கு இளமையிலேயே சுக்கிரதிசை நடைபெறும். பால்ய சுக்கிரன் அதாவது இருபது வயதிற்குள் பலன் தருவது கடினம். இருபது வயதிற்குமேல் வரும் சுக்கிரதிசை பலன் தரும். இவரின் திசை நடைபெறும்போது அவர் எந்த இடத்தில் உள்ளார். ஜாதகரின் இலக்கினத்திற்கு சுபரா(அ) அசுபரா என்பதைப் பொறுத்தும், சுக்கிரனுடன் சேர்ந்துள்ள கிரகங்களைப் பொறுத்தும் பலன் அமையும்.

சுக்கிரன் தனது மித்ரரான புதனுடன் சேர்ந்து அமர்ந்திருப்பது நற்பலன்கள் கிட்டும். உதாரணமாக ஒருவர் மகர இலக்கினத்தில் பிறந்து 10ஆம் இடத்தில் சுக்கிரன், புதன் அமையப் பெற ஜாதகர் கலைத்துறையில், மிகப்பிரபல்யமாக, வெகு சிறப்புடன் அனைவரும் பாராட்டும் வண்ணம் பிரகாசிப்பார்.




உ

Govt. Reg. No. 571/2007

**திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளை**

**அனைவரும் சாப்பிட வாருங்கள்**

**சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலுக்கு தரிசனம் செய்யவரும் பக்தர்களுக்கு தினமும் மதியம் இலவச அன்னதானம்**

**மஹாளய பட்க்ஷ அமாவாசை சிறப்பு அன்னதானம்**

28.09.2015 திங்கள் முதல் 12.10.2015 திங்கள் வரை 15 தினங்கள் மஹாளய பட்க்ஷம். தாங்களின் மூதாதையர்களின் திதி நாளில் அவர்களின் ஆசீர்வாதம் பெற தோஷ பரிகாரம் செய்து இந்த நாளில் அன்னதானம் செய்வது சால சிறந்தது. இந்த அறிய பெரிய வாய்ப்பினை தவறவிடாமல் ஆண்டுக்கு ஒருமுறை வரும் இந்த தர்மகாரியத்தை செய்து ஆண்டு முழுவதும் தாங்கள் மூதாதையர்கள் கூடவே இருக்குமாறு ஒரு சிறந்த சக்தியை ஏற்படுத்தி கொள்ளுங்கள். உங்கள் மூதாதையர்களின் பெயர்கள் திதி தேதியை எழுதி உங்கள் பெயர்களை எழுதி முறையாக அனுப்பவும். அந்த நாளில் உங்கள் சங்கல்பத்தில் அன்னதானம் வழங்கி அதன் ஆசீர்வாத பிரசாதங்களை உடன் அனுப்பி வைக்கின்றோம்.

**1000 நபர்களுக்கு ரூ.50,000/-     100 நபர்களுக்கு ரூ.5,000/-     10 நபர்களுக்கு ரூ.500/-**

பச்சடி, பொறியல், கூட்டு, சாதம், சாம்பார், ரசம், வடை, அப்பளம், சித்ரான்னம், பாயசம், மோர், ஊறுகாய்

A/c Name: Thiruchitrambalam Annadhana Arakattalai
Bank: SBI Chidambaram Branch
Current A/C No: 30263863248,
IFSC Code: SBIN 0000823
Website:thiruchitrambalam.org
E-mail: santhanasubramani1969@yahoo.com
Twitter: navathandavam

Email ID:
anandhancdm2015@gmail.com



உடன் தொடர்புக்கு:
**சி.நவதாண்டவ தீக்ஷிதர்**
22/10 கீழ சன்னதி . சிதம்பரம்.
செல்: 93455 12976

சுக்கிரன், செவ்வாய் இணைந்து நிற்க ஜெனனமானவர்கள் இராணுவம், போலீஸ், தீயணைப்புத்துறையில் பணிபுரிபவராய் இருப்பார். மண், மனைகள் சேரும். மிகவும் கண்டிப்புடன் செயலாற்றுபவராய் திகழ்வார். ஸ்திர கிரகமான சுக்கிரன் தன் நட்பு வீடான மிதுனம், தனுசு, மகரம், கும்பம், மேஷம், விருச்சிகம் இவற்றில் நற்பலன்களையும், கடகம், சிம்மம் எனும் பகை வீடுகளில் சுமாரான பலனையும் தரக்கூடியவர்.

தான் இருக்கும் வீட்டிலிருந்து பிரதட்சணமாய் வலம் வருபவர். தன் பார்வை 7ஆம் வீடாகும். ரிஷபம், துலாம், மீனம் இவ்வீடுகளில் பிரத்தியேகமான நற்பலன்களை வாரி வழங்குவார்.

இராஜஸ குணம் கொண்ட சுக்கிரன் ஒவ்வொரு இராசியிலும் சுமார் ஒரு மாதம் சஞ்சரிப்பார். இவர் புளிப்பு சுவை பிரியர். அழகன் சுக்கிரன் வெண்மைப் பட்டு வஸ்திரப் பிரியன் மொழிகளில் மலையாள பாஷைக்கு அதிபன். விலையுயர்ந்த வைரத்தின் நாயகன். தூப தீபத்தில் வாசனை மிகுந்த இலவங்கம் இவருடையதாகும்.

உலோகப் பொருட்களில் வெள்ளியின் அதிபர் இவர். மனித உடலில் முக்கிய பங்கு வகிக்கும் மர்மஸ்தானம் இவருக்குரியதாகும் பெண் கிரகமான சுக்கிரன் கவர்ச்சியின் சொந்தக்காரர் ஆவார். இவரின் வாகனம் கருடன், குதிரை, மாடு (விமானம்) என்பர்.

தென்கிழக்கு திசையின் அதிபதியான இவர் அப்பு கிரகமாயும், அத்தி சமித்தாகவும், சிலேத்து நாடி கொண்டவராய், ஸ்திரகிரகமாய் இராஜாங்க கிரகமாய் பிரதட்சனமாய் வலம் வந்து நலம் புரிபவர். நம் வாழ்வில் வெகு சிறப்பாய், பிரகாசமாய், எல்லோராலும் பாராட்டும் வண்ணம் அமைய இலட்சுமி கடாட்சம் வேண்டும் அல்லவா? இவரின் அதிதேவதை இலட்சுமியாவார்.

சுக்கிரன் ஆட்சி (அ) உச்சம் பெற்று இலக்கினத்திற்கோ, சந்திரனுக்கோ கேந்திரத்தில் (1,4,7,10இல்) நிற்பது மாலவ்ய யோகம் எனப்படும். இப்படி அமையப்பெறின் நல்ல தோற்றம் உள்ள தேகமும், பேரும், புகழும், தனவானாய் வாழும் பாக்யம் அமையும். பஞ்சமதூபுருஷயோகங்களில் இது ஒன்றாகும்.

சுக்கிரன் இராகுவுடன் சேர்ந்து நிற்க இரகசிய முறையில் பண வரவும், தகாத உறவு உடைய வருமாகி, பெற்றோர்களைப் பிரிய நேரிடும். தலைமுறைவாய் வாழும் துர்பாக்யமான சந்தர்ப்பம் அமையும். சுக்கிரனுடன் கேது இணைந்திருப்பின் விதவையை திருமணம் செய்யும் கட்டாயமான சூழ்நிலையும், அயல் நாட்டில் வாழும் படியாகவும், சிலருக்கு சந்நியாசியாய் வாழும் நிலையும் உருவாகும்.

சுக்கிரன், புதன், செவ்வாய் இவர்களுடன் சேர்ந்தாலும் நல்ல பலன்களை அள்ளித் தருவார். செவ்வாயுடன் அமர்ந்திருப்பின் சுக்கிரமங்கள யோகம் எனப்படும். ஜாதகருக்கு மண், மனைகள் சேருவதும், தொழிலே அதன் மூலம் அமைவதும் (ரியல் எஸ்டேட்) என வாழ்க்கையில் திடீர் யோகங்களை எதிர்பாராமல் ஏற்படுத்தித் தரும் வலுவான கிரகம் இவரே.

இப்படிபட்ட அதிர்ஷ்ட யோகங்களை அள்ளித் தரும் சுக்கிரன் நம் ஜாதகத்தில் பலத்துடன் அமையவில்லையே என யாரும் வருந்தத் தேவையில்லை. பரிகாரங்கள் மூலம் சுக்கிரனின் அருட்பார்வை ஒரு துளி விழுந்தாலும் பட்டமரம் துளிர்க்கும். திடீர் அதிர்ஷ்டம் தேடிவரும். உள்ளம் சந்தோஷப்படும் படியாய் நற் சம்பங்கள் நடைபெறும்.

சுக்கிரனின் பார்வை கிட்ட பாலைவனம் சோலைவனமாகும். இல்லறம் இனிக்கும். இன்பம் பெருகும். ஆண், பெண் இருபாலரும் சுக்கிரனை பூஜிக்கலாம். எளிய பரிகாரங்களால் இவரின் கருணையைப் பெற முடியும். பொதுவான ஒரு கருத்து என்னவெனில் சுக்கிரனுக்கு சிவ பூஜை, சிவனை வழிபடுவதும், சிவனடியார்களை பேணுவதும் மிகவும் பிடிக்கும்.

பெண்கள் சுக்கிரவாரம் விரதமிருந்து அதிகாலை வாசனை திரவியங்களால் ஊதுபத்தி, சாம்பிராணிதூபம் வீட்டை சுத்தி செய்ய வேண்டும். திருவிளக்கு பூஜை செய்வது நன்று. பூஜையின்போது மஹாலட்சுமி அஷ்டகம், அஷ்டோத்ரம் ஸ்ரீலட்சுமி துதி, கனக தாராஸ்தோத்ரம், போன்றவைகள் கூறிய பின்பு தீப ஒளியில் அம்பாளை நமஸ்கரிக்க மிகவும் நற்பலன்கள் கூடும். மொச்சை சுண்டல் தானம் செய்வது சிறப்பு. வெண் தாமரை மலர்களால் அர்ச்சனை செய்வதும் மிகுந்த பலன் அளிக்கும்.

சுகாசினி பூஜை, சுமங்கலிபூஜை, குமாரிபூஜை என பல சுக்கிர பூஜைகள் உண்டு. பௌர்ணமி பூஜை, புஷ்ய பூஜை (பூசநட்சத்திரம்) பஞ்சமி பூஜை இவைகள் வாழ்க்கையில் இன்னல்கள் நீங்கி இன்பம் அளிக்கும் பூஜையாகும். அத்துடன் சுக்கிரன் பூஜித்த ஸ்தலங்கள், கும்பகோணம் அருகில் உள்ள கஞ்சனூர், சென்னையில் (மயிலை ஸ்ரீ வெள்ளீஸ்வரர் கோயில்) ஸ்ரீரங்கம் போன்ற ஸ்தலங்களில் சென்று வழிபட்டு பலன் பெறலாம். அவ்வாறு செல்ல இயலாத அன்பர்கள் தங்களின் ஊரில் அருகாமையில் உள்ள விஷ்ணு ஆலயங்களில் உள்ள தாயாருக்கு வெள்ளிக்கிழமை அன்று நெய் தீபமேற்றி, தாமரை மலர்களால் அர்ச்சனை செய்வதும் ஒரு வகையான வழிபாடேயாகும். அத்துடன் நவ கிரகங்களில் (சிவஸ்தலங்களில்) உள்ள — சுக்கிரனுக்கு வெள்ளியன்று நெய் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்வதும் நற்பலன் தரும். வாழ்வில் வறுமைகள் நீங்கி வளமான வாழ்வு அளிக்க ஸ்ரீ சுக்கிரனைத் தொழுவோம். சுகமான வாழ்வைப் பெறுவோம்.

# கனகதாரா வெல்த் கிரியேட்டர்ஸ்

பெருமையுடன் வழங்கும்

# செல்வ வளம் பெருக்கும் ரகசிய சூட்சும பயிற்சி

**( இதுவரை வெளிவராத புத்தம் புது செய்திகளுடன் )**

1. செல்வத் திருமகளின் அருளை பூரணமாக பெற செய்ய வேண்டிய பூஜை முறை மற்றும் ஸ்தலம் (ஆலயம்) பற்றிய அபூர்வ செய்திகள்
2. நிகரிலா செல்வம் பெற்று இந்திரனாய் வாழ அகத்தியர் அருளிய செல்வமணிமாலை எனும் திருமகள் ஸ்தோத்திரம் பிறந்த இடமும், பூஜை முறையும் பற்றிய செய்திகள்.
3. என்றும் நிலைத்த செல்வ வளம் பெற, செய்ய வேண்டிய குபேரலஷ்மி பூஜை பற்றிய அபூர்வ ரகசிய புது செய்திகள்.
4. செல்வ வளம் பெருக்கும் தனாகர்ஷன சக்கரம் அருளிய கொங்கண சித்தர் பெருமானை உங்கள் இல்லத்திலேயே எழுந்தருளச் செய்யும் ரகசிய பூஜை முறை
5. அலைமகளாம், திருமகளை நிலையாக உங்கள் இல்லத்தில் கொலுவிருக்கச் செய்யும் ஐந்துவித சூட்சும ரகசிய செய்திகள்
6. அன்னையர் அனைவரும் ஒரே இடத்தில் எழுந்தருளி, நமது அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றித் தரும் அபூர்வ ஆலயம் மற்றும் பூஜை முறைகள் பற்றிய ரகசிய தகவல்கள்.
7. பல நூறு வருடங்கள் வாழ்ந்து (ஆயுள்பலத்தினை அதிகரித்து) செல்வவளம் அனைத்தும் பெற செய்ய வேண்டிய அபூர்வ, ரகசிய பயிற்சி மற்றும் பூஜை பற்றிய செய்திகள்
8. சப்தமாதாக்களில் உங்களோடு இருந்து உங்களுக்கு அனைத்து வித அருளாசிகளும் தருவது யார் என கண்டறியும் ரகசிய பூஜை முறை பற்றிய செய்திகள்.

என இன்னும் ஏராளமான அபூர்வ, ரகசிய செய்திகளுடன். ஒரு வருட கால அவகாசத்திற்குள் பொருளாதாரத் தன்னிறைவை அடைய விரும்புவோர் அவசியம் தவறாது இப்பயிற்சியில் கலந்து நிச்சயம் பலன் காணலாம்.

பயிற்சி அளிப்பவர்: Dr. **பிருகு. பிரபாகரன்**

| அவினாசி | சென்னை |
|---|---|
| **27.09.2015 (ஞாயிறு)**<br>குலாளர் திருமண மண்டபம்,<br>அவினாசி, திருப்பூர் மாவட்டம்<br>**பயிற்சி கட்டணம் : ரூ.1,203/-** | **4.10.2015 (ஞாயிறு)**<br>சுகநிவாஸ், 5,6 லஸ் சர்ச் ரோடு,<br>மயிலாப்பூர், சென்னை- 4<br>**பயிற்சி கட்டணம்: ரூ.1,500/-** |

★ பயிற்சி நேரம்: காலை 9.30 முதல் மாலை 5.30 வரை

★ (பயிற்சி குறிப்பேடு, இருவேளை தேநீர், மதிய உணவு உட்பட)

★ அவினாசியில் நிகழ்ச்சிக்கு முதல்நாள் இரவு தங்கும் வசதி உண்டு

**மிகக் குறைந்த இருக்கைகளே இருப்பதால் அவசியம் முன்பதிவு செய்தல் நலம் தரும்**

தொடர்புக்கு : ஒருங்கிணைப்பாளர் **திரு. எஸ். சுந்தரராஜன்**

**97894 52737, 81900 90015**

**குறிப்பு: (15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு பயிற்சிக்கு அனுமதியில்லை)**



திருவருள் சக்தி
குருவருள் ஜோதிடம்
அப்ஸரா நாவல்
திருவருள் சக்தி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்
உலகம் முழுவதும் உலா வருகின்றன
நீங்களும் இதில் வலம் வாருங்கள்..!
INTERNET
eBOOK
100 % Absolutely FREE!
Get Instant Access Now!
APSARA PUBLICATIONS
Lesson of time - KARMA
So be good and do good" - Buddha
www.apsaraepublications.com

# வெற்றிக்கு வித்திட்டு

# வசியம் செய்யும் மூலிகைகள்



மூலிகை சித்தர்
**ஞானகுரு**
**செல்: 95002 19209**

பணம் பந்தியிலே குணம் குப்பையிலே என்று இருக்கும் இக்கலியுகத்தில் பணம் இல்லையென்றால் சிறு துரும்பும் அசைவதில்லை.

அப்படிப்பட்ட பணத்தை சம்பாதிப்பதற்கு பல வழிமுறைகளை நாம் அவரவர் தகுதிக்கு ஏற்ப கையாள்கிறோம். அதன் அடிப்படையில் போட்டி, பொறாமை, நீயா நானா? எனும் பகைமை அதனால் ஏற்படக்கூடிய வஞ்சகத்தன்மை மேலோங்கி பழிவாங்கும் நிலைமைக்கு நம்மை ஆட்படுத்திக்கொள்கிறோம். இதனைமுன் கூட்டியே அறிந்த பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த காகபுஜண்டர் எனும் முனிவர் அவரவரின் வாழ்க்கையை சமன்படுத்திக் கொள்ள வசிய மூலிகைகள் மூலம் பல பரிகாரங்கள் சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்.

**'செய்யும் காரியங்கள் ஜெயம் பெறவும்**
**பகைவரை பழி தீர்ப்பதை விட**
**பகைமை வராமல் காக்கவும்**
**விரோதிகளை வஞ்சிப்பதை விட**
**விரோதமே நிகழாமல் தடுத்திடவும்**
**போட்டி – பொறாமை ஏற்படுவதை விட'**

அவ்வாறு வராமல் காக்கவும். இன்னும் ஏராளமான துன்பம் தரும் காரியங்கள், நெருங்காத வண்ணம் — முன் கூட்டியே தடுக்கக்கூடிய சில மூலிகைகளின் இரகசியங்களையும் அதனை பயன்படுத்தும் முறைகளையும் விளக்கி உள்ளார். அதனை தாங்கள் முறையோடு செய்து வளம் பெற வேண்டுகிறேன். இதன் மூலம் உங்களது ஆயுட்காலம் வரையில் பல வெற்றிகளை பெற்று, செல்வாக்கு, செல்வத்துள் வாழலாம்.

வளர்பிறையில் பிறந்தவர்களுக்கு சில பலன்களும் தேய்பிறையில் பிறந்தவர்களுக்கு சில பலன்களும் என எல்லா பலன்களும் மாறுபட்டு இருப்பதால் தாங்கள் பிறந்தது வளர்பிறையா, தேய்பிறையை என அறிந்து உங்கள் பெயரின் முதல் எழுத்தை வைத்து நேரத்தை அறிந்து வசிய மூலிகைகளின் மூலம் பலன் பெறலாம்.

### 1. வெற்றிதரும் தச வசிய மூலிகைகள்

(குறிப்பு — இந்த மூலிகையை பயன்படுத்த விரும்புவோர் தான் பிறந்தது வளர்பிறையா? தேய்பிறையா? என கண்டிப்பாக தெரிந்திருத்தல் வேண்டும்)

### 1) அகர சப்த வசிய மூலிகை

அ, ஆ, க, கா, ங, ஙா, ச, சா, ஞ, ஞா, ட, டா, ண, ணா, த, தா, ந, நா, ப, பா, ம, மா, ய, யா, ர, ரா, ல, லா, வ, வா, ழ, ழா, ள, ளா, ற, றா, ன, னா, ஜ, ஜா, உற, ஸ, ஸா, க்ஷ, க்ஷா, ஃ, கை, ஙை, சை, ஞை, டை, ணை, தை, நை, பை, மை, யை, ரை, லை, வை, ழை, ளை, றை, னை, ஐ, ஸை, ஊற, போன்ற எழுத்துகளில் ஏதேனும் ஒரு எழுத்தை பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்கள்

**வளர்பிறையில் பிறந்திருந்தால்**

| | | |
|---|---|---|
| வசியமூலிகை | — அரைகீரை வேர் | |
| கவரும் உலோகம் | — பொன் | |
| ஈர்க்கும் திசை | — கிழக்கு | |
| விசேஷ கிழமை | — ஞாயிறு | — செவ்வாய் |
| யோக நேரம் | — காலை | — 8.45 முதல் 9.42 மணி வரை |
| (இரண்டு கிழமைக்கும்) | மாலை | — 4.54 முதல் 5.42 மணி வரை |

**தேய்பிறையில் பிறந்திருந்தால்**

| | | |
|---|---|---|
| வசிய மூலிகை | — குப்பைமேனி வேர் | |
| கவரும் உலோகம் | — வெண்கலம் | |
| ஈர்க்கும் திசை | — பூமியை தொட்டு வணங்கவும் | |
| விசேஷ கிழமை | — ஞாயிறு | — செவ்வாய் |
| யோக நேரம் | — காலை | — 10.30 முதல் 10.48 மணி வரை |
| (இரண்டு கிழமைக்கும்) | மதியம் | — 1.54 முதல் 2.12 மணி வரை |

### 2. இதர சப்த வசிய மூலிகை

இ, ஈ, கி, கீ, ஙி, ஙீ, சி, சீ, ஞி, ஞீ, டி, டீ, ணி, ணீ, தி, தீ, நி, நீ, பி, பீ, மி, மீ, யி, யீ, ரி, ரீ, லி, லீ,

வி, வீ, ழி, ழீ, ளி, ளீ, றி, றீ, னி, னீ, ஸி, ஸீ, உறி, உறீ, ஶ்ரீ, ஜி, ஜீ, போன்ற எழுத்துகளில் ஏதேனும் ஒரு எழுத்தை பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்கள்.

**வளர்பிறையில் பிறந்திருந்தால்**

வசிய மூலிகை — சிறுகீரைவேர்
கவரும் உலோகம் — வெள்ளி
ஈர்க்கும் திசை — தெற்கு
விசேஷ கிழமை — திங்கள் — புதன்
யோக நேரம் — காலை — 8.54 முதல் 9.42 மணி வரை
(இரண்டு கிழமைக்கும்) மாலை — 2.48 முதல் 3.36 மணி வரை

**தேய்பிறையில் பிறந்திருந்தால்**

வசிய மூலிகை — நாய்க்கடுகுவேர்
கவரும் உலோகம் — பொன்
ஈர்க்கும் திசை — கிழக்கு
விசேஷ கிழமை — வெள்ளிக்கிழமை
யோக நேரம் — காலை 9.54 முதல் 10.12 மணி வரை
(இரண்டு கிழமைக்கும்) மாலை — 3.18 முதல் 3.36 மணி வரை

**3. உகர சப்த வசிய மூலிகை**

உ, ஊ, கு, கூ, ஙு, ஙூ, சு, சூ, ஞு, ஞூ, டு, டூ, ணு, ணூ, து, தூ, நு, நூ, பு, பூ, மு, மூ, யு, யூ, ரு, ரூ, லு, லூ, வு, வூ, ழு, ழூ, ளு, ளூ, று, றூ, னு, னூ, ஜு, ஜூ, ஸு, ஸூ, உறு, உறூ, போன்ற எழுத்துகளில் ஏதேனும் ஒரு எழுத்தை பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்கள்.

**வளர்பிறையில் பிறந்திருந்தால்**

வசியமூலிகை — சாரணை வேர்
கவரும் உலோகம் — செம்பு
ஈர்க்கும் திசை — மேற்கு
விசேஷ கிழமை — வியாழக்கிழமை
யோக நேரம் — காலை 8.45 முதல் 9.42 மணி வரை
மாலை 2.48 முதல் 3.36 மணி வரை

**தேய்பிறை பிறந்திருந்தால்**

வசிய மூலிகை — அரைகீரை வேர்
கவரும் உலோகம் — வெள்ளி
ஈர்க்கும் திசை — வடக்கு
விசேஷ கிழமை — வியாழக்கிழமை
யோக நேரம் — காலை — 8.15 முதல் 8.36 மணி வரை
இரண்டு கிழமைக்கும் மாலை — 2.36 முதல் 2.54 மணி வரை

**4. ஏகர சப்த வசிய மூலிகை**

எ, ஏ, கெ, கே, ஙெ, ஙே, செ, சே, ஞெ, ஞே, டெ, டே, ணெ, ணே, தெ, தே, நெ, நே, பெ, பே, மெ, மே, யெ, யே, ரெ, ரே, லெ, லே, வெ, வே, ழெ, ழே, ளெ, ளே, றெ, றே, னெ, னே, ஜெ, ஜே, ஸெ, ஸே, உெற, உேற, போன்ற எழுத்துகளில் ஏதேனும் ஒரு எழுத்தை பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்கள்



**வளர்பிறையில் பிறந்திருந்தால்**

வசிய மூலிகை — தகரை வேர்
கவரும் உலோகம் — வெண்கலம்
ஈர்க்கும் திசை — வடக்கு
விசேஷ கிழமை — வெள்ளிக்கிழமை
யோக நேரம் — காலை 8.54 முதல் 9.42 வரை
மாலை 2.48 முதல் 3.36 மணி வரை

**தேய்பிறையில் பிறந்திருந்தால்**

வசிய மூலிகை — வேளை வேர்
கவரும் உலோகம் — இரும்பு
ஈர்க்கும் திசை — மேற்கு
விசேஷ கிழமை — திங்கள், சனி
யோக நேரம் — காலை 9.54 முதல் 10.12 மணி
(இரண்டு கிழமைக்கும்) வரை மாலை 1.24 முதல் 1.42 மணி வரை

**5. ஒகர சப்த வசிய மூலிகை**

ஒ, ஓ, கொ, கோ, ஙொ, ஙோ, சோ, ஞொ, ஞோ, டொ, டோ, ணொ, ணோ, தொ, தோ, நொ, பொ, போ, மொ, மோ, யொ, யோ, ரொ, ரோ, லொ, லோ, வொ, வோ, ழொ, ழோ, ளொ, ளோ, றொ, றோ, னொ, னோ, ஜொ, ஜோ, ஸொ, ஸோ, உொற, உோற, கௌ, கேள, ஙௌ, சௌ, ஞௌ, டௌ, ணௌ, தௌ, நௌ, பௌ, மௌ, யௌ, ரௌ, லௌ, வௌ, ழௌ, ளௌ, றௌ, னௌ போன்ற எழுத்துக்களில் ஏதேனும் ஒரு எழுத்தை பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டவர்கள்.

**வளர்பிறையில் பிறந்திருந்தால்**

வசிய மூலிகை — நங்கிலிவேர்
கவரும் உலோகம் — இரும்பு
ஈர்க்கும் திசை — பூமியை வணங்கவும்
விசேஷ கிழமை — சனிக்கிழமை
யோக நேரம் — காலை 8.54 முதல் 9.42 வரை
மாலை — 2.48 முதல் 3.36 மணி வரை

### தேய்பிறையில் பிறந்திருந்தால்

| | |
|---|---|
| வசிய மூலிகை | — அவுரி வேர் |
| கவரும் உலோகம் | — செம்பு |
| ஈர்க்கும் திசை | — தெற்கு |
| விசேஷ கிழமை | — புதன்கிழமை |
| யோக நேரம் | — காலை 8.18 முதல் 8.36 மணி வரை |
| மாலை | — 2.36 முதல் 2.54 மணி வரை |

### மூலிகையை பயன்படுத்தும் முறைகள்

1.மேற்சொன்ன மூலிகைகளை விதைகளின் மூலம் தனித்தனி தொட்டிகளில் வளர்த்துக் கொள்ள வேண்டும். (இல்லை என்றால் வயல் வெளிகளிலும், குப்பை மேட்டிலும் வளர்ந்திருக்கும் மேற்கண்ட மூலிகைகளை வேர் வெளியில் தெரியாத வண்ணம் மண்ணோடு சேர்த்து கொண்டுவந்து தொட்டியில் வைத்தும் பயிரிடலாம்.)

2. மூலிகையை பயன்படுத்த விரும்புபவர் வளர்பிறையில் பிறந்தவரா? அல்லது தேய்பிறையில் பிறந்தவரா என அறிந்து தெரிந்துக்கொண்டு அவரின் பெயரின் முதல் எழுத்தை வைத்து அம்மூலிகை உள்ள தொட்டியை தனி அறையில் வைக்கவேண்டும்.

3. மேற்கண்ட மூலிகையை பயன்படுத்த விரும்புபவர் அவர்க்கென்று கொடுக்கப்பட்டுள்ள கவரும் உலோகத்தால் தாயத்து வாங்கி வர வேண்டும். வசதி உள்ளவர் தங்கத் தாயத்து வாங்கி வரலாம். வசதி குறைவாக இருப்பின் சாதா தாயத்தையும் வாங்கிவரச் சொல்வதோடு, அவருக்கென்று கொடுக்கப்பட்டுள்ள விசேஷ கிழமைகளில் மஞ்சள், குங்குமம், பூ, பழம், வத்தி, தேங்காய், கற்பூரம், கொம்பு மஞ்சள் வாங்கிவரச் சொல்லி, அவர்க்கென்று கொடுக்கப்பட்டுள்ள யோக நேரத்தில் மூலிகை இருக்கும் தனி அறையில் நிர்வாணமாக அவர்க்கென்று கொடுக்கப்பட்டுள்ள ஈர்ப்பு திசையில் அமர்ந்து அம்மூலிகைக்கு மஞ்சள் பூசி, பொட்டிட்டு, பூச்சூடி, ஊதுவத்தி கொளுத்தி வைத்து காம்பு மஞ்சளால் அம்மூலிகைக்கு காப்பு கட்டி, தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி தீபாராதனை காட்டிக்கொண்டே

**"ஓம் சர்வ சக்தி மூலிகையே**
**உன் சாபம் நசிமசி**
**பரமசிவன் சாபம் நசிமசி**
**பார்வதி சாபம் நசி மசி**
**சப்தரிசிகள் சாபம் நசிமசி**
**ஏனையோர் சாபம் நசிமசி"**

என்று இருபத்தியோர் முறை சொல்லி முடித்தவுடன்,

**"சகலரும் எனக்கு வசி மசி**
**சகலமும் எனக்கு வசி மசி"**

என்று 21 முறை சொல்லி முடித்தவுடன் மூச்சை உள்ளுக்கு இழுத்தபடி அவரவர் தெய்வத்தை மனதில் நினைத்து இரண்டு கைகளால் ஆணிவேர் அறுபடாமல் மெதுவாக பிடுங்கி எடுத்து பக்கத்தில் வைத்துவிட்டு — பழையபடி துணிகளை கட்டிக்கொள்ளலாம். கொண்டு வந்த தாயத்துக்கேற்றபடி அம்மூலிகையின் அடிவேர் வெட்டி (இரும்பு அல்லாத ஆயுதத்தால் வெட்டவும் (அ) தாம்பூல தட்டால் வெட்டவும்) அந்ததாயத்துக்குள் அடைத்து, அவரவர்க்கென்று கொடுக்கப்பட்டுள்ள யோக நேரத்தில் அணிவிக்கவும்.

### இதனால் உண்டாகும் பலன்கள்.

பலரும் — பகைவரும் வசியமாவர். சகல காரியமும் வெற்றியாகும். ஆயுள் நீடிக்கும். ஆபத்தை தடுக்கும். படிப்படியாக குபேரனாக்கும் வல்லமையும். இம்மூலிகைக்கு உண்டு என்று காகபுஜண்டர் கூறுகின்றார். ஆயுள் முழுவதும் பயன்படக்கூடியது. ஆத்ம சுத்தம் தரக் கூடியது.

## இலவச ஜோதிட கருத்தரங்கம்

ஜோதிட சாப்ட்வேர் உலகில் சிறப்பான சேவைகளில் பணியாற்றி வருகிற ஆஸ்ட்ரோவிஷன், ஜோதிடர்களுக்கும் ஜோதிட மாணவர்களுக்குமாக செப்டம்பர் மாதம் 12 ஆம் தேதி சனிக்கிழமையன்று காலை 9.30 முதல் மாலை 6.00 மணி வரை நாமக்கல்,வி. வி மருத்துவமனை அருகிலுள்ள ஸ்ரீ மஹால் திருமண மண்டபத்தில் வைத்து, ஒரு நாள் ஜோதிட கருத்தரங்கம் நடத்துவதாக உள்ளது.

இந்த கருத்தரங்கில் பிரபல ஜோதிடர்களான திரு. K.S. **மணி பட்டாச்சாரியார்** —(ஸ்ரீ ஹரி ஜோதிட வித்யாலயம் நிறுவனர்)ஜாதக பலன் கூறுவதில் ராகு கேது மாந்தி முக்கியத்துவம் . திரு.எம்.வி. நரநாராயணன் (நிறுவனர், ஸ்ரீனிவாசன் பஞ்சாங்கம்—சேலம்)—ஷோடச வர்க்க சக்கரம் பலன்கள் **திரு. சிவகுமார்** (ஐங்கரன் ஜோதிட பயிற்சி நிலையம் —நிறுவனர்,நாமக்கல்)—பஞ்ச பட்சி சாஸ்திரம். திரு. **கீழவளவு சுப்ரமணியன்** (ஜோதிட அரசு ஆசிரியர்)—தோஷமும் பரிகாரமும் , என்ற தலைப்பில் சொற்பொழிவாற்ற உள்ளனர்.

இந்தியாவில் அனைத்து இடங்களிலும் ஜோதிட மாநாடு நடத்தி வருகிற ஆஸ்ட்ரோவிஷன் ஜோதிடத்தின் முன்னேற்றத்திற்கும், துல்லியமான கணிப்பிற்கும் ஜோதிடத்தின் முக்கியத்துவத்தை சாதாரண மக்களுக்கும் உணர்த்தும் வகையில் இந்த கருத்தரங்கம் நடைபெற இருக்கிறது. முற்றிலும் இலவசமான, இந்த ஜோதிட கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு 98410 46276, 97452 02222 இந்த எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

# அகத்தியருக்கு முருகன் காட்சி தந்த ஸ்தலம் சிவகிரி



4

அறந்தாங்கி சங்கர்

செல்: 9444 160161

திருநெல்வேலி மாவட்டம் சிவகிரியில் அமைந்துள்ள பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் — கிரஹ தோஷம் நீங்கவும் புத்திர தோஷம் நீங்கவும் முடக்கு வாதம் நீங்கவும் அருள் வழங்கும் அற்புத திருக்கோயில்

**தல வரலாறு**

முருகப்பெருமான், திருச்செந்தூரில் சூரபத்மனை வதம் செய்துவிட்டு, தெய்வானையை மணந்து கொள்ள திருப்பரங்குன்றம் திரும்பினார். அப்போது முருகனின் தரிசனம் காண விரும்பிய அகத்தியர் இத்தலத்திலுள்ள குன்றில் தவம் செய்து கொண்டிருந்தார். இவ்வழியே வந்த முருகன் குன்றின் மீது அகத்தியருக்கு காட்சி கொடுத்தார். அவரது வேண்டுதல்படி இங்கேயே எழுந்தருளினார். பிற்காலத்தில் இங்கு முருகனுக்கு கோயில் எழுப்பப்பட்டது. சூரபத்மனை போரிட்டு அழித்த முருகன் இங்கு பால வடிவில் காட்சி தருவதால், பாலசுப்பிரமணியர் என்று அழைக்கப்படுகிறார்.

**முருகன் பாதத்தில் நவக்கிரகம்**

இக்கோயிலில் முருகன், தனது ஜடாமுடியையே கிரீடம் போல சுருட்டி வைத்த கோலத்தில் காட்சி தருகிறார். இவரது பாதத்தில் நவக்கிரகங்களின் உருவம் பொறித்த தகடு வைக்கப்பட்டுள்ளது. கிரக தோஷம் நீக்குபவராக இவர் அருளுவதால், இவ்வாற வைத்துள்ளனர். இத்தகைய அமைப்பில் முருகனைக் காண்பது அரிது. தோஷம் உள்ளவர்கள் அந்த கிரகத்தின் ஆதிக்கம் உள்ள நாளில் முருகனை வழிபட தோஷம் நீங்குவதாக நம்பிக்கை. திருச்செந்தூர் முறையிலேயே, இங்கு சுவாமிக்கு பூஜை செய்யப்படுகிறது.

பொதுவாக கந்தசஷ்டி விழா 6 நாட்கள் நடக்கும். சில தலங்களில் திருக்கல்யாணத்துடன் சேர்த்து 7 நாட்களாக நடத்துவர். ஆனால் இக்கோயிலில் இவ்விழா 11 நாட்கள் நடக்கிறது. விழாவின் ஆறாம் நாளில் முருகன் குதிரை வாகனத்தில் எழுந்தருளி சூரசம்ஹாரம் செய்வது விசேஷம். மறுநாள் திருக்கல்யாணம் நடக்கிறது. 11ஆம் நாளன்று முருகனுக்கு தங்க கிரீடம் அணிவித்து, கையில் செங்கோல் கொடுத்து மகுடாபிஷேகம் செய்கின்றனர். அதன்பின்பு இவர் ராஜ அலங்காரத்தில் பட்டினப்பிரவேசம் என்னும் வீதியுலா செல்கிறார். இந்த திருவிழா இங்கு பிரசித்தி பெற்றது.

முருகன் வடிவில் சம்பந்தர்: குழந்தையாக இருந்தபோதே, அம்பிகையிடம் ஞானப்பால் அருந்தி அவளது அருள் பெற்றவர் திருஞானசம்பந்தர். இவரை முருகன் அம்சம் என்றும், இளைய பிள்ளையார் என்றும் சொல்வர். இத்தலத்தில் பங்குனி பிரம்மோற்ஸவத்தின் ஆறாம் நாளில் சம்பந்தருக்கு, அம்பாள் ஞானப்பால் கொடுத்த வைபவம் நடக்கிறது. அப்போது முருகனையே





சம்பந்தராக பாவித்து பால் கொடுக்கின்றனர் விழாவின் ஏழாம் நாளன்று இரவில் நடக்கும் முதல் கால பூஜையில் முருகன் சிவப்பு நிற வஸ்திரம் அணிந்து சிவன் அம்சத்துடனும் (சிவப்பு சாத்தி), இரண்டாம் காலத்தில் வெண்ணிற வஸ்திரம் அணிந்து பிரம்மா அம்சத்துடனும் (வெள்ளை சாத்தி), மறுநாள் அதிகாலை மூன்றாம் கால பூஜையில் பச்சை வஸ்திரம் அணிந்து திருமால் அம்சத்திலும்

(பச்சை சாத்தி) காட்சி தருவது விசேஷம் பங்குனி உத்திரத்தன்று சுவாமி தீர்த்த நீராடச்செல்கிறார்.

சோமாஸ்கந்த தலம்: சுற்றிலும் தண்ணீர், மலைகள் சூழ அமைந்த அழகிய தலம் இது கோயில் அமைந்துள்ள குன்று சக்தி மலை' எனப்படுகிறது. இதற்கு இடப்புறத்தில் சிவன் மலை உள்ளது. அதாவது சிவன், அம்பாளுக்கு நடுவே முருகன் சோமாஸ்கந்த வடிவில் இங்கு கோயில் கொண்டிருக்கிறார். முருகன் சன்னதிக்கு வலப்புறம் சுந்தரேஸ்வரர், இடப்புறம் மீனாட்சியம்மனுக்கும் சன்னதி இருக்கிறது.

இங்குள்ள உற்சவர் சண்முகர் பங்குனி பிரம்மோற்ஸவத்தில் ஏழாம்நாள், கந்த சஷ்டியின்போது திருக்கல்யாணம் மற்றும் இவ்விழாவின் 11ஆம் நாள் ஆகிய மூன்று நாட்களில் மட்டுமே கோயிலில் இருந்து வெளியேறி தரிசனம் தருகிறார். மற்ற நாட்களில் இவரை கோயிலுக்குள் மட்டுமே தரிசிக்க முடியும்.

கோயில் பிரகாரத்தில் தெட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, சண்டிகேஸ்வரி பைரவர் நவக்கிரகம், சனீஸ்வரர், அஷ்டபுஜ துர்க்கை, இடும்பன் சன்னதிகளும் இருக்கிறது. கோஷ்டத்திலுள்ள லிங்கோத்பவருக்கு தனியே சன்னதி அமைக்கப்பட்டுள்ளது. அருகில் பிரம்மா, சண்டிகேஸ்வரர் இருவரும் எதிரெதிரே இருக்கின்றனர். குன்றின் மத்தியில் காளியம்மனுக்கு தனிச்சன்னதி இருக்கிறது. காலை, சாயரட்சை (மாலை) பூஜையின்போது மட்டும் இவளுக்கே முதல் பூஜை செய்யப்படுகிறது.

பவுர்ணமி இரவில் இவளுக்கு விசேஷ பூஜை உண்டு. இத்தலத்தின் சிறப்பு நவக்கிரக முருகன். இங்குள்ள தல விநாயகர் அனுக்ஞை விநாயகர் எனப்படுகிறார் இங்குள்ள விமானம் ஏகதள விமானம்.

கிரக தோஷம், புத்திரதோஷம் நீங்க இங்கு வேண்டிக்கொள்கிறார்கள். முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு முருகனிடம் வேண்டிக்கொள்ள நோய் நிவர்த்தியாவதாக நம்பிக்கை.

அகத்தியருக்கு முருகன் காட்சி தந்த இடத்தில் பாத மண்டபம் உள்ளது. இங்கு முருகன் பாதமும், அருகில் லிங்கமும் உள்ளது.

காலை 6.30மணி முதல் 11.30 மணி வரை மாலை 4.30 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

ஆலய தொடர்புக்கு +91—4636 — 251 015, 99448 70058, 99448 73484

## ஜோதிடமுத்துகள்

ஞான காரகனாகிய கேது 12ஆம் இடத்தில் இருந்தால் மறு பிறவி இல்லை. இதுவே கடைசி பிறவியாகும். இதனால் பிற்காலத்தில் ஒரு கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்யும் பாக்கியமும் அடிக்கடி தீர்த்த யாத்திரை சென்று வரும் பாக்கியமும் ஏற்படும் மேலும் விட்டகுறை தொட்ட குறையாக முன் ஜென்மங்களில் விடுபட்ட ஒரு சில நல்ல கெட்ட பலன்களையும் இந்த ஜென்மத்தில் அனுபவித்து முடிக்க வேண்டும்.

---

இலக்கினத்திற்கு 7க்குறியவன் உச்சம் பெற்று 7ஆம் இடத்தில் சுக்கிரன் இருந்தாலும் அல்லது அந்த 7ஆம் இடத்தை சுக்கிரன் பார்த்தாலும் அந்த ஜாதகருக்கு பல தாரங்கள் ஏற்படுகின்றன.

---

இலக்கினத்திற்கு 4ஆம் இடத்தில் ஏதாவது பாவக்கிரகங்கள் இருந்து, 7ஆம் அதிபதியோடும் ஏதாவது பாவக்கிரகங்கள் சம்மந்தப்பட்டு இருந்தால் அந்த ஜாதகரின் நடத்தை சந்தேகத்திற்குரியதாகும். மேலும் 2.7.10க்குரியவர்கள் ஒன்று சேர்ந்து, 7ஆம் அதிபதி நீச்சம் பெற்றோ அல்லது பாவக்கிரகங்களுடன் சம்மந்தப்பட்டாலோ நடத்தை சந்தேகத்திற்குரியதாகும்.

---

7க்குறியவன் 8இல் இருந்து சுபக்கிரகங்களின் பார்வை இல்லை என்றாலும், செவ்வாய் வீட்டில் சுக்கிரனும் சுக்கிரன் வீட்டில் செவ்வாய் இருந்தாலும் (செவ்வாய் — சுக்கிரன் பரிவர்த்தனை) 7க்குறியவன் சனி அல்லது செவ்வாய் வீட்டில் இருந்தாலும் நடத்தை சந்தேகத்திற்குரியதாகும்.

---

பெண் ஜாதகம் இலக்கினம் ரிஷபமாகி, புத்திர ஸ்தானமான 5ஆம் இடத்தில் சூரியன் புதன் இராகு சுக்கிரன் கூடியிருந்தால், புத்திர பாக்கியம் தாமதமாகும் முதல் குழந்தை கருவிலேயே அழிந்து விடும்.

B. இராமசாமி

# கடன் தொல்லைகள் நீக்கி காத்தருளும்

# ஸ்ரீ நரசிம்மர்



கி. ஸ்ரீ முருகன் – செல்: 99411 17896

காத்தல் கடவுளான மகாவிஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களுள், மிகவும் சிறப்பிடம் பெறுவது நரசிம்மம். சிங்க முகமும் மனித உடலும் கொண்ட மாறுபட்ட தோற்றத்துடன் மகாவிஷ்ணு, புது அவதாரமாக நரசிம்மர் வடிவில் பக்தனுக்காக இறங்கி வந்தார். முதன்முதலில், கிருதயுகத்தில், ஆந்திர மாநிலம், கர்நூல் மாவட்டத்தில் கிழக்குத் தொடாச்சி மலையில், பவ நாசினி, நதிக்கரையில் இந்த அவதாரம் ஹிரண்யன் என்ற அசுரகுல மன்னனின் மகனான, சிறந்த விஷ்ணுபக்தனாக விளங்கிய பிரகலாதன் என்னும் சிறுவனுக்காக, நிகழ்ந்தது. பூமியில் வெறும் இரண்டு நாழிகைகள் மட்டுமே நீடித்திருந்து, தன் பக்தனின் வாக்கை காப்பாற்றி அவனுக்கு அருள்புரிந்து, எதிரியை அழித்து ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், மறைதல் ஆகிய அனைத்துப் பணிகளையும் செவ்வனே செய்து முடித்து, வைகுண்டம் திரும்பினான் நரசிம்மர்.

ஒப்பற்ற இந்த அரிய நரசிம்ம அவதாரம் நிகழ்ந்ததை அறிந்த ரிஷிகள் பலர், நரசிம்மரை தரிசிக்க இயலாமல் போயிற்றே என வருந்தினர். நரசிம்மத் திருவுருவைத் தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆவல் ரிஷிகளிடம் மேலோங்கிக் கொண்டே இருந்தது. அதன் காரணமாக மஹா விஷ்ணுவை நோக்கி தவம் புரியத் தொடங்கினார். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள். பிரகலாதனின் தாத்தாவும் ஹிரண்யனின் தந்தையுமான காசியப மகரிஷி, வருண பகவான், சகோஷன் முனிவர் முதலானோர். தவம்புரிய அவர்கள் தேர்ந்தெடுத்த பவித்ரமான ஷேத்திரம் ஷத்திரிய சிகாமணி நல்லூர், தட்சிண கங்கை என்று வியாஸ முனிவரால் போற்றப்பட்ட தாமிரபரணி நதியின் ஊட்டாறுகளுள் ஒன்றான, மிகவும் அழகான சித்ர(ா) நதிக்கரையில் தவபூமி அமைந்திருந்தது. தென்றல் வீசும் அந்த தவப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இடையறாது, கடுந்துவம் புரிந்தனர்.

ரிஷிகளின் கடுந்தவம் மஹாவிஷ்ணுவை தட்டி எழுப்பியது. அவர்களின் தவம்புரியும் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டிய தருணம் நெருங்கிவிட்டதை உணர்த்தினான். மறுகணமே ஸ்ரீ தேவி, பூதேவி தாயார்களுடன் நரசிம்மர் வடிவல் மஹா உக்ர மூர்த்தியாக காட்சி கொடுத்தார். நரசிம்மத்தை மனங்குளிர தரிசினம் செய்தனர். ரிஷிகள். தொடர்ந்தும் தரிசனம் செய்ய விரும்புவதாக, பகவானிடம் கூறியபோது, மறுபடியும் அவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்தார். ரிஷிகளுக்கு காட்சிகொடுத்த ஷேத்திரத்திலேயே நிரந்தரமாகக் குடிகொண்டுவிட்டார். பிற்காலத்தில் அர்ச்சாவதார் திருமேனியில் எழுந்தருளினார். காட்சி கொடுத்த இடத்திலேயே, நிரந்தரமாக குடி கொண்டிருக்கும். நரசிம்மர் ஸ்தலம் தனிச்சிறப்பு பெற்றது.

**சிம்ம கர்ஜனை செய்த நரசிம்மர்:** ரிஷிகள் சூட்சும வடிவில் தொடர்ந்து இன்றும் நரசிம்மரைத் தரிசனம் செய்து வருகின்றனர். ஆகவே ஆலயப்பகுதி எப்போதும் நிசப்தமாக உள்ளது. சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்புவரை சாயரட்சை வேளையில் கோயிலைச் சுற்றியுள்ள பகுதியில் சிங்க கர்ஜனை சத்தம் ஒலித்துள்ளது. அதன் மின் உடனடியாகபால் இளநீர் அபிஷேகம் முறையாக செய்யத் தொடங்கி நரசிம்மரை வழிபட ஆரம்பித்ததும் சிங்க கர்ஜனை நின்று விட்டது.

ஸ்தல புராண ரீதியாக ஆலயத்தோற்றம்பற்றி, அறுதியிட்டு கூறமுடியாத அளவிற்கு தன்மை வாய்ந்தது. எனினும் கல்திருப்பணி ரீதியாக, இடிந்து விழுந்த சுற்றுச் சுவரை சரிசெய்த ஆண்டின் அடிப்படையில் 1,100 ஆண்டுகளுக்கு முந்தையது இந்தக்கோயில். பலநூறு ஆண்டுகளுக்குப் பின், கடந்த 2012ஆம் ஆண்டு

மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது நடைபெற்ற புனர்நிர்மாணப் பணியின் போது பூமிக்கடியில் இருந்து சுமார் 41 கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

**சதுர்வேதி மங்கலம்:** இந்த கல்வெட்டுகளில் சடையவர்மன் ஸ்ரீ வல்லபதேவன், சோணாடு கொண்டருளிய முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் போன்ற மன்னர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது. மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி, விக்கிரம பாண்டியன் தான் ஆட்சிக்கு வந்த ஏழாவது ஆண்டில் இத்திருக்கோயிலுக்கு நித்ய பூஜைகளுக்கு நிலங்கள் வழங்கி வழபட்டுள்ளான். சோழர்கள் காலத்தில் இவ்வூர் ஷத்திரிய சிகாமணி நல்லூர் என்றும் சோழ மன்னனின் மனைவி அறிஞசிகைப் பிராட்டியின் பெயரால் அறிஞ்சிகை பிராட்டி சதுர்வேதி மங்கலம் என்றும் குறுமறை நாடு, முனைமோகர் பாகூர், சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

**16 திருக்கரங்கள்:** பாரதத்தில் மூன்று ஸ்தலங்களில்தான். 16 திருக்கரங்களுடன் நரசிம்மர் கோயில் கொண்டுள்ளான். ஓர் ஆலயம் இராஜஸ்தான் மாநிலத்திலும் இன்னொன்று பாண்டிச்சேரி அருகே சங்கர்குடி ஸ்தலத்தில் ஒரு சிறிய குன்றின் மீதும் மூன்றாவதாக கீழப்பாவூரில், சமதளபகுதியில் வயல்கள், தென்னந்தோப்புகள், சூழ்ந்த வேளாண்மைப்பகுதியில் எழுந்தருளியுள்ளான். எனவே, பக்தர்கள் எந்தவித சிரமமும் பயமும் தயக்கமும் இன்றி மிக அருகில் நின்று நரசிம்மரை கீழப்பாவூர் ஷேத்திரத்தில் வழிபடலாம்.

இங்கு இரு சந்நிதிகள் முன்னும் பின்னும் உள்ளன. கிழகு பார்த்த தனி சந்நிதியில் ஸ்ரீ அலர்மேல் மங்கா பத்மாவதி சமேத ஸ்ரீ பிரசன்ன வேங்கடாஜலபதி, நின்ற திருக்கோலத்தில் அபயஹஸ்த வரம் அளிப்பவராக காட்சி தருகிறார். இச்சந்நிதியை ஒட்டி பின்புறமாக, மேற்கு நோக்கி உள்ள தனி சந்நிதியில் 16 திருக்கரங்களுடன் நரசிம்மர் இரணியனை மடியில் கிடத்திதவம் செய்யும் நிலையில் திரிபங்க கோலத்தில் ரிஷிகரைக்கு காட்சி கொடுத்த வடிவில் வீற்றிருந்து, வரங்களை தருகிறார். இவர் மிகச்சிறந்த வரப்பிரசாதி என்பதை இங்கு தரிசனம் செய்த அனைவரும் உணர்வர்.

**தீர்த்த வலமும் நரசிம்மர் தீர்த்தமும்:** வேறெங்கும் காண முடியாத சிறப்பாக, இங்கு நரசிம்மர் சன்னிதி முன்பாகவே நரசிம்மர் தீர்த்தம் உள்ளது. பொதுவாகவே, ஆலயத்திற்கு ஈசான்ய திக்கில்தான் தீர்த்தக்குளம் அமைந்திருக்க வேண்டும் என ஆலய அமைப்பு விதிகளும் ஆகம சாஸ்திரங்களும் கூறுகின்றன. ஆனால், இந்த ஷேத்திரத்தில் மேற்கு திசையில் நரசிம்மர் சன்னதி முன்பாக அவரது சினத்தைத் திணிப்பதற்காக அமைந்துள்ளது, தனிச்சிறப்பாக விளங்குகிறது.

ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்திரத்தில், ஒவ்வொரு விஷ்ணு ஆலயத்தின் நான்கு திக்குகளிலும்




அகத்திய ஜோதிட விஞ்ஞானி
பி.எஸ். தேவராஜ்

# அகத்தியர் சித்தா மூலிகை மருத்துவம்

முற்றிலும் மாறுபட்ட சித்த மருத்துவ முறையில் பத்தியம் இல்லாமல் குறைந்த கட்டணத்தில்.
50 ஆண்டு அனுபவம் மிக்க சித்த மருத்துவ மாமணி இரா.சுப்பிரமணியம் அவர்களால்
குறைந்த கட்டணத்தில் நிறைந்த மருத்துவம் சேவை புரிகிறார்.



Dr.இரா. சுப்பிரமணியம்
அரசு பதிவு பெற்ற
மருத்துவர் பதிவு எண்: 1794

# குடியை நிறுத்த!

## குடிப்பவருக்கு தெரியாமல் கொடுக்கலாம்

**கை, கால், மூட்டு வலிகளை முற்றாக நீக்கி உடலுக்கு உரம் சேர்த்து மேனி எழிலை மேம்படுத்த சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நவமூலம், சொரியாசிஸ், நீரிழைவு, ஆண்மை குறைவு, ஆஸ்துமா. பெண்களுக்கு கர்ப்பப்பை கோளாறுகளை நீக்கி கர்ப்பம் தரிக்க சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.**

**ஆண்மை சக்தி பெருக, யாத்திரைக்கு இன்ப மாத்திரை ஒன்று ரூ.5/**

**பைல்ஸ் மற்றும் சர்க்கரை நோய்க்கு சிறப்பு சிகிச்சை**

**பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் நிரந்திர தீர்வு காணப்படும்.**

நெ. 13, எ. முத்தையப்பர் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030.
(பச்சையப்பன் கல்லூரி பின்புறம், நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)

**போன்: 044 - 2668 0381. செல்: 99403 42800**

நான்கு நதிகள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. அதன்படி கிழக்கே கங்கை, மேற்கு நர்மதை, தெற்கு — யமுனை, வடக்கு — சிந்து நதி ஆக கருதப்பட வேண்டும். இத்திருத்தலத்தில் மேற்கில் இருப்பதால் நர்மதை ஆகவும் நரசிம்மர் முகபாக உள்ளதால் தேவப்ராசீபடி கங்கை ஆகவும் கருதப்பட்டு இவ்வாறு ஒரே தீர்த்தம் நர்மதையாகவும் கங்கையாகவும் இருப்பது நரசிம்மர் தீர்த்தத்தின் சிறப்பு.

ஸ்ரீ நரசிம்மருக்கு எவ்வளவு ஸான்னித்யம் உண்டோ அதே ஸான்னியத்யம் இந்த தீர்த்தக்குளத்திற்கும் உண்டு. மகாலட்சுமி அம்சமாக, சதுர வடிவில் உள்ள இந்த தீர்த்தத்தின் மீது நரசிம்மரின் அருள்பார்வை எப்போதும் உள்ளது. அதனால்தான் சுவாதி, திருவோணம் ஆகிய நட்சத்திர நாட்களிலும் பிரதோஷம், வளர்பிறை சதுர்ததி செவ்வாய், புதன், சனி ஆகிய நாட்களில் மாலை வேளையில் தீர்த்தத்தை வலம் வரும் வைபமும் மிகச்சிறப்பாக இங்கே நடைபெறுகிறது. முறையே 3,7,9,12,16 என்ற எண்ணிக்கையில் ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ஹரே கிருஷ்ண ஹரே க்ருஷ்ண கிருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே என்ற மஹாமந்திரத்தை சொல்லிக்கொண்டே பிரதட்சிணம் ஆக வலம்வந்து வழிபடுகிறார்கள். இந்த திருக்குளம் தீர்த்த நீரைப் பருகினால், சரீரம் சம்பந்தப்பட்ட அனைத்து வியாதிகளும் நீங்கி, ஆத்ம பலம் ஏற்பட்டு, வாழ்வில் எல்லாவிதமான பேரின்பமும் அடையலாம்.



**சுவாதி பூஜை:** நரசிம்மர் அவதரித்த சுவாதி நட்சத்திரத்தன்று ஒவ்வொரு மாதமும் மாலை வேளையில் விசேஷ பூஜை நடக்கிறது. சுவாதி, வாயு பகவானின் நட்சத்திரம். வாயு எவ்வளவு வேகத்தில் வருகிறதோ, அதேபோல் நரசிம்மரை சுவாதி நட்சத்திரத்தன்று வழிபாடு செய்தால், வாயுவேகத்தில் வந்து நம்மை பாதுகாத்து அருள்புரிவார்.

சுவாதி நட்சத்திரத்தோறும், தொடர்ந்து நரசிம்மரை வழிபாடு செய்தால் ருணவிமோசனம் கிட்டும். அதாவது கடன் தொல்லைகள் நீங்கி, செல்வ செழிப்புகள் ஏற்படும், வியாபார அபிவிருத்தி ஏற்படும் என்பது. ஜோதிட சாஸ்திரங்களின் கருத்து. ஜாதகத்தில் இராகுவினால் ஏற்படும் பிரச்சனைகள் தடைகள் நீங்கி, நன்மை உண்டாகும். பில்லி, சூனியம் வாழ்வில் சகலவிதமான கஷ்டங்கள் நீங்கி, பரிபூரண நிலையை அடைந்திட வழிபாடு செய்திடுவோம்.

**வழிபடும் முறை:** நரசிம்மர் தீர்த்தத்தில் நீராடிவிட்டு, கன்னி விநாயகருக்கு முதல் மரியாதை செய்தபின் நரசிம்மரை வழிபடத் தொடங்க வேண்டும்.

ஆலயத்தினுள் நீராஞ்சனம் என்னும் நெய்தீபம் ஏற்றி 16முறை பிரதட்சிணமாக வலம் வந்து வழிபாடு செய்தால், பிரார்த்தனை விரைந்து நிறைவேறும். நரசிம்மருக்கு மிகவும் விருப்பமான வெல்லத்தினால் ஆன பானகம் அமுது செய்வித்தும் அருளைப் பெறலாம்.

நரசிம்மரை வழிபடுவதற்கு மாலை வேளையும் செவ்வாய், புதன், சனி ஆகிய நாட்களும் உகந்தது. வளர்பிறை சதுர்த்தி, பிரதோஷம், திருவோணம் ஆகிய நாட்களிலும் ஏகதின தீர்த்தவாரி (செப்24) புரட்டாசி சனிக்கிழமைகள், திருக்கார்த்திகை தைத்திருநாள், ஆகிய தினங்களிலும் விசேஷ பூஜை நடக்கிறது.

வேளாண்மைப் பகுதியிலுள்ள இந்த நரசிம்மரை வழிபாடு செய்தால் 1000 மடங்கு பலன் அதிகம் கிட்டும் என்பது ஐதீகம். நரசிம்மரை வழிபடுவோருக்கு பரமேஸ்வரன் — பண்வதிகை வழிபட்ட பலனும் கிடைக்கிறது.

திருநெல்வேலி தென்காசி நெடுஞ்சாலையிலே திருநெல்வேலியில் இருந்து மேற்காக 37கி.மீ. தொலைவிலும் தென்காசியில் இருந்து கிழக்காக 101கி.மீ. தூரத்திலும் உள்ளது பாவூர்சத்திரம் என்னும் ஊர், இங்கிருந்த 2கி.மீ. அருகில் சுரண்டை என்ற நகரத்திற்கு செல்லும் வழியில் அமைந்துள்ளது கீழப்பாவூர் இவ்வூரில் உள்ள சித்ர(ா) நதிக்கரையில் சிவாலயம் அமைந்துள்ளது.

நடை திறப்பு: காலை 8 மணி — 11.30 மணி
மாலை 5 மணி — இரவு 8 மணி
அர்ச்சகன் : இரா. ஆனந்தன் — 944423 30643


**கேள்விகள் கேட்க விரும்பும் வாசகர்கள் தங்கள் ஜாதக நகலுடன் பிறந்த தேதி, நேரம், இடம் மற்றும் தங்கள் முகவரி, தொலைபேசி எண்ணையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் திருவருள் சக்தி அலுவலக முகவரி கூப்பனை ஒட்டி அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.**

அனுப்பவேண்டிய முகவரி

**Astro தெய்வீகன் மாரிமுத்து ஜோதிட கேள்வி பதில்**

**திருவருள் சக்தி, 18/67, பி.வி. கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை இராயப்பேட்டை, சென்னை 600 014.**

விண்ணில் இருக்கும் முன்னோரே... மண்ணில் வந்து நிற்கும் நீவிர்... என்னால் இடப்படும் எள்ளும் நீரும் சேர்ந்திட வேணும்... நன்றாய் வாழ வாழ்த்துவீரே - நல்லருள் பெற வேண்டுகிறேன்!

**முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய மறந்தவர்களுக்கும், செய்ய தவறியவர்களுக்கும் பித்ரு பூஜை செய்ய ஏற்ற நாள் மஹாளயபக்ஷ அமாவாசையே. அன்றைய தினம் மாட்டுத் தொழுவத்தில் பித்ரு பூஜை செய்தால் வம்சாவழி தோஷம் நீங்கும். நமக்கு ஆயுள் பலமும் கூடும். முன்னோர்களுடைய பரிபூரண ஆசியும் ஆதரவும் அளவற்ற புண்ணியமும் நிச்சயம் கிடைக்கும்**


பசுமடத்தில் நடைபெறும் திலதர்ப்பணம்

# மஹாளய அமாவாசை - 12.10.2015

## முன்னோர் திருநாளில், முன்னோரை வழிபட்டு முன்னேற்றமடைவோம்

மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் திலஹோமம், திலதர்ப்பணம் மற்றும் பித்ரு தோஷ நிவர்த்திக்கான கோபூஜையில் கலந்து கொண்டு அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்.

மாத்ரு தேவோ பவ..! பித்ரு தேவோ பவ..! நமக்கு நல்வாழ்வு அளித்துச் சென்ற பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்வது நமது கடமையாகும். பித்ருக்களை திதி நாளில், திருப்திபடுத்தாத காரணத்தினால் தான் நமக்கு துன்பங்கள் வருகின்றன. மஹாளயபக்ஷ காலங்களில் பூலோகத்திற்கு தங்கள் சந்ததிகளை பார்க்க வரும் பித்ருக்கள், நாம் செய்யும் பித்ரு ஆராதனையால் திருப்தி அடைகின்றனர். எனவே பித்ருக்களை சாந்தப்படுத்த திலஹோமம், திலதர்ப்பணம் செய்வது அவசியம். பெற்றோருடன் வாழ்ந்த காலத்தில் அவர்களை சரியாக கவனிக்க முடியாமல் விட்டவர்கள் கூட, பித்ரு பூஜை செய்து வழிபட்டால், பித்ருக்களின் ஆசி கிடைக்கும். இதுவரை பிதுர் தர்ப்பணமே செய்யாமல் இருந்தால்கூட புண்ணியம் நிறைந்த மஹாளயபக்ஷ அமாவாசை நாளில் நம் முன்னோர் கடனை அளித்து, நல்வாழ்வு பெறுவோம். மஹாளயபக்ஷ நாளில் பித்ரு பூஜையை ஒவ்வொரு குடும்பத்திலும் செய்யவேண்டும் என்பதற்காக, **காஞ்சி ஸ்ரீ மகா பெரியவா ஆசியோடு,** திருவேற்காட்டில் உள்ள பசுமடத்தில் திலஹோமம் செய்து, வைதீக முறைப்படி மாட்டுத் தொழுவத்தில் பசுமாட்டினை முன்நிறுத்தி, ஸ்ரீசாளகிராமம் விஷ்ணு பாதம் முன் புனிதமான கங்கை நீர் கொண்டு திலதர்ப்பணம் மற்றும் பித்ருதோஷ நிவர்த்திக்கான கோபூஜை நடைபெறும். இதில் அனைவரும் கலந்து கொண்டு அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற்று, பிதுர் ஆசி, ரிசி ஆசி, குரு ஆசி, தேவ ஆசி பெறவும் அன்புடன் அழைக்கிறோம்.

வயது முதிர்ந்த, பால் வற்றிய பசுக்களை பசுமடத்தில் பாதுகாத்து பராமரிக்க தங்களால் முடிந்த கீழ்க்காணும் நன்கொடையை அனுப்புகிறவர்கள், யாருக்கு திதி செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி, கோத்திரம் போன்ற விவரங்களை தெரிவிக்கவும். அதன்படி திலஹோமம், திலதர்ப்பணம், கோபூஜை செய்யப்படும். மேலும் தங்களின் முன்னோர்கள் நினைவாக பசுமடத்தில் உள்ள **வயதான பசுக்களுக்கு அகத்தி கீரை, அருகம் புல், கருப்பு எள் உருண்டை, வெல்லம், வெண் பொங்கல், பச்சரிசி கஞ்சி, பழங்கள்** போன்றவைகளை உணவளித்து, அதன்பின் **வஸ்த்திரதானம்** மற்றும் **அன்னதானம்** நடைபெறும். மேலும் தங்கள் சார்பாக **தர்ப்பணம்** செய்யப்பட்ட **விஷ்ணு பாதம்** அனுப்பி வைக்கப்படும்.

ரூ. **200** - அனுப்பும் அன்பர்களுக்கு கோமாதாவின் அழகிய வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும்
ரூ. **500** - அனுப்பும் அன்பர்களுக்கு பித்தளையிலான பெருமாள் விளக்கு அனுப்பி வைக்கப்படும்
ரூ. **1,000** - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான ஸ்ரீ ராமர் பாதம் 2 அனுப்பி வைக்கப்படும்
ரூ. **1,500** - அனுப்பும் அன்பர்களுக்கு பித்தளையிலான காசி ஸ்ரீ அன்னபூரணி விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
ரூ. **2,000** - அனுப்பும் அன்பர்களுக்கு பித்தளையிலான லட்டு கிருஷ்ணர் விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
ரூ. **2,500** - அனுப்பும் அன்பர்களுக்கு பசுவும் கன்றும் சேர்ந்த வெள்ளியிலான விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
ரூ. **3,300** - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான துளசி மாடம் அனுப்பி வைக்கப்படும்
ரூ. **4,200** - அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான தவழும் கண்ணன் அனுப்பி வைக்கப்படும்
ரூ. **6,600** - அனுப்பும் அன்பர்களுக்கு ஒரிஜினல் வலம்புரி சங்கு அனுப்பி வைக்கப்படும்


பசுமடத்தில் நடைபெறும் திலஹோமம்

**நமக்கு நல்வாழ்வு அளித்து சென்ற முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று... நாட்டுப் பசுவும் கன்றும், காறாம் பசுவும் கன்றும், எருமையும் கன்றும் (மகிஷ தானம்) தங்கள் சார்பாக கோதானம் செய்யப்படும். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான சிவன் பார்வதி விளக்கும், பித்தளையிலான கோமாதா விக்ரஹமும், வெள்ளியிலான காசி ஸ்ரீ அன்னபூரணி விக்ரஹமும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.**

நாட்டுப் பசுவும் கன்றும் தானம் செய்தால்... ஜாதக ரீதியான தோஷம், தலைமுறை தோஷம், செய்வினை தோஷம், மாத்ரு, பித்ரு தோஷம், குல தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம, களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம், பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகி, தீர்க்க சுமங்கலி பாக்கியம், கணவன்-மனைவி ஒற்றுமை, புத்ர பாக்கியம், தடைபட்ட திருமணம், மறுமணம் செய்ய, குடும்பத்தில் குபேர சம்பத்து உண்டாகி மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். **கோதானம் செய்ய ரூ.12,000/-**

காறாம் பசுவும் கன்றும் தானம் செய்தால்... 7½ ஆண்டு சனி, அஷ்டமச் சனி விலகும். நவக்கிரஹ தோஷம், நாக தோஷம், ராகு-கேது, சந்திர தோஷம், ஆபிசார தோஷம், வாஸ்து தோஷம், எதிரிகள் தொல்லை, பணப் பிரச்னை, கிரஹங்களின் பாதிப்பு விலகி, வீடு, நிலம், பொன், பொருள், புகழ், கல்வி, நிகரற்ற செல்வம் மற்றும் சந்தான அபிவிருத்தியுடன் மகாலட்சுமி அருள் உண்டாகும். காறாம் பசு தானம் செய்ய **ரூ.12,500/-**

மகிஷ தானம் (எருமையும் கன்றும்) செய்தால்... நோய் பாதிப்பால் பயம், வாகன விபத்து, தீய சக்தியால் மன உளைச்சல், வியாபார நஷ்டம், உத்யோகத் தடை நீங்கும். கால ஸர்ப்ப தோஷம், பாப தோஷம் விலகி, வாழ்க்கை வளம், பதவி உயர்வு, சகல கார்ய சித்தி, குலவிருத்தி, கோத்ர விருத்தி, வம்ச விருத்தி, குடும்ப விருத்தி, ஆயுள் விருத்தி, உடல் ஆரோக்கியம், குடும்ப ஒற்றுமை, மனசாந்தி, ஆத்ம ஞானம் உண்டாகும். மகிஷ தானம் செய்ய **ரூ.13,500/-**



வாழ்வில் நல்ல துணையை பெறவும், பிரிந்தவர்கள் ஒன்றுசேர, மாணவர்கள் கல்வியறிவு பெருகவும், குழந்தைகளுக்கு வரும்நோய்களை தடுக்கவும், வாஸ்து குறைகள் நீங்கவும், ரியல் எஸ்டேட், வியாபாரத்தில் யோகம் பெறவும், குடிப்பழக்கம், தீயசக்தியை தடுக்கவும், செல்வ வளம் பெருகவும் வலம்புரி சங்கை வழிபடுவீர். முன்னோர்கள் நினைவாக ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து வளர்க்க ரூ. **6,600/-** அனுப்புவோருக்கு ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யாவால் மஹாளய அமாவாசை அன்று பசுவிற்கு அபிஷேகம் செய்யப்பட்ட மனதை வளமாக்கும் வலம்புரி சங்கு ஒன்று அனுப்பி வைக்கப்படும்.

**நன்கொடை அனுப்பும் அன்பர்கள் தங்களின் பெயர், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். ரசீதும், மேற்கண்ட பிரசாதங்களும், சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு அனுப்பி வைக்கப்படும்.**



தங்கள் நன்கொடையை **CHEQUE /D.D/M.O** ஆக **SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI** என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். நன்கொடைகளுக்கு **80G** பிரிவின்படி வரி விலக்கு உண்டு

# பசுமடம்

**(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)**

● வயதான பசுக்களை பராமரிக்கும் இல்லம் ● ஆதரவற்ற பசுக்களை பாதுகாக்கும் இல்லம் ● ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பேணும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77. © **044-3299 9888, 8754 555 555**



**தங்கள் முன்னோர்களின் நினைவு நாட்களில் தங்கள் சார்பாக திலதர்ப்பணமும், பித்ரு தோஷ நிவர்த்திக்கு கோபூஜையும் செய்யப்படும்**

# பழமொழிகள் உணர்த்திடும் வாழ்வின் வழிமுறைகள் ②



எல்.என். விஜயசாரதி அய்யங்கார்
செல்: 90035 86186/ 93446 05966

**28. "கண்டவர் விண்டிலர்; விண்டிலர் கண்டிலர்"**

**பொருள்;** விஸ்வரூபம் அல்லது ஏக ரூபத்தில் இறைவனைக் கண்டவர்கள் வாய் பேசாது மவுன நிலையில் இருப்பர். காரணம், உடல் எங்கும் ஏற்பட்ட பரவச உணர்வை, வெறும் வாய்ச்சொல்லால் பிறருக்கு விளங்க வைக்க முடியாது என்பதனால், இதையே கண்டவர் விண்டிலர் என்கின்றனர். இறைவனை என்றுமே காணாதவர், இறைவனைப் பற்றி எதுவும் பேசமுடிவதில்லை என்பது விண்டவர் கண்டிலர் என்பதாம்.

**29. "தலைச்சனுக்கு, தலைச்சன் ஆகாது"**

**பொருள்:** முதல் வாரிசாக பிறந்த பையனுக்கும், முதல் வாரிசாக பிறந்த பெண்ணுக்கும் திருமணம் செய்து வைக்கக் கூடாது. இது தவறான முற்றிலும் தவறான கருத்து. ஏனெனில், எந்தவிதமாக பிறந்தால் கூடாது என்பதே முக்கியம். மணமகனும் ஆனி மாதம் பிறந்து, மணமகளும் ஆனியில் பிறந்திருந்து, முகூர்த்த மாதமும் ஆனி மாதமாக இருப்பின் கூடாது என்க. குடும்ப வாழ்வு பாதிப்பு, சுக பாதிப்பு, வாரிசு இல்லை. இதனை "த்ரி ஜேஷ்டை" என்பர். ஜேஷ்டை என்பது மூத்தது, த்ரி என்பது "3" ஆகும்.

**30. "மூத்தது கோழை; இளையது காளை"**

**பொருள்:** பக்குவம் இல்லாத நிலையில் பெற்றோருக்கு பிறக்கும் முதல் குழந்தை முரடனாக, முட்டாளாக, பரம்பரை சாபம் உள்ளவனாக பிறக்கும். மோழை என்பர். 2வதாக பிறக்கும் குழந்தை பக்குவத்திற்கு வந்த பெற்றோருக்குப் பிறப்பதால் புத்திசாலியாக, வெற்றியாளனாக, அழகான உடலமைப்புடன் இருப்பதை காளை என்பர். மூத்த வாரிசுக்கு வெளிஉலக அனுபவம் கிடைக்க பெற்றோர் அனுமதிப்பதில்லை. இளைய வாரிசுக்கு அனுமதி கிடைப்பதால் பிரகாசிக்க முடிகிறது.

**31. "நாள் செய்வதை, நல்லோர் செய்யார்"**

**பொருள்:** எதைச் செய்தாலும் நாள், நட்சத்திரம் பார்த்துச் செய் என்பர் பெரியோர். நல்ல நாள் எனினும் இராகு காலம், எமகண்டம் தவிர்த்து கார்யம் செய் என்பர். நல்லோரின் ஆசிர்வாதம், உதவி ஆகியவற்றை விட மேலானது நேரம், நாள், நட்சத்திரம் கொண்ட பஞ்சாங்கம்.

**32. "மூலம் – மாமனார்க்கு ஆகாது, ஆயில்யம் – மாமியார்க்கு ஆகாது, கேட்டை – கணவனின் அண்ணனுக்கு ஆகாது, விசாகம் – கணவரின் தம்பிக்கு ஆகாது.**

**பொருள்:** இவ்வகை தோஷம் பெண்களுக்கு மட்டுமே பொருந்தும். ஆணிற்கு கிடையாது. ஞாயிற்றுக்கிழமை மூலத்தில் பிறந்த பெண்ணுக்கு 4 பாதங்களில் எதுவாயினும் தோஷமுண்டு. பொதுவாக மூலம் 1ஆம் பாதம் மட்டுமே தோஷம் தரும். அடுத்து ஆயில்யம் 1ஆம் பாதம் மட்டுமே தோஷம். அடுத்து கேட்டை 1ஆம் பாதம் மட்டுமே தோஷம். அடுத்து விசாகம் 4ஆம் பாதம் விருச்சிகஇராசி மட்டுமே தோஷம். இருப்பினும், ஜாதகத்தில் சந்திரன் — குரு (அ) சுக்கிரனின் சேர்க்கை அல்லது பார்வை பெற்றிடின் மேற்கண்ட தோஷம் விலகிவிடும். இன்னுமோர் விதிவிலக்காக: பெண்ணின் தோஷம் விலகிவிடும். மாமியாரைக் குறிப்பிடும். 3ஆம் இடம் மாமனாரைக் குறிப்பிடும். 5ஆம் இடம் கணவனின் அண்ணனைக் குறிப்பிடும். 9ஆம் இடம் கணவனின் தம்பியைக் குறிப்பிடும். மேற்கண்ட வீடுகள், அதன் அதிபதிகள் பலமாக இருப்பின் நட்சத்திர தோஷம் பாதிக்க வாய்ப்பில்லை.

**33. "நாளும், கோளும் நலிந்தோர்க்கு இல்லை"**

**பொருள்:** அன்றாட வாழ்வில் உணவு, உடை, இருப்பிட நிலை, பிழைப்பு போராட்டமாய்ப் போன நலிந்தோர்க்கு ஜாதகப் பலன் அறிதல், நல்ல நாள் பார்த்தல் ஆகியவை சாத்தியப்படாது (சரிவராது) இக்கருத்தால் உங்கள் மனம் புண்படின் மன்னிக்கவும்.

**34. "சுவாதி சுக்கிரன் ஓயா மழை" அல்லது "ஐப்பசி மாதம் அடைமழை பெய்யும்".**

**பொருள்:** சூரியன் நிற்கும் வீட்டிற்கு முன்னர் உள்ள வீட்டில் சுக்கிரன் சஞ்சரிக்கும்போது மழை பெய்யும். சூரியனின் பலமான இராசிகளில்

நின்றால் விட்டு விட்டு பெய்யும் திடீர் மழை ஆக இருக்கும். ஆனால், நீச்ச வீட்டில் (முற்றிலும் பலமிழந்த நிலை), அதாவது துலாம் இராசியில் சூரியன் நிற்கும்போது (வெப்பம் குறைவு) இராகுவின் நட்சத்திரமான சுவாதியில் சுக்கிரன் அமரும்போது பெய்யும் மழை இடைவிடாது பெய்யும் அடைமழையாக இருக்கும் என்பதையே மேற்சொன்ன பழமொழிப்படி சொல்வர்.

**35. "யானை அசைந்து தின்னும்; வீடோ அசையாமல் தின்னும்"**

**பொருள்:** யானையைக்கட்டி வைத்து தீனி போட நம்மால முடியாதப்பா எனச் சொல்வதுண்டு. கோவில்தான் சாத்தியம். யானை பெரிய உயிருள்ள உருவமாய் அசைந்து தின்கிறது. நாம் கட்ட ஆசைப்படும் அசையாத சொத்து வீடோ; அஸ்திவாரம் போடும் நாளிலிருந்து, கிரகப்பிரவேசம் செய்யும் வரை மட்டுமின்றி மெயின்டனென்ஸ் என்கிற வகையில் வருடாவருடம் நாம் தேடும் பணத்தை தின்கிறது.

**36. "மூலம் அரசாளும், மகம் ஜகம் ஆளும்"**

**பொருள்:** 12 இராசிகளை மூன்று டிவிசன்களாக பிரித்து, முதல் இராசிகளான மேஷம், சிம்மம், தனுசினை அக்னி இராசிகள் என்பர். முதல் நட்சத்திரங்களான அஸ்வினி, மகம், மூலம் நவக்கிரகங்களில் முதன்மையான கேதுவுக்கு உரியது. தலைமைப்பதவி விரும்பும் இந்த நட்சத்திரக்காரர்கள் பிறர் சொல் கேட்பதில்லை. 7ஆம் எண் கணபதி ஆகியன கேதுவுக்கு உரியது. ஆண் இராசி, ஆண் மிருகம் என்பதால் இந்த நட்சத்திரக்காரர்கள் குடும்பத்திற்கோ, வெளி உலக மனிதருக்கோ தலைவணங்காது, நாடாளும் தலைவனாக, தளபதியாக மாறிடுவர். ஜாதகக் கட்டத்தில் சூரியனுக்கு நேர் 7இல் சந்திரன் பௌர்ணமி யோகத்துடன் அமர வேண்டும். பாவிகளான இராகு, கேது, சனி தொடர்பு கூடாது. சுபர்களின் பார்வை நல்லது. கோண, கேந்திரங்கள் மிக நல்லது. வெறும் நட்சத்திரத்தில் பிறப்பது மட்டுமே பயனில்லை. உதாரணம், மாசி மகம் — தமிழக முதல்வர் ஜெ. அவர்கள். ஆனி மூலம் — சரத்குமார், நடிகர். ஆனால் சரத்துக்கு ஜாதகத்தில் இராகு — கேது சேர்க்கை யோகம் நஷ்டம் ஆனது.

**37. "பட்சி தெரிந்தவனை பகையாதே"**

**பொருள்:** பட்சி சாஸ்திரம் என்பது அவரவர் நட்சத்திரத்தின்படி சொல்லப்பட்ட பட்சிகள் (பறவைகள்) எவையோ, அவற்றின்படி அவைகளின் தினசரி பழக்கவழக்கங்களின் நேரம் அறிந்து அந்த நேரத்தில் குறிப்பிட்ட ஜாதகரை உயர்த்தவோ, வீழ்த்திடவோ முடியும். திருடர்களுக்கு நன்கு பயன்படும் இச்சாஸ்திரத்தை அறிந்த "சாத்திரவாதிகளை நேருக்கு நேர் பகைத்து துன்பப்படாதே" என்பது பெரியோர் வாக்கு.

**38. "பத்தில் ஒரு பாவியாவது இருக்க வேண்டும்"**

**பொருள்:** ஜாதகக் கட்டத்தில் இராசிச் சக்கரத்தில் இலக்கினம் எனப்படும் முதல் வீட்டிற்கு, 10ஆம் வீட்டில் இயற்கைப் பாபிகளான சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது ஆகிய ஐவரில் ஒருவராவது இருக்க வேண்டும். 10இன் அதிபதி கெட்டாலும், 10இல் நின்ற கிரகம் (பாபி) ஜாதகரின் பிழைப்பிற்கு வழிவகுக்கும். ஆசைப்பட்ட வேலை இல்லை எனினும், மாற்றுவேலை கிடைத்து வெளியூர் சென்றாவது ஜாதகர் தனது சுயவருமானத்தில் வாழ்க்கையை நடத்தலாம்.

**39. "அமாவாசை நிறைந்த நாளா?"**

**பொருள்:** பெரும் தவறான கருத்து ஆகும். தேய்பிறையில் கடைசி நாள் மற்றும் சந்திரனின் கதிர்வீச்சு முழுமையாக இல்லாத நாள் என்பதால் சுபகாரியத்துக்கு ஆகாது. இறந்தோர்க்கு திதி கொடுக்கவும், பில்லி சூன்ய ஏவல் காரியங்களுக்கும், திருட்டுச் செயலுக்கும் உகந்த நாள் தானே தவிர, நல்ல காரியங்களுக்கு கூடாது.

**40. "கேட்டை கோட்டை கட்டும்"**

**பொருள்:** விருச்சிக இராசி, கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தோர், மனதில் கற்பனைக் கோட்டை நிறையவே கட்டுவார்கள். அப்துல்கலாம் (ஜனாதிபதி) சொன்னது போலவே நிறைய கனவு காண்பர். நிறையவே உணர்ச்சிவசப்படுதல், (பிராக்டிகல்) நடைமுறை யதார்த்தம் உணராத தன்மை, செய்யும் செயலின் மறுபக்கம் அறியாமை, தகுதிக்கு மேலான ஆசை உடையவர்கள் என்பதால் கட்டுகின்ற மனக்கோட்டை, மண்கோட்டையாய் எளிதில் அழிந்து விடும். சந்திரன் நீச்சம் பெறும், காலபுருஷனின் 8வது இராசி என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

**41. "பூராடம் நூலாடாது, மேலும் போராடும்"**

**பொருள்:** இது பெண்களுக்கு மட்டுமே பொருந்தும். இதில் பிறந்தோர் நல்ல நிறம், அழகு உள்ளவரே. நூலினால் செய்யப்படுவது தாலிக்கயிறு. ஆடாது என்பது தாலி நிலைக்காது எனும் பொருளில் சொல்லப்பட்டது. வாயாடிப் பெண்ணாக இருந்து போராடுவாள். பொருளாதார பிரச்சனைகள் ஏற்பட்டு, கணவனின் வருமான பாதிப்பு, கணவனுக்கு விபத்து ஆகியவற்றை சந்திப்பாள். இதற்கான நல்ல பரிகாரம் என்னவெனில், கணவனின் உடல்நிறம் செம கருப்பு ஆக இருப்பது நல்லது. மேலும், ஏழை குடும்பத்தில் பிறந்தவனாக இருப்பது நல்லது. ஜாதகத்தில் தோஷமிருப்பின் மேற்சொன்ன தீயபலன் கூடும். சுபக்கிரக பார்வை இருந்தால் தோஷம் குறைந்து தாமதமாக திருமணம் நடப்பதுண்டு.

**42. "எட்டில் சனி தரித்திரம்"**

**பொருள்:** ஜாதகத்தில் இலக்கினத்திற்கு 8ஆம்

இடத்தில் சனி இருப்பின், அவர் நின்ற இடம் வளரும், பார்த்த இடங்கள் அழியும் என்பதற்கு ஏற்ப ஆயுள் தீர்க்கம் (கெட்டி) நீண்ட ஆயுசு உண்டு. ஆனால் 10ஆம் இடம் தொழிலைப் பார்த்து தொழிலை கெடுப்பார். 5ஆம் இடம் புத்தியை பார்த்து அறிவைக் கெடுப்பார். 2ஆம் இடம் வரவு ஸ்தானத்தைப் பார்த்து செல்வத்தை தடை செய்வார். இதனையே வறுமை, தரித்திரம் என்பர். இராசிக்கு 8இல் சனி வரும் 2½ வருடம் அட்டமச்சனி காலமும் மேற்சொன்ன பலனையே தரும்.

### 43. "ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்"

**பொருள்:** ஆ+நெய் = பசு நெய் என்பதே ஆனை. ஆநிரை, ஆவினம் எனும் சொல் — ஆ — எனில் பசு ஆகும். பூ எனில் மலர். இதிலிருந்து வெளிவரும் தேன் என்பது பூவின் நெய் ஆகும். பசு நெய்யினை சற்று அதிகமாக சாப்பிட்டால், கொழுப்பு கூடி நோய் ஏற்படும் காலம் வரும். நோய் தீர, பூ நெய்யை அதாவது தேனை நாம் சாப்பிடும் காலம் உடனே ஏற்படும். இதைவிட்டு "பலசாலிக்கு ஒரு காலம் வந்தால், நோஞ்சானுக்கு ஒரு காலம் வராமலா போகும்" என பேசுவது தவறு.

### 44. "விதி போகும் வழியே மதி போகும்"

**பொருள்:** ஜாதகத்தில் முதலில் ஒரு பாடல் எழுதி இருப்பர். "ஜனனீ ஜென்ம சௌக்யானாம்" எனத் தொடங்கும் பாடல். கடந்த பிறவியின் கர்மவினைக்கேற்ப, இப்பிறப்பில் தலைவிதி அமையும். அத்தலைவிதிக்கேற்ப, ஜாதகக்கட்டம் அமைந்திருக்கும். பிறந்தநாளின் நேரப்படி (முதல்வீடு) இலக்கினம் என எதைக் குறிப்பிடுகின்றனரோ அதுவே, விதிஸ்தானம் ஆகும். இதை வைத்தே பலன்களை அறியமுடியும். விதியை அனுசரித்தே மதி. அதாவது நமது மனம், அறிவு, புத்தி செயல்படும். விதியை மதியால் வெல்லமுடியாது. விதி வலியது என்பர்.

### 45. "ரோகிணியில் பிறந்தால் மாமனுக்கு ஆகாது"

**பொருள்:** பொதுவாக மாமனுக்குப் பாதிப்பு எனினும், ஜாதகக்கட்ட ரீதியாக பார்ப்பதே சரி. இலக்கினத்துக்கு 5,8இல் புதன் இருப்பது "காரகோபாவநாஸ்தி" என்கிறபடி மாமனுக்கு பாதிப்புண்டு. மாமன்காரர்கள் புதன் நீச்சம் (அ) பலவீனம் அடைந்தால் மாமனுக்கு பாதிப்பு உண்டு. 5ஆம் இடத்தினை கடும் பாவிகள் பார்த்து அவர்களின் தசாபுத்தி நடந்தால் மாமனுக்கு பாதிப்புண்டு.

### 46. "பரணி தரணி ஆளும்"

**பொருள்:** எம்.கே.டி.பாகவதர் திரையுலக முதல் சூப்பர் ஸ்டார், எம்.எஸ்.சுப்புலட்சுமி இசையுலக நெ.1 பாடகி. இவர்களிருவரும பரணியிலே பிறந்தவர்கள். ஜாதகரீதியாக சந்திரன் பலம் பெற்று சுபர்பார்வை பெறல்வேண்டும். சந்திரன் நின்ற நட்சத்திர நாயகன் சுக்கிரன் பலம் பெறல் வேண்டும். சந்திரன் நின்ற வீட்டோன் செவ்வாய் பலம் பெறல் வேண்டும். இவ்வளவும் இருந்தால்தான். பரணி தரணியாளும்.

### 47, "திருவாதிரை குழப்பம், திருவாதிரை சாப்பாட்டிற்கு அலையும், தில்லுமுல்லு திருவாதிரை"

**பொருள்:** ஆதிசங்கரர், ராமானுஜம் திருவாதிரையில் பிறந்தவர்களே. சந்நியாசியாகி பிச்சை எடுத்தனர். ருத்ரனின் நட்சத்திரம், எரிதழல் நட்சத்திரம், ஆதிரை, பரணி, கார்த்திகை — பயணம், கடன், வைத்யம் — கூடாது என பாடலும் உண்டு. சுனாமி திருவாதிரையில், இதில் பிறந்தோர் பிறர் விஷயத்தை நன்றாக முடிப்பர். தன் விஷயம் குறித்து முடிவெடுக்க குழம்புவார். சுதந்திர மனப்பான்மைக்குரிய இராகுவின் நட்சத்திரம் என்பதால் நினைத்ததைச் சாதிக்க தில்லுமுல்லு செய்வார். சண்டாளன், விதவை மற்றும் முஸ்லீம், வெளிநாடு ஆகியனவற்றை இராகு குறிப்பார். இளமையிலே கல்வி கெடவும், வறுமையை அனுபவிக்கவும் வாய்ப்புண்டு என்பதால் சாப்பாட்டிற்கு கஷ்டப்படுவார். மேலும், வேலை பார்க்கும் இடத்தில் சுதந்திரமாக செயல்பட முடிவதில்லை என்பதனால் அடிக்கடி வேலையை ராஜிநாமா செய்துவிட்டு சாப்பாட்டிற்கு துன்பப்படுவார்.

### 48. "ஆடியிலே பிள்ளை பிறந்தால், ஆட்டிப் படைக்கும்"

**பொருள்:** இதுவும் ஒருவகையில் சரிதான். ஆடி, பங்குனியிலே பிறந்தோர் வாழ்க்கையும், அவர்களின் பெற்றோர் நிலையும் போராட்டமே. காலபுருஷனின் 4ஆம் வீட்டில் சுகஸ்தானத்தில் கடகத்தில் சூரியன் இருப்பதும், 12ஆம் வீட்டில் விரயத்தில் மீனத்தில் சூரியன் இருப்பதும் பலவீன நிலையாகும். சூரியனின் ஆட்சிவீடான சிம்மத்திற்கு, மறைவு வீடுகளான 8ஆம் இடம் பங்குனி மீனத்தில் சூரியனிருப்பதும், 12ஆம் இடம் ஆடி கடகத்தில் சூரியனிருப்பதும் பிரச்சனைகளைத் தரும். சூரியனின் ஆன்மா, தந்தை விஷயங்களைக் குறிப்பிடுவர்.

### 49. "சிம்மத்திலே பிறப்பின்; பெற்றோரில் ஒருவரை இழப்பான், மேலும் பரதேசம் சென்று புகழ் பெறுவான்"

**பொருள்:** சிம்ம இராசியிலே பிறந்து சிறுவயதில் 2½ சனி வருவாயின் அல்லது சிம்ம இலக்கினத்திலே பிறந்து சிறுவயதில் 10க்குடைய கர்மாதிபதி சுக்கிரனின் தசா வருமானால் இளம் வயதிலேயே பெற்றோரில் ஒருவரை இழப்பது உறுதி. பெரும்பாலும் தந்தைக்கே பாதிப்பு தருகிறது. பூர்வீகம், பிறந்த இடம் விட்டு ஜாதகர் வெளியூரில் அல்லது வெளிமாநிலத்தில் புகழ், பொருள் பெறுவார். வாழ்வும், வீடும்

**தொடரும்...**

வெளியிலேயே அமையும். சிங்கக்குட்டிகள், தாய், தகப்பனை பிரிந்து பாசமின்றி வெளிய சென்று சுயமாய் குகை, துணை ஏற்படுத்திக் கொள்ளும். உதாரணம் — ரஜினிகாந்த் — சிம்ம இலக்கினம், முதல்வர் ஜெ — சிம்ம இராசி.

### 50. "திருவோணம் ஒரு கோணம் ஆளும்"

**பொருள்:** குறிப்பிட்ட நட்சத்திரத்தில் பிறப்பதால் மட்டுமே ஒரு பகுதியை ஆள முடியாது. சந்திரன் பலம் பெறுதல், சேரும் வேறு கிரகங்களின் பலம், நின்ற வீட்டோனின் அமைப்பு, இளமையில் வரும் யோக தசைகள் மட்டுமே கோணத்தை ஆள வழிவகுக்கும்.

### 51. "சனி தசையில் பிறப்பவன் ஏழை"

**பொருள்:** பூசம், அனுசம், உத்திரட்டாதியில் பிறப்பவர்கள் சனி தசையிலே பிறப்பதால், அத்தசை முடியும் காலம் வரை உணவு, உடை, இருப்பிடம், கல்வி ஆகியவற்றுக்காக போராடுவர். ரிஷபம், துலாம், மகரம், கும்ப இலக்கினத்தார்க்கு பாதிப்பு இல்லை என்க.

### 52. "ஞாயிறு, செவ்வாய், சனி ருது ஆகாது"

**பொருள்:** உண்மையே, ஞாயிறு ருது ஆனால் அடிக்கடி அபார்ஷன் ஏற்படும். பிரதோஷ சிவனை வழிபடலாம். செவ்வாய் ருது ஆனால் மாங்கல்யத்திற்கு தோஷம். கணவனுக்கு கண்டம் உண்டு. முருகனை வழிபடவும். சனிக்கிழமை ருது ஆனால் ஓடிப்போவாள் அல்லது நடத்தை கெடுவாள் அல்லது துன்பகரமான வாழ்வு.

### 53. "உத்திராடத்தில் ஒரு பிள்ளை; ஊரில் ஒரு காணி"

**பொருள்:** மேற்கண்ட இரண்டும் இருப்பின், குடும்பம் தலையெடுத்து வம்சம் பெருகும். இது உண்மையே. உதாரணம்: சிவாஜிகணேசன், கவாஸ்கர், ஜோதிபாசு. இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் தாய், தகப்பனின் பாரத்தை தோளில் சுமந்து, உடன்பிறப்புகளையும் காப்பாற்ற சுய உழைப்பினால் பேர் சொல்லும் பிள்ளை ஆக விளங்கிடுவார். இவர் பிறந்த உடன் தகப்பனுகுகு வீடு கட்டும் யோகமும் ஏற்படும். ஜாதகத்தில் யோகபங்கம் கூடாது. சந்திரன் பலம் பெற்று, அவர் நின்ற வீட்டோனும் பலம் பெற்று இருந்திடல் வேண்டும்.

### 54. "குட்டிச் சுக்கிரன், கட்டித் தங்கம் விழுங்குவான்"

**பொருள்:** இப்பழமொழி முதலில் பிறக்கும் இரண்டு வாரிசுகளுக்கு பொருந்தாது. மூன்றாவதாக உங்களுக்கு பிறக்கும் குழந்தை பரணி, பூரம், பூராடம் எனில் பொருந்தும். வீட்டில் இருக்கும் தங்கத்தை விற்று குடும்பம் நடத்த நேரும். 20 வருட சுக்கிர தசையை முழுமையாக சந்திக்காமல், அரைகுறையாக அனுபவிக்கும் நிலையில் பிறப்பதையே குட்டிச்சுக்கிரனில் பிறந்த குழந்தை கட்டித் தங்கம் விழுங்குவான் என்கின்றனர்.

தொடரும்...


முழுவதும் விந்தையான நினைத்ததை நிறைவேற்றும்

**அற்புத சித்த மோதிரம் இலவசம்**



அப்படி தாங்கள் ஏதேனும் துயரால் சிக்கியிருப்பின் கவலைப்பட வேண்டாம். உடன் எங்கள் ஆசிரம மோதிரம் பெற்று அணிந்தாலோ அல்லது உடன் வைத்திருந்தாலோ நீங்கள் விரும்பும் ஆண் / பெண் இதயத்தை கவரும், யாருடைய பெயரைஉச்சரிக்கின்றீரோ அவர்எத்தனைகல்நெஞ்சம்படைத்தவராயிருப்பினும் தங்கள் காலடியில் வந்து விழுவார். மேலும் தங்கள் விருப்பத்தின்படி பணிந்து நடப்பர், வியாபாரத்தில் லாபம், பரீட்சையில் வெற்றி, மனதுக்கேற்ற திருமணம், புத்திரபாக்யம், லாட்டரி சீட்டில் பரிசு, வீட்டில் சண்டை சச்சரவு, நோய் நொடி, கடன் பிரச்சனை முதலான குறைகளிலிருந்து விடுதலை. ஆரோக்கியத்தில் அனுகூலம், நினைவாற்றல் கூடுதல், வேலையில் பதவி உயர்வு, வழக்குகளில் வெற்றி, இழந்த பொருட்கள் திரும்ப கிடைத்தல், இவ்வாறு நாளொருமேனி பொழுதொரு வண்ணம் முன்னேற்றம் அடைந்து எல்லா காரியம் வெற்றியுடன் நடந்து முடியும். இந்த அற்புத சித்த மோதிரம் தற்போது எங்களது ஆசிரம விசே யாகத்தை முன்னிட்டு சில நாட்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். பெற விரும்புவோர் பெயர், விலாசம் மற்றும் ஒன்றிலிருந்து ஒன்பதுக்குள் ஓர் எண்ணையும் மறக்காமல் எழுதவும். **தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

N. SUBRAMANI THANTRIC
VENKATAPURAM, GUDIYATHAM (VELLORE) - 632 602.
PH : 04171 - 229015, CELL : 98653 71667

ADVT

# வாசகர்களின் கேள்விகளுக்கு

ஜோதிடத் தென்றல் அஷ்ட்ரோ

# தெய்வீகன் மாரிமுத்து பதில்கள்



**செல்: 98425 21669 / 92446 21669**

D.ரமேஷ் — சென்னை

*பிறந்த தேதி 24.10.1980 நேரம்: இரவு 9.10 வெள்ளிக்கிழமை பரணி நட்சத்திரம். 2ஆம் பாதம் மேஷ இராசி மிதுனம் லக்கினம் கிருஷ்ணபட்சத்து பிரதமை. ஸ்ரீசுக்கிரன் பகவான் திசை இருப்பு 11 வருடம் 5மாதம் 14 நாள்*

| | | | |
|---|---|---|---|
| | சந் | | ல |
| | இராசி | | ரா |
| கேது | | | சுக் |
| | செவ் | சூ பு | குரு சனி |

| | | | |
|---|---|---|---|
| மா | சனி | பு (வ) | |
| குரு | அம்சம் | | கேது |
| ரா | | | |
| சூ சுக் | செவ் | ல | சந் |

*கேள்வி:* **வணக்கம் ஜோதிடர் ஐயா நான் ஆட்டோ டிரைவராக இருக்கிறேன். ஜோதிடத்தில் மேல் ஆர்வம் அதிலும் குறிப்பாக மாந்திரீகம் மேல் அதிக ஆர்வம். கருணை யட்ச்சினி வழிபாடு செய்திருக்கிறேன். எனினும் சோதிட அடிப்படையில் மாந்திரீகம் தொழிலாக செய்ய முடியுமா. அதன் மூலம் பலரின் கரும வினை கஷ்டங்களை என்னால் நீக்க முடியுமா? என ஜாதகத்தில் உள்ள தோஷங்கள் அவைகளின் நிவர்த்தி வழிபாடு எப்படி செய்ய வேண்டும். குடும்ப வாழ்க்கை எப்படி இருக்கும்?.**

*பதில்: மிதுனம் லக்கினத்தில் பிறந்துள்ளீர்கள். லக்கினதிபதி ஸ்ரீபுதன் பகவான் பஞ்சமம் எண்ணம் தெய்வ ஸ்தானத்தில் எனவே ஸ்ரீமஹா விஷ்ணு மஹா லட்சுமி பேரருள் உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் மாந்தீரக வாக்கு சொல்ல முயற்சி செய்து கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் கடந்த 7 ஆண்டுகளாக வாழ்க்கை கடன் பிரச்சனைகள் என நீங்களே நிம்மதியில்லாமல் இருந்தீர்கள். 21.03.2015 முதல் ஸ்ரீஇராகு பகவான் திசை தொடங்கி விட்டது. எல்லாம் இனிமே ஜெயமே. வாக்குஸ்தானத்தில் ஸ்ரீ இராகு பகவான் மாந்திஸ்வரருடன் இணைவதால் மாந்தீரகம் தொழில் சிறப்படையும். நல்ல வருமானம் வரும். பலருடைய பிரச்சனைகளை எளிதில் தீர்ப்பீர்கள். ஸ்ரீஇராகு பகவான் ஆயில்யம் நட்சத்திரம், ஸ்ரீபுதன் பகவான் சாரத்தில் அமர்ந்துள்ளதால் தெய்வீக பலம் பொருந்தியவராகவும். உங்களை நாடி பலரை வரவைக்கும். எனினும் ஸ்ரீ காளி தேவியின் மந்திரமான*

**"ஓம் காளிகாயை சவித்மஹே**
**ஸம்சான வாசின்யை தீமஹி**
**தன்னோ கோரா ப்ரசோதயாத்"**

*என்ற மந்திரத்தை 108 முறை பாராயணம் செய்யுங்கள். நீங்கள் எடுத்த காரியங்கள் யாவும் சித்திக்கும் மாந்திரீக தோஷம் உங்கள் குடும்பத்தை அணுகாமல் இருக்க தினமும் காலை மாலை வேளையில் சந்தியாவந்தனம் செய்து குல தெய்வத்தின் பெயரை 21முறை உச்சரிக்கவும். மேலும் நீங்கள் பிரதமை திதியில் பிறந்து இருப்பதால் சில காரியங்கள் உடனே நடக்காமல் தடை ஏற்படும். எனவே பிரதமையில் பிறந்த தோஷத்தை நிவர்த்தி செய்ய தினமும் ஒரு மணி நேரம் மவுண விரதம் இருக்கவும்.*

*குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமைய உங்கள் இல்லத்தரசி வெள்ளிகிழமை தோறும் மஹா லெட்சுமி அஷ்டோத்திரம் சொல்லி குங்கும அர்ச்சனை செய்யவும் குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமையும்.*

*****

சண்முக வள்ளி கரூர்

*6.7.219.59 பிறந்த தேதி திங்கள் கிழமை காலை மணி 8.15 புனர்பூசம் நட்சத்திரம் 2ஆம் பாதம் ஸ்ரீ வியாழ பகவான் திசை 8வருடம் 1மாதம் 3நாள்*

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சூ சந் |
| மா | இராசி | | பு செவ் |
| ல | | | சுக் |
| சனி (வ) | | குரு (வ) | ரா |

| | | | |
|---|---|---|---|
| செவ் | சூ | சந் சுக் ரா | குரு (வ) சனி (வ) |
| | அம்சம் | | |
| | | | |
| | பு கேது மா | | |

*கேள்வி:* **திருமணமாகி இருபது வருடங்கள் ஆகிறது. குழந்தையும் இல்லை. இப்போது வாழ்க்கையில் அடிக்கடி எனக்கு என் கணவருக்கு பிரச்சனைகள் வருகிறது. ஜாதகப்படி எனக்கு கஷ்டங்கள் குறையாதா? தீர்வு கொடுங்கள்.**

*பதில்: மகர லக்கினம் புனர்பூசம் நட்சத்திரம் மிதுனம் ராசியில் பிறந்துள்ளீர்கள். வாழ்க்கையில் பல கஷ்டங்களை அடைந்து வீட்டீர்கள் எனினும்9.8.2010 முதல் ஸ்ரீசுக்ரன் பகவான் திசை ஆரமித்து விட்டது ஸ்ரீ சுக்ரன் பகவான் அஷ்டமத்தில் இருப்பதால் கணவன் மனைவிக்குள் தேவையில்லாத மணகுழப்பங்கள் தேவையில்லாத சந்தேகங்கள் உருவாகும். மேலும் குடும்பஸ்தானாதிபதி ஸ்ரீ மாந்தீஸ்வரர் இருப்பதால் உறவுகள் வழியிலும் பிரச்சனைகள் தேடிவரும். நீங்களும் பதிலுக்கு பதில் பேசிவிட்டு வருத்தபடுவீர்கள். எனவே திருவலங்காடு ஸ்ரீ சிவன் ஆலயத்தில் உள்ள ஸ்ரீ மாந்திஸ்வரருக்கு பரிகாரம் செய்து விட்டு, தினமும் வரக்கூடிய ஸ்ரீ சுக்ரன் ஹோரையில் மஹாலெட்சுமி அஷ்டோத்திரம் படியுங்கள். உங்கள் கணவர் உங்கள் மேல் அன்பு செலுத்துவார். பல புண்ணிய ஸ்தலங்களுக்கு ஸ்தல யாத்திரைகள் கூட்டி செல்வார். அல்லது உங்கள் கணவர் நட்சத்திரம் வரும் அன்று கொடு முடியில் வீற்றிருக்கும் ஸ்ரீ பிரம்மாவிற்கு உங்கள் இருவர் பெயரில் அர்ச்சனை செய்து வாருங்கள். வாழ்க்கையில் பொன், பொருள், அன்பு பாசம் என எல்லா செல்வங்களும் கிடைக்கும்.*

*****

*ஹரிஹர சுப்பிரமணியன் மும்பை*

*பிறப்பு 10.4.1960 மதியம் 2.47 மணி திருநெல்வேலி உத்திரம் 4ஆம் பாதம் கன்னி இராசி*

*ஸ்ரீ சூரியன் பகவான் திசை 0 வருடம் 7மாதம் 1 நாள்*

| | | | |
|---|---|---|---|
| சூ சுக் பு | | | |
| செவ் கேது | இராசி | | |
| | | | ல ரா |
| குரு சனி | | | சந் மா |

| | | | |
|---|---|---|---|
| சூ சந் | | | கேது |
| செவ் | அம்சம் | | குரு |
| மா | | | ல சுக் பு |
| ரா | | | சனி |

*கேள்வி:* **வணக்கம் இத்துடன் என் ஜாதகம் இணைத்துள்ளேன். குடும்பத்தில் பல பிரச்சனைகள் காரணமாக நான் திருமணம் செய்துக் கொள்ளவில்லை என் தங்கை தம்பி திருமண ஆகிவிட்டது திருமணம் எப்போது நடக்கும்? அதற்காக நான் என்ன பரிகாரம் செய்ய வேண்டும்? என் சார்பாக யாரும் பரிகாரம் செய்யலாமா? இராகு தோஷம் உள்ளதா?**

*பதில்: உங்கள் கஷ்டம் புரிகிறது. ஜாதகத்தல் ஸ்ரீ குரு பகவான் ஸ்ரீ சனிஸ்வர பகவான் இணைந்தால் சன்னியாசி ஜாதகம் என்பர்கள். மேலும் அயனசயனாதிபதி ஸ்ரீ சந்திரன் பகவானுடன் ஸ்ரீ மாந்திஸ்வரர் சேர்க்கையால் குடும்ப பிரச்சனையால் உங்கள் திருமணம் தடைபட்டு வந்துள்ளது தற்போது 55வயது ஆகிவிட்டது. ஸ்ரீ சனிஸ்வர பகவான் பஞ் சமத்தில் இருந்து திசை நடத்துவதால் தினமும் விளக்கேற்றி வெற்றிலை பாக்கு வைத்து உங்கள் குல தெய்வத்தின் திரு நாமத்தை 108முறை பாராயணம் செய்யுங்கள் குலம் வழிக்குற்றங்கள் மறையும் குல தெய்வ அருளாள் இனி மேலும் சிறப்பான வாழ்க்கை அமையும் முடிந்த அளவு தெய்வ பரிகார பூஜைகளை நாமே நேரடியாக செய்தால் தான் முழு பலனையும் பெற முடியும்.7மிடத்தில் செவ்வாய் பகவானும் கேதுவும் சேர்க்கை பெற்று இருப்பதால் உங்கள் வீட்டில் கணபதியும் சப்பிரமணியரை இணைந்த படத்தை வீட்டில் மாட்டி வைத்து வழிப்படுங்கள் 7இல் உள்ள ஸ்ரீ செவ்வாய் பகவான் ஸ்ரீ கேது பகவான் தோஷம் விலகும்.*

*****

*சுபலேஷ் கன்னியகுமாரி*

*பிறப்பு 19.8.1989 சனிகிழமை மதியம் 2மணி பூரட்டாதி 4ஆம் பாதம் மீனம் இராசி விருச்சிகம் இலக்கினம் பூரட்டாதி 4ஆம் பாதம் மீனம் இராசி விருச்சிகம் இலக்கினம்*

*ஸ்ரீ குரு பகவான் திசை இருப்பு 2வருடம் 10மாதம் 9 நாள்*

| | | | |
|---|---|---|---|
| சந் | | | குரு |
| ரா | இராசி | | |
| | | | சூ பு செவ் கேது மா |
| சனி | ல | | சுக் |

| | | | |
|---|---|---|---|
| | சூ கேது | | சனி |
| ல சுக் | அம்சம் | | சந் |
| குரு | | | செவ் மா |
| பு | | ரா | |

*கேள்வி:* **எனக்கு எப்போது நல்ல வேலை கிடைக்கும்?**

*பதில்: விருச்சிகம் இலக்கினம் ரேவதி நட்சத்திரம் மீனம் இராசி கடந்த 2½ ஆண்டுகளாக அஷ்டமத்து சனிஸ்வரர் பலன் இருந்து தற்போது விடுபட்டு மீண்டும் வக்ரமாக அஷ்டம்திலேயே இருக்கிறார் செப்டம்பர் 5ஆம் தேதி பூரணமாக அஷ்டமத்து சனிஸ்வரர் விடுபடுகிறார். ஆதலால் செப்டம்பர் 5ஆம் தேதிக்கு மேல் நல்ல வேலை கை நிறைய சம்பளம் கிடைக்கும் ஸ்ரீ புதன் பகவான் திசை ஸ்ரீ சுக்ரன் பகவான் புத்தி தொழில் ஸ்தானத்தில் 5 கிரஹஙகள் என எல்லாமே சூப்பராக உள்ளது. விரைவில் வளமான வாழ்க்கை தொடங்கி விடும். ஞாயிற்றுகிழமை தோறும் சிவன் ஆலயம் சென்று வில்வ மாலை சாற்றி வழிப்படுங்கள்.*

| | | | |
|---|---|---|---|
| கேது<br>சந் | | | |
| | இராசி<br>01.09.2015<br>அதிகாலை<br>12.01க்கு கிரகநிலை<br>அமர்வு | | சுக்<br>செவ் |
| | | | சூ<br>குரு |
| | சனி | | ரா<br>பு |

# செப்டம்பர் மாத இராசி பலன்கள்

**1.9.215 ஆவணி 14ஆம் தேதி முதல் 30.09.2015 புரட்டாசி 13ஆம் தேதி வரை**

17.9.2015 – சூரியன் கன்னி இராசி மாற்றம் | 17.9.2015 – செவ்வாய் சிம்ம இராசி மாற்றம்
15.9.2015 – புதன் (வக்) சிம்மஇராசி மாற்றம் | 28.9.2015 – சுக்கிரன் சிம்மம் இராசி மாற்றம்




புலிப்பாணி
**மு. இளங்கோ**
**Cell: 98943 85933**


## மேஷம்

நட்சத்திரம்: அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

நெஞ்சில் உறுதியுடன் எந்தநிலையிலும் தைரியத்தை கைவிடாத மேஷம் இராசி நேயர்களே! இம்மாதம் வியாபாரிகள் சொந்த தொழில் செய்பவர்கள் புதிய முதலீடுகளை செய்யக்கூடாது. அரசுக்கு எதிரான தொழில் செய்பவர்கள் காவல்துறையின் கெடுபிடிகளுக்கு ஆளாக நேரிடும். இம்மாதம் சுக்கி, குரு, இராகு தேவைக்கு ஏற்ப பணவரவுகள் வந்துசேரும். சுகபோகங்களுக்கு எந்த விதமான குறைவும் இருக்காது.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் பாசமும், நேசமும் அதிகரிக்கும். கருத்துவேறுபாடு காரணமாக பிரிந்து வாழக்கூடிய தம்பதியர் மீண்டும் இணைய நேரிடும். வெளிநாட்டு தொடர்புடைய வியாபாரத்தில் கூட்டுத் தொழில் செய்பவர்கள் கருத்து வேறுபாடு காரணமாக பிரிவுகளை சந்திக்க நேரிடும். திருமணம் தடைபட்டு வரும் ஆண், பெண் இருபாலருக்கும் தெய்வீக வழிபாடுகளை செய்வதன் மூலம் உடனடியாக திருமணம் நிச்சயிக்கப்படும். வீட்டில் வயதான பெற்றோர்கள் இருப்பின் அவர்கள் பகையில் மருத்துவசெலவு உண்டாகும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி கற்கும் மாணவ, மாணவிகளின் கல்வி தரம் நன்கு உயர்வடையும். மேற்படிப்புகளில் கல்லூரியில் வேலை வாய்ப்பு தொடர்புடைய நேர்முக தேர்வுகளில் மாணவ, மாணவிகளின் வெற்றி பெற்றோர்களுக்கு சந்தோஷம் உண்டாகும்.

**பெண்கள்:** பெண்கள் இம்மாதம் போராடியே உரிமைகளை பெற்று வென்று விடுவீர்கள். சிலர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு மூலம் வெளிநாடு சென்று வரநேரிடும். சில்லரைக் கடன் சுமைகள் குறையும். புதிதாக வாகனம் ஓட்டி பயிற்சி பெறுபவர்கள் நிதானமாக செயல்பட வேண்டும். அரசியலில் உள்ளவர்கள் புதிய பதவி பெறுவார்கள். கண் மற்றும் தலைவலி தொடர்பாக பாதிப்புகள் வந்து சேரும்.

**பணவரவு:** மோட்டார் வாகன தொழில், இறைச்சி, மீன்வியாபாரம் கால்நடைத்தீவனம், மரவியாபாரம், ஹோட்டல் வாகனம், ஓட்டுபவர்கள், லேத் வெல்டிங் ஒர்க்ஸ், பிளம்பிங் வேலை வியாபாரம் போன்றவை ஓரளவு இலாபம் தரும்.

**வணங்கவேண்டிய தெய்வ வழிபாடு**

வேம்பு செடிகளுக்கு தினசரி காலை 6-9 மணிக்குள் ஓம் நமசிவாய என ஜெபித்து (108 தடவை) 9 செம்பு தண்ணீர் விட்டுவிட காரிய அனுகூலம் உண்டாகும்.

## ரிஷபம்

நட்சத்திரம்: கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி, மிருக சிரிஷம் 1,2 பாதங்கள்

பேச்சில் தெளிவும் கற்பனை திறனும் கொண்ட ரிஷபம் இராசி நேயர்களே! இம்மாதம் வெளிநாட்டில் வேலை செய்பவர்கள். தாய்நாடு திரும்பி வரக்கூடும். வீடுகட்டுவது தொடர்பாக எதிர்பார்த்த இடங்களில், பணவருவாய் தடைபடும். இம்மாதம் சுக்கிரன், கேது, செவ்வாய், புதன் ஆகிய கிரகங்களின் சஞ்சாரம் ஓரளவு நன்மைகளை தரும். பூர்வீக சொத்துக்கள் தொடர்பாக வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். வியாபாரிகள் அரசு அதிகாரிகளுடன் மோதல் போக்கை கைவிட வேண்டும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் அன்பும் அனுசரிப்பும் கலந்து காணப்படும். ஆனால் மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.. இம்மமாதம் பிள்ளைகளின் வகையில் இடர்பாடுகளை சந்திக்க நேரிடும். உடன்பிறப்புகளுடன் வீண் மனஸ்தாபம் மாறி மாறி ஏற்படும். இம்மாதம் குலதெய்வ கோவில் சென்று வழிபாடு செய்வது மிகவும் நல்லது.

**கல்வி:** ஆரம்ப கல்வி குழந்தைகளின் கல்வியில் நல்லமுன்னேற்றம் ஏற்படும். அதே சமயம் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வியிலும் சிறப்பாக அமையும். அதே சமயம் செய்யாத தவறுக்கு தண்டனை, வீண்பழி சுமக்க நேரிடும். எனவே புதிய நட்புகளிடம் கவனமாக பழக வேண்டும். பள்ளி, கல்லூரி, கலைநிகழ்ச்சியில் கலந்து வெற்றி பரிசுகளை வெல்லக்கூடும்.

**பெண்கள்:** இம்மாதம் பெண்கள் வீண் டென்ஷனை குறைத்துக் கொள்ள வேண்டும். உத்தியோகம் செய்பவர்கள் தேவையில்லாமல் மற்றவர் விஷயங்களில் தலையீடு, செய்யாமல் இருக்க வேண்டும். அரசு பணியில் இருப்பவர்களுக்கு சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படும். காதல் விஷயங்களில் மிகவும் கவனமாக செயல்படவேண்டும். கருவுற்ற பெண்கள் மகப்பேறு தொடர்பாக தொடர்ந்து சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

**பணவரவு:** விவசாயத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது. தள்ளுவண்டி மற்றும் சில்லறை வணிகம் நல்ல இலாபமதை தரும். வட்டி தொழில், பர்னிச்சர் கடை, பலசரக்கு வியாபாரம், மோட்டார் வாகன தொழில் பழக்கடை, பூ வியாபாரம், மெடிக்கல் ஷாப், சிற்ப வேலை, எண்ணெய் வித்து உற்பத்தி டெக்ஸ்டைல்ஸ் துறை போன்றவை இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

தென்னை மரத்திற்கு ஓம் நமோ பகவதே வாசுதேவாயா நமஹ என்று 108 தடவை ஜெபித்து தண்ணீர் விட்டு வர வேண்டும். எதிர்பார்த்த இடங்களில் பணவரவுகள் உண்டாகும்.

## மிதுனம்

நடசத்திரம் : மிருகசீரீஷம் 3,4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 பாதங்கள்

நட்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, மிகவும் துல்லியமாக செயல்படக்கூடிய மிதுனம் இராசி நேயர்களே! இம்மாதம் சில்லரைக் கடன்கள் ஓரளவு அடைபடும். வியாபாரிகளுக்கு பழையகடன்கள் படிப்படியாக வசூல் ஆகும். இம்மாதம் நினைத்த காரியங்களை ஓரளவு சாதித்து விடுவீர்கள். சுக்கிரன், சனி, கேது மற்றும் முற்பகுதியில் சூரியன், புதன். பிற்பகுதியில் செவ்வாய் ஆகிய கிரகங்களின் சஞ்சாரம் அனுகூலமான பலன்களை பெற்று தரும். இம்மாதம் திருமணம் தொடர்புடைய காரியங்களளை நிதானமாக சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் அன்பும், பாசமும் அதிகரிக்கும். மனைவி வழி உறவினர் வருகை அதிகரிக்கும். வீட்டில் பெண் குழந்தைகள் இருப்பின் அவர்கள் மூலம் சந்தோஷமான நிகழ்வுகள் நடைபெறும். வீட்டில் வயதான பெற்றோர்கள் இருப்பின் அவர்கள் மூலம் சில பணஉதவிகள் கிடைக்கக் கூடும். வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள் சிலர் இடம்மாறி வேறு வீடு மற்றும் இடம் செல்ல நேரிடும்.

**கல்வி:** ஆரம்பகல்வி பயிலும் சிறு குழந்தைகளின் உடல்நலம் பாதிப்பு ஏற்படுவது மூலம் கல்வியில் முன்னேற்றம் தடைபடும். ஆனால் உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கல்லூரி படிப்பு படிக்கும் ஆண், பெண், இருபாலரும், ஒழுக்கம் தொடர்பான விஷயங்களில் கவனமாக செயல்பட வேண்டும்.

**பெண்கள்:** பெண்களைப் பொறுத்த வரையில் இம்மாதம் செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும். புகுந்த வீட்டில் எதிர்பார்த்த மரியாதை கிடைக்கும். சிலர் தனிக்குடித்தனம் செல்லக் கூடும். கருவுற்ற பெண்கள் வெளியூர் பயணங்களை தடைசெய்ய வேண்டும். அடமானம், போன தங்க நகைகள் சிலவற்றை மீட்க நேரிடும். வக்கீல், செவிலியர், காவல்துறையில் பணிபுரியும் பெண்கள் நல்ல இலாபம் பெறுவார்கள்.

**பணவரவு:** விவசாயத்தில் ஓரளவு இலாபம் கிடைக்கக் கூடும். ஆசிரியர் பணி, அறநிலைய துறை, புரோகிதர், ஜோதிடர், வங்கி பணியாளர். நீதிபதிகள், ஆடிட்டர், மதபோதகர், குடிதண்ணீர், வியாபாரம், பைனான்ஸ் நிறுவனங்கள், காய்கறி விற்பனை, ஸ்டேஷனரி விற்பனை போன்றவை இலாபம் பெற்று தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் நமஹ என்று மனதில் ஜெபம் செய்தபடி மயில்தோகை விசிறி கொண்டு வீசி விட வேண்டும். திடீர் தனவரவுகள் ஏற்படும். தினசரி 324 தடவை ஜெபம் செய்ய வேண்டும்.

## கடகம்

நடசத்திரம் : புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

பிறர்க்கு உதவி செய்யும தாய்மை குணம் கொண்ட கடகம் இராசி நேயர்களே! உங்களுக்கு இம்மாதம் போக பாக்கியங்களுக்கு குறைவுகள் இருக்காது. சுக்கி, குரு, இராகு, பிற்பகுதியின், சூரி, புதன், கிரகங்களின் சஞ்சாரம் நன்மைகளை தரும். ஆனால், செவ், சனி, கேது கிரகங்களினால் மனதில் ஒரு விதமான தடையும், தாமதங்களும் ஏற்படுத்தும். கோர்ட், கேஸ் வழக்கில் தேவையற்ற பணவிரையங்களை உண்டு பண்ணும். வெளிநாட்டில் வேலை செய்பவர் தாய்நாடு திரும்பி வரக்கூடும்.

**குடும்பம்:** கணவன், மனைவி, உறவுகளில் அன்பும், பாசமும் கலந்து காணப்படும். திருமண விஷயத்தில் விவகாரத்து பெற்ற ஆண், பெண் இருபாலரும் மறுபடியும் மறுமணம் செய்துக் கொள்ள முயற்சி எடுக்க காரியம் நிறைவேறும். சிலருக்கு நீண்டகாலம் கழித்து அடுத்த கருஉற்பத்தி ஏற்பட வாய்ப்பு உள்ளது. வீட்டில் வயதான பெற்றோர் இருப்பின் அவர்கள் மூலம் மருத்துவ செலவுகள் அதிகரிக்கும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வி தொடர்பாக அதிகமான செலவுகள் உண்டாகும். அரசு தேர்வு எழுத இருப்பவர்கள் கூடுதல் கவலனம் எடுத்து படிக்க வேண்டும். நீலாசரஸ்வதி வழிபாடு செய்ய கல்வியில் மேன்மை உண்டாகும்.

**பெண்கள்:** பெண்களுக்கு இம்மாதம் உயர்வுகள் தேடி வரும. தனியார் நிறுவனங்களில் பணி செய்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலர் உத்தியோக ரீதியாக உயர்கல்வி படிக்க நேரிடும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். தடைபட்ட திருமண காரியங்களில் மீண்டும் நடைபெறும். ஹோட்டல், சமையல், தொழில், பியூட்டி பார்லர், வட்டி தொழில் செய்வர் இலாபம் பெறுவார்கள்.

**பணவரவு:** விவசாயத்தில் இலாபம் இருக்காது. அதிக பண விரையம் உண்டாகும். செங்கல், ஜல்லி, மண் வியாபாரம், காவல்துறை பணியாளர், இறைச்சி, மீன், கருவாடு விற்பனை, கால்நடை தீவனம், ஸ்வீட் ஸ்டால், பெயிண்டிங் தொழில், காபி கடை, ஸ்டேஷனரி விற்பனை, சொந்த வேலை செய்பவர் போன்றவை இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

அரளி (சிவப்பு) செடிக்கு ஓம் ஸஹஸ்ரார ஹம்பட் நமஹ என்று மனதில் ஜெபித்தபடி (108 தடவை) தண்ணீர் விட சகல தோஷமும் இடையூறும் விலகும்.

## சிம்மம்

நடசத்திரம் : மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதங்கள்



உயர்ந்த எண்ணமும், ஈகை குணமும் கொண்ட இராசி நேயர்களே! உங்களுக்கு இம்மாதம் பணவரவு எவ்வளவு இருந்தாலும, அதற்கு ஏற்றார்போல பணவிரையங்களும் உண்டாகும். குழந்தைகள் மூலம் பணவிரையம் ஏற்படக் கூடும். கூட்டுத் தொழில், வியாபாரம் செய்பவர்கள், தனித்தனியாக பிரிந்து செல்ல வாய்ப்பு உள்ளது. இம்மாதம் சுக்கி, இராகு, புதன், கிரகங்களில் ஓரளவு நன்மைகளைப் பெற முடியும். பூர்வீக சொத்துக்களை தற்சமயம் பாகபிரிவினை செய்ய வேண்டாம்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் வீண் வாக்குவாதம் அடிக்கடி ஏற்படும். புதிதாக திருமணம செய்த தம்பதிகள் கருஉற்பத்தி ஏற்படக்கூடும். தற்சமயம் தனிக்குடித்தனம் செல்ல வேண்டாம். வாடகை வீட்டில் இருப்பவர்கள் பக்கத்து குடிதாரர்களுடன் சண்டை சச்சரவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. சிலருக்கு பூர்வீக சொத்துக்களை விற்று வாங்க நேரிடும். இலாபத்தில் புதிதாக வீடு, மனை வாங்க நேரிடும். வீட்டிற்று தேவையான ஆடம்பர பொருட்கள் வாங்கக்கூடும்.

**கல்வி:** ஆரம்பகல்வி மற்றும் உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளின் கல்வியில் படிபடியான முன்னேற்றம் உண்டாகும். ஆனால் படிப்பு வகையில் அதிகப்படியான பணவிரையங்களை செய்ய நேரிடும். பள்ளி இறுதி ஆண்டு படிக்கும் மாணவ, மாணவிகள் கடுமையாக உழைக்க வேண்டும்.

**பெண்கள்:** பெண்களுக்கு இம்மாதம் மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். தேவையற்ற மன உளைச்சலை ஏற்படுத்தக் கூடாது. சில்லரைக்கடன் சுமைகள் அதிக நெருக்கடி ஏற்படுத்தும். கர்ப்பிணி பெண்கள் டென்ஷனை குறைக்க ஸ்ரீமத்பாகதம் படிக்கலாம். வாகனம் ஓட்டிச் செல்லும் பொழுது கவனம் தேவை. கையில் உள்ள பணத்தை யாரிடமும் கொடுக்க வேண்டாம். காதல் தொடர்பான விஷயங்களில் அதிக கவனம் தேவைப்படும்.

**பணவரவு:** விவசாயத்தில் அதிக பண விரையம் உண்டாகும். ஜவுளி வியாபாரம் பாத்திரக்கடை, பர்னிச்சர் விற்பனை, கல்லூரி பேராசிரியர் பணி, பூ வியாபாரம், வாகன ஓட்டுனர், இசைக்கலைஞர்கள் சிவில், இஞ் சினியர், ஜோதிடர் போன்ற தொழில் லாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

கிராம காவல் தெய்வங்கள், வீட்டிற்கு அருகில் உள்ள கோவில்களுக்கு விளக்கு எரிய எண்ணெய் வாங்கிக் கொடுப்பது மிகவும் நல்லது. குலதெய்வ வழிபாடு மருத்துவ செலவுகளை குறைக்கும்.

## கன்னி

நடசத்திரம் : உத்திரம் 2,3,4 பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2 பாதம்



சிக்கனமாகவும், அதே சமயம் திட்டமிட்டு சிறப்பாக செயல்படக்கூடிய கன்னி இராசி நேயர்களே! இம்மாதம் சுக்கிரன், சஞ்சாரம், தொழில் மற்றும் உத்தியோக உயர்வு போன்றவைகளில் நன்மைகளை உண்டாக்கும். ஆனால் மனதில் ஒருவிதமான குழப்பமும், முடிவு எடுக்க முடியாமல் திணறிக் கொண்டே இருக்க நேரிடும். இம்மாதம் பணம் கொடுக்கல், வாங்கல், ஷேர் மார்க்கெட், தொழில் செய்பவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். வெளிநாட்டு வேலைக்கு முயற்சி செய்பவர்கள், பணவிஷயங்களை நன்கு விசாரித்து கொடுக்க வேண்டும்.

**குடும்பம்:** கணவன், மனைவி, உறவுகளில் வீண் வாக்குவாதம் அதிகரிக்கும். இம்மாதம் வீட்டில் மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். புதிதாக திருமணம் செய்த தம்பதிகள், நீண்ட தூரம் இன்ப சுற்றுலா செல்லக் கூடும். வீட்டில் திருமண வயதில் பிள்ளைகள் இருந்தால் அவர்களின் திருமண விஷயங்களில் முயற்சி எடுக்கலாம். உடன்பிறந்த சகோதரன், சகோதரி வகையில் காலவிரைய செலவுகள் உண்டாகும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளின் கல்வியில் உயர்வு ஏற்படும். உயர்கல்வ படிப்பவர்களில் படிப்பில் அதிக கவன சிதறல் ஏற்படும். அரசு தேர்வு எழுத இருப்பவர்கள் மிகவும் கவனமாக படிக்க வேண்டும். ஹயக்கீரிவர் வழிபாடு செய்வது மிகவும் முன்னேற்றம் தரும்.

**பெண்கள்:** பெண்களுக்கு இம்மாதம் முன்னேற்றம் ஏற்படுத்தி சந்தோஷ அனுபவங்களை உண்டாக்கும். சிலருக்கு புதிய உத்தியோக வாய்ப்புகளைப் பெற்று தரும். சில்லறை கடன் சுமைகள் அடைபடும். பூர்வீக சொத்துக்களின் மீது சில இலாபங்கள் கிடைக்கும். வீடு கட்டுவது தொடர்பாக எதிர்பார்த்த வங்கிக்கடன் கிடைக்கும். தொழில் செய்வோர் மேன்மை அடைவார்கள்.

**பணவரவு:** விவசாயத்தில் கால்நடை வளர்ப்பு, ஓரளவு இலாபம் தரும். திருமண புரோக்கர், ஆடிட்டர், வக்கீல் பணி, பெட்ரோல் பங்க் நடத்துபவர், ஜோதிடர், டிஜிட்டல் ஸ்டுடியோ, ஜவுளி விற்பனை, பிளக்ஸ் பிரிண்டிங் தொழில் போன்றவை இலாபம் தரும்.

### வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு

திராட்சை பழத்தில் மாலை கட்டி பைரவருக்கு அணிவித்து வழிபாடு செய்ய எதிர்ப்பு அகலும். குடிப்பழக்கம் படிப்படியாக குறையும்.

# துலாம்

நடசத்திரம் : சித்திரை 3,4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்கள்

வியாபார நுணுக்கங்களை தெரிந்து திட்டமிட்டு செயல்பட்டு வெற்றிகளை குவிக்கக் கூடிய துலாம் இராசிநேயர்களே! உங்களுக்கு இம்மாதம் சொத்துக்கள் விற்பனை தொடர்பாக இலாபங்கள் கிடைக்க வாய்ப்பு உண்டு. வீடுகட்டுவது தொடர்பாக தடைபட்ட காரியங்கள் மீண்டும் நடைபெறும். இம்மாதம் செவ், சூரி, புதன், கேது, குரு ஆகிய கிரகங்களின் நன்மையான சஞ்சாரம் காரிய வெற்றிகளை கொடுக்கும். கோர்ட், கேஸ் விவகாரத்தில் புதிய திருப்பங்கள் ஏற்படும். குலதெய்வ கோவில் சென்று வழிபடடு அன்னதானம் செய்வது நல்லது.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் நெருக்கம் அதிகரிக்கும். அதே சமயம் வாக்குவாதங்களும், அடிக்கடி உண்டாகும். மனைவி வழியில் சிலருக்கு இலாபங்கள் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். வெளிநாட்டில் வேலை செய்பவர் பணிநிறைவு செய்து தாய்நாடு திரும்பி வரக் கூடும். குழந்தைகள் மூலம் சந்தோஷமான நிகழ்வுகள் ஏற்படும். சகோதரன், சகோதரி வகையில் உதவிகள் கிடைக்கும். சிலருக்கு நிச்சயிக்கப்பட்ட திருமண காரியங்களில் தடை ஏற்பட்டு தள்ளிப் போக வாய்ப்பு உள்ளது.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் உயர்வு உண்டாகும். உயர்ந்த மதிப்பெண்கள் கிடைக்கும். விளையாட்டுத் துறையைச் சார்ந்த மாணவ, மாணவிகள் வெற்றி பெற்று பரிசுகளை வெல்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணஉதவிகள் கிடைக்கக் கூடும்.

**பெண்கள்:** இம்மாதம் சந்தோஷமான அனுபவங்கள் ஏற்படும். அடமானம் போன தங்க நகைகள் மற்றும் சொத்துக்கள் மீது உள்ள கடன் நெருக்கடி தீரும். சிலருக்கு நீண்ட நாள் கழித்து கருஉற்பத்தி ஏற்படும். சிலர்கல்வி தொடர்பாக வெளிநாடு சென்று வரக் கூடும். தனியார் துறையில் வேலை செய்பவர்கள் பதவி உயர்வு பெறுவார்கள். கணவனை பிரிந்து இருப்பவர்கள் மறுபடியும் இணைந்து வாழ நேரிடும்.

**பணவரவு:** விவசாயத்தில் தென்னை, மஞ்சள், காய்கறி, உற்பத்தி போன்றவை இலாபம் தரும். அரிசி மண்டி, ரைஸ்மில், மரவேலை செய்பவர், ஹோட்டல் தொழில், குடிதண்ணீர் வியாபாரம், இறைச்சி, மீன் கடை, தொழில், உப்பு ஏற்றுமதி, கப்பல் பணியாளர், ஜோதிடர், விளம்பர நிறுவனங்கள், பத்திரிகை துறை நல்ல இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

ஓம் கம் கணபதியே நமஹ என்று காலை, மாலை 108 தடவை ஜெபம் செய்து எறும்பு புற்றுக்கு சர்க்கரை தூள், தூவிவிட காரிய தடைகள் விலகும்.

# விருச்சிகம்

நடசத்திரம் : விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

எந்த ஒரு செயலையும் எளிதில் சிரமம் இல்லாமல் சர்வ சாதாரணமாக செய்து முடிக்கும் ஆற்றல் உள்ள விருச்சிகம் இராசி நேயர்களே! இம்மாதம் உங்களுக்கு சுக்கிரன், செவ், சூரியன், இராகு, புதன் ஆகிய கிரகங்களின் கோட்சார சஞ்சாரம் நன்மைகளை பெற்றுத் தரும் என்பதில் சந்தேகம் இல்லை. ஜென்ம சனியுடன் 10ஆம் இடத்து குருவும் சேர்ந்து, சில நெருக்கடிகளைச் செய்யும். எனவே பதற்றம் இல்லாமல் செயல்பட வேண்டும். கையில் உள்ள பணத்தை யாரையும் நம்பி கொடுக்கக் கூடாது.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் அன்பும், பாசமும் அதிகரிக்கும். மனைவிக்கு மருத்துவ செலவுகள் குறையும். தலைக்கருவை சுமக்கும் பெண்கள் தேவையற்ற அலைச்சலை விட்டு விட வேண்டும். தேவையற்ற டென்ஷன், பயத்தை தவிர்க்க வேண்டும். சிலர் பக்கத்து வீட்டில் குடியிருப்பவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடால் வேறு வீடு மாற்றி செல்ல நேரிடும். புதிதாக யாரிடமும் கடன்கள் வாங்குவதை தவிர்க்க வேண்டும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி பயிலு மாணவ, மாணவிகள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அரசு தேர்வு எழுதுபவர்கள் அதிகாலை எழுந்து படிப்பதை பழகிக் கொள்ள வேண்டும். கல்லூரி ஹாஸ்டலில் தங்கி படிப்பவர்கள் தேவையற்ற சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்.

**பெண்கள்:** பெண்களுக்கு இம்மாதம் பிறந்த இடத்திலும், புகுந்த வீட்டிலும் கூடுதல் மரியாதை கிடைக்கும். ஆனால் யாருக்கும் ஜாமீன் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது. கண் மற்றும் தலைவலி தொடர்பாக சிறிய மருத்துவ செலவுகள் ஏற்படும். தனியார் துறையில் பணி புரிபவர்கள், புதிய நிறுவனங்களுக்கு மாறி செல்ல வேண்டாம். காவல்துறை, நர்ஸிங், ஆசிரியர் பணியில் உள்ள பெண்கள் உயர்வு அடைவார்கள்.

**பணவரவு:** விவசாயத்தில் ஓரளவு இலாபம் கிடைக்க வாய்ப்பு உண்டு. தள்ளுவண்டி நடைபாதை வியாபாரம் நல்ல இலாபம் தரும். காய்கறி கடை, கால்நடை வளர்ப்பு, வாகன ஓட்டுனர், எலும்பு முறிவு, வைத்தியர், மக்கள் சமுதாயப் பணி செய்பவர், மூலிகை உற்பத்தி, மெடிக்கல் ஷாப், கல்லூரி பேராசிரியர், நீதிபதி, கோவில் குருக்கள், ஜோதிடர் போன்றவை இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

ஓம் ஹரி ஹரி ஓம் என்று மனதில் ஜெபம் செய்தபடி தினசரி அனுமனை 12 முறை வலம் வந்து ஜெபிக்க சகலகாரிய வெற்றி ஏற்படும்.

# தனுசு



நட்சத்திரம் : மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிக்க இறுதிவரை போராடும் குணம் உள்ள தனுசு இராசி நேயர்களே! இம்மாதம் வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி தொழில் செய்பவர்களுக்கு பழைய கடன்கள் வசூல் ஆகும். அரசு தரப்பு காண்ட்ராக்ட் தொழில் எடுத்து செய்பவர்களின் பணங்கள் வந்து சேரும். இம்மாதம் சுக்கி, குரு, இராகு முற்பகுதியில் புதனும், பிற்பகுதியில் சூரியனும் நன்மைகளை தரும். அடமானம் போன சொத்துக்களின் மீது உள்ள கடன் சுமை குறையும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் பாசமும், நேசமும் அதிகரிக்கும். நீண்டகாலமாக காதல் செய்யும் ஆண், பெண் இருபாலரும் காதல் திருமணம் செய்ய பெற்றோரிடம் எடுத்துக் கூறி சம்மதம் பெற சரியான தருணம் ஆகும். சிலர் வீடு கட்டும் முயற்சிகளை மேற்கொண்டால் காரியம் கைகூடும். பழைய பூர்வீக சொத்துக்களை விற்று அதன் மூலம் வரும் இலாபத்தைக் கொண்டு புதிய வீடு கட்டி முடிக்கலாம். வீட்டில் உள்ள பிறப்புகளுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். சிலருக்கு பாகப்பிரிவினை தொடர்பாக சண்டை சச்சரவு ஏற்படும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி பயிலும் சிறுகுழந்தைகளின் உடல் நலத்தில் பெற்றோர் கவனம் கொள்ள வேண்டும். உயர் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வி தரம் நன்கு மேம்படும். வீட்டில் பெற்றோருக்கு மகிழ்ச்சி ஏற்படும். இம்மாதம் கல்வி சுற்றுலா மூலம் புதிய இடங்களுக்கு சென்று வரக்கூடிய வாய்ப்பு உண்டாகும்.

**பெண்கள்:** இம்மாதம் கைகளில் பணபுழக்கம் அதிகரிக்கும். சொந்த தொழில், வியாபாரம் செய்யும் பெண்கள் நல்ல முன்னேற்றம் அடைவார்கள். இம்மாதம் மருத்துவ செலவுகள் குறையும். டாக்டர் வங்கி பணியாளர், கல்லூரி பேராசிரியர் போன்ற பணி செய்பவர்கள், ஆபரணங்கள் வாங்க நேரிடும். சிலருக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

**பணவரவு:** விவசாயத்தில் வரவும் செலவும் சரிசமமாக அமையும். வங்கி பணியாளர், கம்யூட்டர் துறை, ஜோதிடர், பத்திரிகை துறை, ஆசிரியர் பணி, பிரிண்டிங் பிரஸ், ஜவுளி கடை, வாசனை திரவியம் விற்பனை, திருமண புரோக்கர்கள் போன்றவை இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

தினசரி லலிதா திரிசதி படித்து பசுவிற்கு அகத்திக்கீரை கொடுத்து வர புதிய வேலைவாய்ப்பு, பணவரவுகள் போன்றவை கிடைக்கும்.

# மகரம்



நட்சத்திரம் : உத்திராடம் 2,3,4 பாதம், திருவோணம் அவிட்டம் 1,2 பாதம்

கர்மமே கண்ணாயிரம் என்ற சொல்லுக்கு இலக்கணமாக விளங்க கூடிய மகரம் இராசி நேயர்களே உங்களுக்கு இம்மாதம் கேது, சனி மற்றும் பிற்பகுதியில் புதன் ஆகிய கிரகங்களினால் மட்டும் ஓரளவு நன்மைகள் கிடைக்கும். தொழிலில் வருவாய்க்கு குறைவு இருக்காது. இடங்கள் தொடர்பான கோர்ட், கேஸ் வழக்கில் நல்ல, திருப்பங்கள் ஏற்படும். இம்மாதம் வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். சொந்த தொழில், வியாபாரம் செய்பவர்கள் புதிய முதலீடுகளை அதிகம், செய்யக் கூடாது. காவல்துறை இராணுவத்தல் பணி செய்பவர்களுக்கு புதிய கௌரவங்கள் கிடைக்கக் கூடும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் வீண் வாக்குவாதம் ஏற்படும். மறைமுகமாக தவறு செய்யக்கூடிய ஆண், பெண் இருபாலரும் மாட்டிக்கொண்டு அவமானங்களை சந்திக்க நேரிடும். இம்மாதம் குடும்பத்தில் மருத்துவ செலவு அதிகரிப்பு. இம்மாதம் வீடு கட்டும் முயற்சிகளை சற்று தள்ளி போடுவது நலம் தரும். புதிதாக திருமணம் செய்த தம்பதிகள் தற்சமயம் தனி குடித்தனம் செல்ல நேரிடும். சிலருக்கு உடனே கருவுற்பத்தி ஏற்படும். புதிய வாகன யோகம் ஏற்படும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் கல்வியில் அதிக முயற்சி தேவைப்படும். அரசு தேர்வு எழுதுபவர்கள் கடுமையாக சிரத்தை எடுத்து படிக்க வேண்டும். சிறப்பு பயிற்சி எடுத்துக் கொள்வது நன்மை தரும். வாகனம் ஓட்டிச் செல்லும் பொழுது கவனமாக செயல்பட வேண்டும். கல்வி தொடர்பாக பணவிரையம் உண்டாகும்.

**பெண்கள்:** பெண்களுக்கு இம்மாதம் புதிய தொழில் வாய்ப்புக்கள் உண்டாகும். சிலருக்கு தடைபட்ட திருமண காரியம் மீண்டும் நடைபெறும். சிலர் உத்தியோக வகையில் வெளியூர் வெளிநாடு சென்று வரக் கூடும். சிலருக்கு நீண்ட நாள் கழித்து இரண்டாவது கருவுற்பத்தி ஏற்பட வாயப்பு உள்ளது. வட்டி தொழில், ஏலசீட்டு நடத்தும் பெண்கள் கவனமாக செயல்பட வேண்டும். வாகனம் ஓட்டும் பொழுது கவனம் தேவை.

**பணவரவு:** விவசாயத்தில் ஓரளவு இலாபம் கிடைக்கும். வாகனம் ஒட்டுதல், ஹோட்டல் தொழில், காபி, டீ கடை ஜவுளி வியாபாரம் பாத்திரகடை தங்க வெள்ளி வியாபாரம் இன்ஷூரன்ஸ் பணியாளர் கல்லூரி விரியுரையாளர் சலூன்கடை பத்திரிக்கை தொழில், பால்பண்ணை போன்றவை இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

தினசரி லலிதா அஷ்ட்டோத்திரம் படித்து உடல் ஊனமுற்றவர்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும்.

# கும்பம்

நட்சத்திரம் : அவிட்டம் 3,4 பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3 பாதம்

நினைத்ததை வெற்றிகரமாக முடிக்க இடைவிடாமல் திட்டமிட்டு செயல்படக்கூடிய கும்பம் இராசி நேயர்களே இம்மாதம் உங்களுக்கு முற்பகுதியில் புதன் மற்றும் செவ்வாய், சனி, குரு, ஆகிய கிரகங்ங்ளின் கோட்சார சஞ் சாரம் சில நன்மைகளைச் செய்யும். பொதுவாக இம்மாதம் பணவிரையங்கள் அதிகரிக்கும். புதிய கடன்களை வாங்கக் கூடாது. சொந்த தொழில் செய்பவர்கள் அன்னிய முதலீடுகளை வாங்கி தொழிலில் முடக்கம் செய்யக் கூடாது. பூர்வீக சொத்துக்களை விற்பதில் உடன் பிறப்புகளிடையே கருத்து வேறுபாடு தோன்றும் சில சமயம் காவல் நிலையம் வரை கட்ட பஞ்சாயத்து செய்ய நேரிடும்.

**குடும்பம்:** கணவன், மனைவி உறவுகளில் அதிகம் கருத்து வேறுபாடு தோன்றும். புதிதாக திருமணம் செய்த தம்பதிகள் மிகவும் பொறுமையாக செயல்பட வேண்டும். இரண்டு தரப்பு குடும்பங்களில் உள்ள பெரியவர்கள் பிரச்சனையில் தலையீடு செய்யாமல் இருப்பது நன்மை தரும். வீட்டில் திருமண வயதில் பிள்ளைகள் இருப்பின் அவர்களின் திருமண காரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம். வீட்டில் வயதான பெற்றோர்களுடன் அடிக்கடி கருத்துவேறுபாடு தோன்றும்.

**கல்வி:** ஆரம்ப கல்வி படிக்கும் சிறு குழந்தைகளின் கல்வியில் உயர்வு ஏற்படும். உயர்கல்வி படிக்கும் மாணவ, மாணவிகளில் கல்வியில் அதிக முயற்சிகளை செய்ய வேண்டும். கல்லூரியில் உயர் தொழில்நுட்ப கல்வி பயிலும் மாணவ மாணவிகள் நேர்முக வேலை வாய்ப்பு தேர்வுகளில் வெற்றி பெறுவார்கள்.

**பெண்கள்:** பெண்களுக்கு இம்மாதம் அதிக டென்ஷன் ஏற்படும். அதிலும் வேலைக்கு செல்பவர்கள் மிகவும் பொறுமையுடன் செயல்பட வேண்டும். உத்தியோகத்ததில் மேல் அதிகாரிகள் மற்றும் சக ஊழியருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். புதிதாக வாகனம் ஓட்டிபழகுபவர்கள் கவனமாக செயல்பட வேண்டும். ஏலசீட்டு, வட்டி தொழில் செய்யும் பெண்கள் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும். புதிதாக கடன்களை வாங்கக் கூடாது.

**பணவரவு:** விவசாயம் தொடர்பான தொழிலில், செய்த முதலீடுகள் நஷ்டத்தை கொடுக்கும். விறகுகடை கேஸ் ஏஜென்சி கடை, டுவிலர் மெக்கானிக், பிளம்பிங் வேலை, காவல் மற்றும் இராணுவ பணி செய்பவர்கள் உப்பு ஏற்றுமதி சிற்பிகள் கார்பெண்டர் வேலை போன்றவை இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

கனகாம்பரம் பூ வாங்கி காளி கோவிலுக்கு கொடுத்து ஓம் பம் பத்திர காளியை நமஹ என்றும் காலை மாலை 108 தடவை ஜெபம் செய்து வழிபாடு செய்ய சகல கிரக தோஷமும் நீங்கும்.

# மீனம்

நட்சத்திரம் : பூரட்டாதி 4 பாதம் வரை, உத்திரட்டாதி, ரேவதி

இனிமையாக பேசி எளிதில் காரியம் சாதிக்கக் கூடிய மீனம் இராசி நேயர்களே உங்களுக்கு இம்மாதம் சுக்கிரன் பிற்பகுதியில் செவ்வாய் முற்பகுதியில் சூரியன் அகிய கிரகங்களின் கோட்சார சஞ்சாரம் சில நன்மைகளை தரும். ஓரளவு சுகபோகங்களுக்கு குறைவு இருக்காது. வெளிவட்டார நண்பர்கள் வகையில் உதவிகள் தாராளமாக கிடைக்கும். அரசாங்க வகையில் சில அனுகூலமான உதவிகள் நன்மைகள் கிடைக்கும். அரசு பணியில் சிலருக்கு பணி இடமாற்றம் கிடைக்க வாய்ப்பு உண்டு. பூர்வீக சொத்துகளின் மீது சில இலாபங்கள் வந்து சேரும்.

**குடும்பம்:** கணவன், மனவை உறவுகளில் ஓரளவு விட்டு கொடுத்து அனுசரித்து போகக் கூடும். மனைவி வழியில் எதிர்பாராத சில உதவிகள் கிடைக்கும். வீட்டில் குடியிருப்பவர்கள் இடமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். நீண்ட காலமாக காதலித்து வரும் ஆண், பெண் இருபாலருக்கும் காதல் கை கூடும். திருமண காரியங்கள் நிச்சயிக்கப்படும். இராணுவத்தில் பணி செய்பவர் பணி நிறைவு செய்து குடும்பத்துடன் இணைவார்கள்.

**கல்வி:** ஆரம்ப கல்வி மற்றும் உயர்கல்வி படிக்கும் மாணவ மாணவிகளின் கல்வியில் மந்தநிலை காணப்படும். தினசரி அதிகாலையில் எழுந்து படிக்க வேண்டும். தினசரி விநாயகர் அகவல் படிப்பது நன்மைகளை தரும். கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் புதிய நட்புகளை கவனமாகக் கையாள வேண்டும். சில அவமான பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடும்.

**பெண்கள்:** இம்மாதம் கையில் ஓரளவு பணபுழக்கம் நன்கு அமையும். படித்து விட்டு வேலை தேடி அலைபவர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். திருமணம் முடிந்து புதிதாக புகுந்த வீடு செல்லும் பெண்கள் சற்று பொறுமையுடன் செயல்பட வேண்டும். கர்ப்பிணி பெண்கள் அலைச்சலை குறைத்து ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். தினசரி சஷ்டி கவசம் படிப்பது நன்மை தரும். ஆசிரியர், மருத்துவர் பணி செய்யும் பெண்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

**பணவரவு:** விவசாயத்தில் காய்கறி உற்பத்தி தென்னை, வெங்காயம் விளைச்சல் ஓரளவு இலாபம் தரும். ஆசிரியர் நீதிபதி போட்டோ ஸ்டுடியோ, பத்திரிக்கை துறை, ஜோதிடர் மதபோதகர், கல்வி நிறுவனம், நடத்துபவர், ஆன்மிக டிரஸ்ட் நடத்துபவர், பழக்கடை, புத்தககடை, கோயில் அர்ச்சகர் போன்ற தொழில்கள் இலாபம் தரும்.

**வணங்க வேண்டிய தெய்வ வழிபாடு**

ஞாயிறுகிழமை சூரிய ஒரையில் 27 அச்சு வெல்லாம் எடுத்து ஓம் நமசிவாய என்று தலையை சுற்றி ஓடுகின்ற ஆற்று தண்ணீரில் விட்டு விட சகல இலாபமும் கிடைக்கும்.

# எளிய தெய்வப் பரிகாரங்கள் 5

வீட்டில் தென்மேற்கு மூலை எனப்படும் கன்னி மூலைப்பாகத்தில் வடக்குப் பார்த்து பீரோவை வைத்தால் பணம் கண்டிப்பாக எப்பொழுதும் இருந்துக்கொண்டே இருப்பதுடன், பல மடங்கு பெருகி இலாபத்துடன் செயல்பட வைக்கும். ஏனெனில், கன்னி மூலை குபேர மூலையாகும்.

ஒரு வீட்டில் கிரகப் பிரவேசம் செய்யும்போது கணபதி ஹோமம், நவகிரக ஹோமம், சுதர்சன ஹோமம், வாஸ்து சாந்தி ஹோமம் ஆகியவற்றைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும் என்பது சாஸ்திரம். இது தவிர, கோ பூஜையும் செய்ய வேண்டும்.



வாஸ்து நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் வாஸ்து பூஜை செய்யும்போது, நாள், நட்சத்திரம் எதுவும் பார்க்கத் தேவையில்லை என்பது ஜோதிஷ பிரம்ம ரகஸ்யம் என்ற நூல் தரும் குறிப்பு.

தொழிற்சாலையில் வடகிழக்கு மூலையில் சிறு கோயில் அமைப்பதால் தொழிற்சாலையில் உற்பத்தி அதிகமாகும். அது விநாயகர் கோயிலாக இருப்பது நல்லது. அதற்கு தினமும் பூஜை செய்து வருவது நல்லது.

பாண்டிச்சேரி அன்னையின் கண்களை மட்டும் காட்டும் படத்தை வாங்கி, வீடு, கடை, தொழிற்சாலைகளில் மாட்டி, கண் திருஷ்டியை நீக்கலாம்.

சனி பகவானின் அசுப பலன் பாதிப்பிற்கு, பிரதோஷ வேளையில் ஒரு கைப்பிடி காப்பரிசி, ஒரு பிடி வன்னிஇல்லை, ஒரு பிடி அருகன்புல் ஆகியவைகளை நந்தியின் இரு கொம்புகளில் வைத்து நந்தியையும், சிவபெருமாளையும் வழிபட்டு வர சனி பகவானால் ஏற்படும் அனைத்து துன்பங்களும் விலகும்.

ஸ்ரீ பைரவரை சனிக்கிழமைகளில் வழிபட்டாலும் அல்லது ஏதாவது ஒரு சித்தரின் ஜீவ சமாதியை வழிபட்டு வந்தால் மட்டுமே சனி நடைபெறும் காலத்தைப் பெரிய பாதிப்பில்லாமல் கழிக்கலாம்.

அனைவரின் வீடுகளிலும் ருத்திராட்சம் காற்றுபடும்படி ஒரு செம்புத் தட்டில் வைத்தால், அவ்வீட்டில் செய்வினைக் கோளாறுகள், விஷ பயம், துர் ஆவிகள் நடமாட்டம் நீங்கும். பூஜை செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை.

பிரதோஷ தினத்தன்று பூஜை முடிந்த பின்பு சிவனை அப்பிரதட்சணமாக சுற்றி வந்து பின்பு சிவனுக்கு அர்ச்சனை 6 பிரதோஷம், செய்து வர பல வருட பிரச்சனைகள் தீரும். சந்திரன் ரிஷப இராசிக்குள் புகும்போது ஏற்படும் பிரதோஷ காலத்திற்கு சக்தி அதிகம். முன் ஜென்ம வினை கலியுகத்தில் நீங்குவதற்குப் பிரதோஷ வழிபாடே சிறந்தது என்பது சான்றோர்களின் வாக்கு.

தினமும் காலையில் காக்கைக்கும் இரவில் நாய்க்கும் ஆகாரம் போட்டுக் கொண்டே வந்தால் நம் அநேக பிரச்சனைகள் தீரும்.

ஏவல், பில்லி, சூனியம், கண் திருஷ்டி ஆகியவைகளை முறிக்கக்கூடிய தன்மை கொண்ட மயில் தோகையை வீட்டில் வைத்திருப்பது சிறந்த பரிகாரமாகும்.

ஒவ்வொருவர் வாழ்விலும் கர்ம வினையால் ஏற்படும் கடுமையான தோஷங்களால், வாழ்வில் கடுமையான பிரச்சனைகள் ஏற்படும். இவ்வாறு கர்ம வினைகளால் ஏற்படும் அனைத்துத் தோஷங்களும் விலக, அன்னதானம் ஒன்றே சிறந்த பரிகாரம்.

வாழ்க்கையில் ஏற்றம், இறக்கம், உயர்வு, தாழ்வு என மாறி மாறி வந்து வேதனை தரும் சகட தோஷம் விலக, அருகிலுள்ள ஏதேனும் ஒரு சித்தர் சமாதக்கு சஷ்டி தினத்தில் சென்று வழிபட்டு வந்தால் சகட தோஷம் சகட யோகமாக மாறும். ஒன்பது மாதங்கள் தொடர்ந்து சஷ்டி திதியில் வழிபட்டு வருவது சிறப்பு.

ஆலயத்தில்




**கே. துரைராஜ்**

**செல்** : 94431 67376


நாவல் உலகின் மணிமகுடம்
அப்ஸரா
நாவல்
008/15
ரூ.20/-
இப்போது விற்பனையில்
மகிழ மலையா?
மர்ம மலையா?
- லக்ஷ்மி ராஜரத்னம்

பெற்றுக்கொண்ட எலுமிச்சைப்பபழத்தை வீட்டின் முகப்பில் கட்டிக் கொண்டால், வீட்டுக்குள் நுழைபவர்கள் எண்ணம் நம்மைத் தாக்குவதில்லை. எலுமிச்சம் பழ வலிமையால் அவர்கள் எண்ணம் அங்கேயே தடுக்கப்படுகிறது.

வீட்டில் விடிவிளக்கு (நைட் லேம்ப்) ஏற்றி நல்ல சுகந்தமான பத்திகள் பொறுத்தினால், ஜேஸ்டா தேவியின் (மூதேவி) தாக்குதல் அதிகம் இருக்காது.

விநாயகருக்குப் போட்ட அருகன்புல்லை வீட்டுக்குக் கொண்டு வந்த சில நாட்கள் வைத்திருந்து அருகன்புல் காய்ந்தவுடன் தூள் ஆக்கி சாம்பிராணியுடன் கலந்து வீட்டில் மாலை நேரத்தில் காண்பித்து வர, வீட்டில் உள்ள தீய சக்திகள் வெளியேறும்.

அமாவாசையன்று ஒரு பசு மாட்டிற்கு 9 வாழைப்பழம் கொடுத்து வர முன்னோர்கள் ஆன்மா சாந்தியடையும்.

குலதெய்வம் எதுவென்று தெரியாதவர்கள் அருகிலுள்ள கன்னிமார் கோயிலில் அபிஷேக ஆராதனை செய்தால் வாழ்வில் உறுதியான பலன்கள் உண்டு.

வீட்டில் நறுமணம் தரும் ஊதுப்பத்திகளை ஏற்றி வைத்தால் தீய எண்ணங்கள், தோஷங்கள், திருஷ்டி, காற்று, கருப்பு ஆகியவை வீட்டை நெருங்காது.

தாய் தந்தையரின் திவசம், குழந்தைகளின் பிறந்த நாள், திருமண நாள் ஆகியவற்றைக் கொண்டாடும்போது ஏழைகளுக்கு உணவளித்தால், நம் பாவங்கள் அகலும்.

தேங்காய், பழம், பூ, சூடம், பத்தி போன்ற எந்தவிதமான பொருளும் எடுத்துச் செல்லாமல் வெறும் கையுடன் கோயிலுக்குச் செல்லக் கூடாது.

சிவனுடைய பூத கணங்கள் நம்முடன் வராமலிருக்கவும் சிவன் சொத்து குலநாசம், சிவன் கோயில் தூசி கூட நம் மேல் ஒட்டக் கூடாது என்பதற்காகவும் சிவன் கோயிலில் சற்று அமர்ந்து விட்டு வர வேண்டும். விஷ்ணு கோயிலில் மகாலட்சுமி நம்முடன் வீட்டுக்கு வந்த அதிர்ஷ்டம் பொங்க விஷ்ணு கோயிலில் தரிசனம் செய்த பிறகு அமர்ந்து விட்டு வரக்கூடாது.

ஆலய வாசலில் பிச்சை எடுப்பவர்களுக்கு நாம் ஆலயத்தின் உள்ளே நுழையும்போதே காசு போடலாம். ஆலயத்தை விட்டு வெளியேறும் போது காசு போட்டால், தரிசனப் பலனைத் தாரை வார்த்தது போலாகும்.

வியாபாரிகள் தங்கள் கடைக்கு நல்லவர், கெட்டவர் வந்து போவதால் ஏற்படும் திருஷ்டியைப் போக்க இரவில் கடையை மூடும் பொழுது சூடம் ஏற்ற வேண்டும். வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் எலுமிச்சை பழம் வெட்டி குங்குமம் தோய்த்து திருஷ்டி சுற்றி கடையின் நான்கு திசைகளிலும் போட்டால், வியாபாரம் நன்கு விருத்தியாகும்.

நவகிரகதோஷம் பரிகாரம் செய்ய இயலாதவர்கள் திருப்பதி ஸ்ரீ வெங்கடாஜலபதியையும், ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ ரங்கநாதரையும் வழிபட்டு வர நவகிரக தோஷங்கள் விலகும்.

பொதுவாக ஒருவர் பிறந்த ஜென்ம நட்சத்திர நாளன்று, பிரசித்தி பெற்ற ஆலயம் சென்று வழிபட்டால், ஜாதகர் விரும்பும் நியாயமான கோரிக்கைகளை இறைவன் உடனே நிறைவேற்றுகிறான் என்பது சாஸ்திர சம்பிரதாயம் ஆகும்.

அமாவாசை தினத்தன்று சிவாலயம் சென்று மாலை 5.00 மணிக்குமேல் நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், நெய், இலுப்பை எண்ணெய், வேப்ப எண்ணெய் ஆகிய 5 எண்ணெய் கலந்த தீபத்தை அகல் விளக்கில் ஏற்ற பிரம்மஹத்தி தோஷத்தை விலக்கலாம்.

அரசமரம் ஸ்ரீ மந் நாராயணனின் அம்சமாகப் போற்றப்படுகிறது. மரங்களில் நான் அரசமரமாக இருக்கிறேன் என்கிறார் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர். திங்கட்கிழமையும் அமாவாசையும் சேர்ந்து வரும் நாளில் அரச மரத்தை 108 முறை பிரதட்சணம் செய்தால் நீண்ட ஆயுள், புத்திர பாக்கியம், நோயிலிருந்து விடுதலை, வைகுண்ட பிராப்தி இவை கண்டிப்பாகக் கிட்டும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன.

சிவாலயங்களில் சிவனை முதலில் வழிபட்டு விட்டுப் பின்பு உமாதேவியை வழிபடுவதும், வைணவ ஆலயங்களில் ஸ்ரீ தாயாரை முதலில் வழிபட்டு விட்டுப் பின்பு பெருமாளை வழிபடுவதும் சிறப்பு.

சொர்ணாகர்ஷண பைரவர் சிவனின் பிரதி பிம்பம் என்று புராணம் கூறும். அம்பிகை சமேதராக சிவபெருமான் உருவத்திலுள்ள ஸ்ரீ சொர்ணாகர்ஷண பைரவமூர்த்தியை தேய்பிறை அஷ்டமியில் வெள்ளைப் பூசணியில் நெய் தீபம் ஏற்றி வழிபட வராத கடன், கடன் பிரச்சனை, பொருளாதாரப் பாதிப்பு போன்ற குறைகள் நிவர்த்தியாகின்றன.

நமது உள்ளங்கையில் சகல செல்வங்களுக்கும் அதிபதியான திருமகள் லட்சுமி தேவி வாசம் செய்கிறாள். காலையில் படுக்கையிலிருந்து கண் விழித்தெழுந்ததும், முதல் சகுனமாக உள்ளங்கையில் நம் பார்வையைப் பதிப்பதால், லட்சுமி தேவியின் தரிசனம் காண்பதன் மூலம் அன்றைய நாள் முழுவதும் மங்களகரமாக விளங்கும் என்பது ஐதீகம்.

**தொடரும்...**



# ஆஸ்த்துமா, ஈஸ்னோபீலியா, சைனஸ், அலர்ஜி, டான்சில், தும்மல், காச நோய் போன்றவற்றுக்கு தெய்விக மூலிகை மற்றும் இயற்கை சிகிச்சை முறைகள்

## பத்தியம் கிடையாது. பக்க விளைவு கிடையாது

ஆஸ்த்துமா என்றாலே நுரையீரல் பாதிக்கப்பட்டுள்ளது என்பது எல்லாருக்கும் தெரியும். நம் உடலின் மார்பறையில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு நுரையீரல்கள் உள்ளன. நமது மூச்சு மண்டலம் மூக்கு, மூச்சுக்குழல், மூச்சுக்கிளைக்குழல், நுரையீரல், மூச்சு நுண் குழல்கள் மற்றும் காற்று நுண்ணறை போன்ற பகுதிகளைக் கொண்டுள்ளது. இதில் முக்கியமாக பிராங்கஸ் எனப்படும் மூச்சுக்கிளைக் குழல்கள் பாதிக்கப்படும் போதுதான் ஆஸ்த்துமா ஆரம்பமாகிறது.

ஆஸ்த்துமாவில் மூன்று வகைகள் உள்ளன.

1. மூச்சுக்கிளைக் குழல்கள் (BRONCHIAL-ASTHMA) பாதிக்கப்படும் போது ஏற்படும் ஆஸ்த்துமா.
2. இதயம் பாதிக்கப்படும் போது (CARDIAC-ASTHMA) ஏற்படும் ஆஸ்த்துமா.
3. சிறுநீரகக் கோளாறால் ஏற்படும் ஆஸ்த்துமா (RENAL ASTHMA)

ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் அதிபதி இலக்கினத்துக்கு 3,6,8,12இல் மறைந்து அவரின் சாரநாதன் இலக்கின சுபராகி அவர் நீசம் அஸ்தங்கம் பெற்று இருந்தால் ஜாதகனின் உழைப்பால் வரும் உயர்வு யாவும் அவனது மேலாளரைப் போய்ச் சேரும்.

ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் அதிபதி 9ஆம் அதிபதி சாரம் பெற்று 3,6,8,12இல் 9ஆம் அதிபதி 10இல் அமர்ந்து இருந்தால் ஜாதகரின் திறமை, உழைப்பு, உயர்வு அனைத்தும் அவனது மேலாளர் (அ) முதலாளிக்கு போய்ச் சேரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் அதிபதி 6இல் மறைந்து 9ஆம் சாரம் வாங்கினால் சாரநாதன் 10இல் அமர்ந்து விட்டால் முதலாளிக்கு இரவு பகல் பாராமல் வெயில் மழை கருதாமல் உழைத்து உழைத்து உருக்குலைந்துப் போகும் இயந்திர (கருவியாக) மனிதனாக மாறுவான்.

ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் அதிபதி 8இல் மறைந்து 9ஆம் அதிபதியின் சாரம் வாங்கி சாரநாதன் 10இல் அமர்ந்து விட்டால் சுயநலமும், பிடிவாதமும், பேராசையும் முரண்பாடும் நிறைந்த முதலாளி அமைந்து உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கூட தராமல் இவரின் உதிரத்தை "ஸ்ட்ரா" போடாமல் உறிஞ்சும் முதலாளி அமைந்து விடுவார்.

ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் அதிபதி 12இல் மறைந்து 9ஆம் அதிபதியின் சாரம் வாங்கி சாரநாதன் அமர்ந்து விட்டால் பல கிளைகள் உள்ள முதலாளியிடம் பணிபுரிவார். அடிக்கடி இடமாறுதல், வெளியூரில் தங்கி பணிபுரிதல், முதலாளியின் அந்தரங்க காரியதரிசியாகவும் இருக்க நேரிடும். முதலாளிக்கு தெரிந்த அனைத்து நுட்பமும் இவருக்கு அத்துபடியாக இருக்கும். முதலாளி தன்னருகில் வைத்துக் கொள்வார்.

இந்த கருத்து எனது அனுபவத்திற்கும் ஆய்வுக்கும் சரியாக வருகிறது. இந்தக் கருத்தை வலியுறுத்தும் பாடல் ஒன்று "நவீன ஜோதிட சிந்தாமணி" எனும் ஜோதிட நூலில் இடம் பெற்றுள்ளது.

**பத்தினுக்குரிய கோள் போய் பதுங்கிட யீராரெட்டில்**
**சத்தியத்தோடு நீதி சமதர்ம நோக்காய் பாரில்**
**நித்தியம் உழைத்த போதும் நிரம்பிடும் பலனை மாற்றார்**
**பற்றியே சுகிப்பர் அன்னோர் பரிதவித்து உழல்வர் மாதே.**

பாடல் — 145

**பாடல் விளக்கம்:** இலக்கினத்துக்கு 10ஆம் இடத்துக்கு உரியவர் 8,12ஆம் இடம் போன்ற அவஸ்தானங்களில் சஞ்சரிக்கும் அமைப்பு உடையவர் எவ்வளவு தான் கடினமாக உழைத்தாலும் நேர்மையாகப் பாடுபட்டாலும், அவருடைய உழைப்பின் பலனை அவரது மேலாளர்கள் தான் (முதலாளிகள்) அனுபவிப்பர். இவர் உழைப்புக்கு ஏற்ற ஊதியமின்றி வாடுவார்.

இந்த பாடலின் விதிப்படி அமைந்த ஓர் உதாரண ஜாதகத்தைக் காண்போம்

பிறந்த தேதி : 1 — 11— 1955
பிறந்த நேரம் : இரவு 8.31
பிறந்த நட்சத்திரம்: கிருத்திகை
ஜனன கால சூரியதிசை : 2 — 6 — 17

| | | | |
|---|---|---|---|
| | | ல சந் கேது | |
| | இராசி | | |
| | | | குரு |
| | சுக் ராகு | சூரி சனி | செவ் புத |

| | | | |
|---|---|---|---|
| | | குரு | செவ் சனி |
| சூரி சந் ராகு | அம்சம் | | சுக் |
| | | | கேது |
| | | | ல புத |

இந்த ஜாதகர் கிருத்திகை நட்சத்திரம் ரிஷபஇராசி ரிஷப இலக்கினத்தில் பிறந்து உள்ளார். இலக்கின இராசி அதிபதியான சுக்கிர பகவான் இராகுவைக் கூடி 7இல் அமர்ந்துள்ளார்.

இவரின் ஜாதகத்தில் தொழிலுக்குரிய 10ஆம் அதிபதி சனி பகவான் அஷ்டமாதிபதி குருபகவான் சாரம் பெற்று துலாத்தில் உச்சம் பெற்று மறைந்துள்ளார். இலக்கினாதிபதிக்கும், இலக்கினத்திற்கு 10ஆம் அதிபதிக்கும் எந்த விதத்திலும் தொடர்பு இல்லை. மேலும் தனாதிபதியின் தொடர்பும் இல்லை.

இவர் தனது முப்பது வயதிற்குள் பத்துக்கும் மேற்பட்ட தொழிலைத் தொடங்கி நஷ்டப்பட்டு, கஷ்டப்பட்டு, கடன்பட்டு தொழில் செய்வதையே விட்டுவிட்டார். 31வது வயதில் ஒரு சாதாரண முதலாளியிடம் வேலைக்குச் சேர்ந்தார். இன்று வரை அங்கு தான் வேலைக்குச் செல்கிறார்.

இவர் வேலைக்கு போய் சேரும்போது சாதாரணமாக இருந்த முதலாளி இன்று பல கோடிகளுக்கு அதிபதியாக விளங்குகிறார். முதலாளிக்கு யோகம் தரும் ஜாதக அமைப்பைப் பெற்றவர்.

முக்கியமாக ஒருவரின் ஜாதகத்தில் 10ஆம் அதிபதி 6,8,12இல் மறைந்து விட்டால் சுயதொழில் செய்ய முடியாது. செய்தாலும், ஜெயிக்க முடியாது. 10ஆம் அதிபதி மறைந்து வலுத்துவிட்டால் அவரின் உழைப்பை அவரின் மேலாளர் (அ) முதலாளிதான் முழுமையாக அனுபவிப்பார் என்கிற எனது அனுபவ கருத்தை ஆதாரத்துடன் வழங்குகிறேன். ●

# 12 இராசிகளுக்குரிய கணபதி

# அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அள்ளித் தரும் அவர் சதுர்த்தி




கோட்டையூர்
என். சிவசுப்பிரமணியம்
செல்: 94431 37989
95005 96309


அற்புத கீர்த்தி வேண்டின் ஆனந்த வாழ்க்கை வேண்டின் நற்பொருள் குவிதல் வேண்டின் நலமெலாம் பெருக வேண்டின் கற்பகமூர்த்தி தெய்வக் களஞ்சியத் திருக்கை சென்று பொற்பாதம் பணிந்து பாரீர் பொய்யிலை கண்ட உண்மை.

பூஜை அறையில் கணபதி படத்தில் வைத்து பூஜிக்ககூடிய இவரது ஜாதகம்.

ஆவணி மாதம் சுக்கில பட்ச சதுர்த்தி திதியில் அஷ்த நட்சத்திரத்தில் அவதரித்தவர்.

உலகிற்கே சிவமயத்தில் இடம் பெற்ற மகா கணபதியை தினமும் வழிபட்டால் 4 வர்க்கத்தினரை வழிபட்ட பலன் கிடைக்கும் (முனிவர், மனிதர், மிருகம், பூதம் இவர்களை வழிபட்ட பலன் கிட்டும்.) அவரது நான்கு கைகள் தேவர் இனம், கண்கள் மனித இனம், தந்தம் மிருக இனம், பேழை வயிறு பூத இனம். அத்துடன் பஞ்சபூதங்களில் மாறாத சிறப்பு அம்சம் நெருப்பு இந்த நெருப்பின் அடையாளம் உடைய இவருக்கு சித்தி, புத்தி என்ற பிரம்மாவின் புத்திரிகளை மனம் முடித்து வைக்கப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | |
| | ஸ்ரீமாகா கணபதி ராசி அஸ்தம் | | குரு |
| செவ் | | | சூரி |
| | ல கேது | | புத சுக் சந் |

சித்தி, புத்தி கணேசர் என்று சொல்வதுண்டு. இவருக்கு இரு குழந்தைகள் இருக்கு. இலாபம் என்ற ஒரு குழந்தையும், சுபம் என்ற இன்னொரு குழந்தையும் இப்படி மகாகணபதி வணங்குவோம். இந்த முறை 17.9.2015 வளர்பிறை குருவாரம் விநாயகர் சதுர்த்தி அன்று வழிபடவும். அவரது அவதாரம். விரதம் பூஜை இவற்றை முறையாக செய்துக்கொள்ளவும்.

விநாயக சதுர்த்தி நம் வினைகள் யாவற்றையும் தீர்க்கும் சதுர்த்தி என்பார்கள். பெரியோர்கள், சங்கடங்கள் யாவும் நீக்கி நம்மை சந்தோஷத்தில் ஆழ்த்தும் இந்த விரதம் ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி நாளில் வரும் சதுர்த்தி திருநாளில் இந்த திருக்கதையை படித்து பிள்ளையாரை வழிபட்டால் எல்லையற்ற ஆனந்தம் பெறலாம்.

பரவசத்தோடு அபிநயித்து ஆடிக்கொண்டிருந்தார். ஆனைமுகன். சலங்கைகள் ஒலிக்க, துதிக்கரம் தூக்கி பெரும் வயிற்றோடு பிள்ளையார் ஆடும் நடனத்தைக் காண பெரும் பேறு வேண்டுமே. திருக்கயிலைக்கு வந்து கொண்டிருந்த சந்திரன் ஏதோ நடன ஓசை

1. **மேஷ** இராசிக்காரர்கள் ஒரே நேர்கோவில் மூவரும் கணபதி, துர்க்கை, முருகன் திருப்பரங்குன்றம், மதுரை

2. **ரிஷபம்** அர்த்தநாரீஸ்வரர் கணபதி (பொள்ளாச்சி ஈச்சனாரி)

3. **மிதுனம் :** வன்னி மரம், முக்குறுணி விநாயகர் (மீனாட்சி சுந்தரேஸ்வரர்) மதுரை

4. **கடகம்:** வாரணம் பிள்ளையார் (திருக்கடவூர் அபிராமி அம்மன் ஆலயம்)

5. **சிம்மம்:** வினை தீர்த்த விநாயகர் (சூரியனார் கோயில்)

6. **கன்னி:** பூமி ஸ்தலமான காஞ்சிபுரம் (ஸ்ரீவிகட சக்கர விநாயகர்)

7. **துலாம்:** ஆழத்துப் பிள்ளையார் (விருத்தாசலம் ஆலயம்)

8. **விருச்சிகம்:** ஸ்ரீ ஆபத்து தாரண விநாயகர் (சீர்காழி)

9. **தனுசு:** அக்னி விநாயகர், திருவண்ணாமலை (கிரிவல ஸ்தலம்)

10. **மகரம்:** உச்சி பிள்ளையார் (திருச்சி)

11. **கும்பம்:** குபேர கணபதி (பிள்ளையார்பட்டி)

12. **மீனம்:** சிற்பியால் செதுக்கப்பட்ட அற்புத பிள்ளையார் திருநாரையூர் தேவார திருஅருளால் உலகுக்கு வெளிப்படுத்திய கணபதி (நம்பியாண்டார் நம்பி வழிபட்டது)

காதில் விழ நின்று கவனித்த போது, அங்கு பிள்ளையார் நடனமாடிக் கொண்டிருந்தார். அதைப் பார்த்ததும் அவனுக்கு சிரிப்பு வந்து விட்டது. அடக்க முடியாது கண்களில் கண்ணீர் வரும்வரை சிரித்தான்.

கடும் கோபம் கொண்டார் கணபதி அழகில் சிறந்தவன் தாமே எனும் கர்வ மிகுதியால் சிரிக்கும் சந்திரனை பார்த்து, அவனது அழகெல்லாம் கரைந்து போக சபித்தார். மேலும் உன்னை தரிசிப்போர்க்கும் வீண் அபவாதங்கள் வரும் எனவே எவரும் உன்னை தரிசிக்காதிருக்கட்டும் என சாபமிட்டார்.

திடுக்கிட்டான் சந்திரன் தன் தவறு உணர்ந்தான். விநாயகரின் கால்களிலேயே சரண் அடைந்தான். கோபம் தணிந்தது பிள்ளையாருக்கு.



சாப விமோசனம் வேண்டி நிற்கும் சந்திரனைப் பார்த்து இப்போது பரிதாபம் மேலிட்டது. அவர் சந்திரனிடம்,

கவலைப்படாதே சதுர்த்தியில் உன்னை பார்ப்பவர்களுக்கு மட்டுமே துன்பங்கள் சூழும், அவர்களும் ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தியில் என்னை வழிபட்டால் எல்லாத் துன்பங்களும் நீங்கி நலம் பெறுவார்கள் என அருளினார்.

அதன்படியே ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி திருநாள் விநாயகர் சதுர்த்தி திருநாளாக, பிள்ளையாரை போற்றும் பெருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த ஒருநாள் தான் குபேர கணபதி (பிள்ளையார்பட்டி) இங்கு சந்தனக் காப்பிட்டு இருப்பார். இன்று மட்டுமே இந்த தரிசனம்.

சதுர்த்தியில் களிமண்ணால் வீட்டிலேயே பிள்ளையார் செய்து பூஜை செய்தால் விசேஷம், மஞ்சள், சந்தனம், சாணம், புற்று மண் இவைகள் கொண்டும் பிள்ளையார் செய்து வழிபடலாம். இக்காலத்தில் அச்சுப் பிள்ளையார் தயாராகக் கடைகளில் கிடைக்கின்றது.

வீட்டைச் சுத்தம் செய்து கோலம், செம்மண், இட்டு அலங்கரிக்க வேண்டும். வாயிலில் மாவிலைத் தோரணம் கட்ட வேண்டும்.

ஒரு பலகைச் சுத்தம் செய்து கோலம் காவி விட்டு அதன் மேல் தலை வாழை இலையின் நுனி பாகத்தை வடக்கு முகமாகத் திருப்பிப் போட்டு அதில் சிறிது அரிசியைப் பரப்பி அதன்மேல் பிள்ளையார் விக்கிரகத்தை வைக்கவும்.

ஒற்றைப் பூணூல் சார்த்த வேண்டும். எருக்கம்பூ மாலை, அருகம்புல் மாலை வஸ்திரம் சார்த்த வேண்டும். வரலட்சமி பூஜை மாதிரி மண்டபம் அமைத்து இருப்பக்கமும் வாழை மரங்கள் கட்டி அதில் அவரை அமர்த்தி அலங்காரம் செய்யலாம்.

பிள்ளையாருக்கு பூஜை செய்ய பத்திரங்கள் முக்கியம். மாவிலை, சங்குபுஷ்ப இலை, மாதுளம் இலை, நாக இலை, அருகம்புல் இலை, தங்க அரளி இலை மற்றும் தும்மைப்பூ முதலிய எல்லாவிதமான புஷ்பங்களும் உபயோகிக்கலாம்.

### அருகம்புல் எதற்காக?

இந்திராதி தேவர்களை கொடுமைப்படுத்திய எமன் மகனாகிய அனலாசுரனை விநாயகர் விழுங்கினார். அதனால் அவருடைய திருமேனியில் வெப்பம் எழலாயிற்று. அந்த வெப்பந்தணிய சந்திரன் அமுதம் ஊட்டினான். சித்திபுத்திகள் தங்கள் குளிர்ந்த உடம்பால் ஒற்றினார்கள். திருமால் குளிர்ந்த தாமரை பூவால் அர்ச்சித்தார். வருணன் குளிர்ந்த மழை பெய்தான். ஆனால் எதற்கும் பிள்ளையாரிடமிருந்த சூடு தணிய வில்லை.

இறுதியாக எண்ணாயிரம் முனிவர்கள் ஒவ்வொருவரும் 21 அருகை இட்டு வைத்திருந்த தண்ணீரை தனித்தனியே சொரிந்தனர். வெப்பம் தணிந்தது. அன்று முதல் அருகம்புல் விநாயகருக்கு மிகவும் பிடித்தமானதாயிற்று.

நைவேத்தியத்திற்கு, கொழுக்கட்டை, மோதகம், இட்லி, வடை, சுண்டல், பொரி, உருண்டை, அப்பம், எள் உருண்டை, பாயாசம், அவல், பொரி, பழங்கள், வாழைப்பழம், கொய்யாப்பழம், நாவற்பழம், விளாம்பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு வைத்து கணேசாஷ்டகம் கூறி பூஜை செய்ய வேண்டும். அன்று மாலை ஆரத்தி எடுக்க வேண்டும். கன்னட தேசத்தில் 108 பிள்ளையாரை பார்க்க வேண்டும் என்று மாலையில் கையில் அட்சதையுடன் குழந்தைகள் புறப்பட்டு விடுவார்கள்.

பிள்ளையாருக்கு, மோதகம் நிவேத்தியம் செய்து முதன் முதலாக வழிபட்டவர் வசிஷ்ட முனிவரின் பத்தினியான அருந்ததி தேவியார் என்று புராணம் கூறுகிறது.

விநாயக பெருமானின் சதுர்த்தியை முறையோடு கொண்டாடி நாம் அவரது அன்பையும், அருளையும் பெற்று அஷ்ட ஐசுவரியங்களையும் பெறுவோமாக...

கர்நாடகம், மஹாராஷ்டிரம், ஆந்திரா போன்ற சில மாநிலங்களில் விநாயக சதுர்த்தியை கணேச பூஜை என்று 10 தினங்கள் நவராத்திரி உத்ஸவம் போல் மிக்க கோலாகலத்துடன் கொண்டாடுவர். விநாயக சதுர்த்தியன்று நிறைய பிள்ளையாரைத் தரிசிப்பது நமக்கு நல்ல பலனைத் தரும் என்பது கண்கூடாகக் கண்டறிந்த உண்மையாகும்.

# சித்தர்கள் ஜீவ நாடி இரகசியங்கள் தீர்க்க தரிசனம் தந்திடும் அதிசயங்கள்

22




● ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
P.D. ஜெகதீஸ்வரன்
செல்: 96596 90395


முருகப் பெருமானின் இச்சா சக்தி வள்ளி, கிரியா சக்தி தேவசேனா,ஞான சக்தி வேல் என்பதுதான் தத்துவம். முருகப் பெருமான் கண்டவீர்ப்பு என்ற இடத்தில் தங்கி இருந்த பொழுது மகாவிஷ்ணுவின் இரண்டு புதல்விகளான அமிருதவல்லியும் சுந்தரவல்லியும் தங்களுக்கு சுப்பிரமணிய கடவுளுடன் திருமணம் நடக்க வேண்டும் என்று ஆசை கொண்டு சரவணப்பொய்கைக்கு வந்து தங்கி தவம் இருந்தனர்.

அவர்கள் தவத்தை மெச்சி அவர்கள் முன் காட்சி தந்த சுப்பிரமணிய கடவுள் அமிருதவல்லியை நோக்கி நீ இந்திரனின் மகளாகப் பிறந்தவுடன் தக்க சமயத்தில் வந்து உன்னை மணப்பேன் என்றார். அது போலவே இளையவளான சுந்தரவல்லிக்கும் காட்சி தந்தார். அதனால் அவள் சிவ முனிவரின் மகளாகப் பிறந்து நம்பி என்ற வேடர் குலத் தலைவனால் வள்ளி என பெயரிட்டு வளர்க்கப்பட்டாள்

அமிருதவல்லி சிறிய பெண்ணாக வடிவெடுத்து இமயமலையில் இருந்த இந்திரனிடம் சென்று நான் மகாவிஷ்ணுவின் மகள் ஆவேன். என்னை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை உங்களுக்குத் தந்து இருக்கின்றார் என்பதினால் இங்கு வந்தேன் என்றாள். அதனால் மிகவும் மகிழ்ச்சி அடைந்த இந்திரனும் யானை ஐராவதனை அழைத்து அந்தக் குழந்தையைப் பாதுகாக்கும்படிக் கூறினார்.

அதனால்தான் அவள் யானையால் வளர்க்கப்பட்டாள் என்பதைக் குறிக்கும் விதத்தில் தெய்வானை என்ற பெயர் பெற்றாள். சூரபத்மனை அழித்துவிட்டு சுப்பிரமணியர் திரும்பியதும் அவருடன் அவளுக்கு திருமணம் ஆயிற்று.

வேடர் தலைவனான நம்பிராஜனுக்குக் குழந்தை இல்லாமல் இருந்தது. ஒருநாள் வேட்டைக்கு சென்ற இடத்தில் பெண் குழந்தை ஒன்றைக் கண்டெடுத்தான். அந்தக் குழந்தையை தன் குழந்தையாக ஏற்று வளர்த்து வந்தான்.



### அந்தப் பெண் குழந்தைதான் வள்ளி!

மகாவிஷ்ணுவுக்குப் பெண்களாக வள்ளி, தெய்வானை இருவரும் பிறந்தார்கள். இருவரும் தங்கள் திருமண வயதில் கோபமே அடையாத ஒருவரை திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டனர். அதற்காக இருவரும் தவம் இருந்தனர். அந்த தவத்தின் பலனாக முருகப் பெருமான் அவர்கள் முன்பு தோன்றினார். அவரை, அவர்கள் இருவருமே திருமணம் செய்து கொள்ள விரும்பினர்.

அதன்படி அவர்கள் இருவரும் மறுபிறவி எடுத்தனர். தெய்வானை இந்திரனுக்கு மகளாகப் பிறந்தாள். ஒரு முறை அசுரர்களின் பிடியில் சிக்கிக் கொண்ட இந்திரலோகத்தை மீட்கிறார் முருகப் பெருமான். அதனால் மனம் மகிழ்ந்த இந்திரன், தனது மகள் தெய்வானையை அவருக்கு திருமணம் செய்து கொடுக்கிறான்.

இதே போல், வேடர் தலைவன் நம்பி ராஜனின் மகளாக வளர்கிறாள் வள்ளி. உண்மையில், அவள் பிறந்தது ஒரு மானின் வயிற்றில்! அந்த மான், வல்லிக்கொடியின் கீழ் இருந்த ஒரு குழியில் தன் குட்டியை ஈன்றது. தன் குட்டி மிகவும் வித்தியாசமாக, தன் இனத்தைப் போல் இல்லாமல் இருந்ததால் அங்கேயே போட்டுவிட்டு சென்று விட்டது.

அந்தச் சூழ்நிலையில் நம்பிராஜன் அங்கு வர, அந்தக் குழந்தையை கண்டெடுத்தான். கடவுள் அருளால் தனக்கு அந்த குழந்தை கிடைத்ததாக எண்ணி மகிழ்ந்தான். அந்த குழந்தைக்கு 'வள்ளி'





ஓம் ஷீரடிசாய், ஓம் விக்னேஷ்வர, ஓம் மஹாகாளி துணை

## ஸ்ரீ மஹா காளி ஆன்மீக மந்த்ராலயம்

ஸ்ரீ அன்னை மஹாகாளியின் அருளால் தங்களின் அனைத்து வித பிரச்சனைகள் எளிய தாந்திரீக மாந்திரீக முறையிலும் மிகவும் சக்தி வாய்ந்த ஹோம யாகங்களின் மூலமாகவும் நல்ல முறையில் தீர்வு காணப்படும். கணவன் மனைவி கருத்துவேறுபாடு, குடும்ப பிரச்சனை, தொழில் அபிவிருத்தி, தீரா கடனில் இருந்து மீள வரா கடன் வசூலாக, பல விதமான கடன் பிரச்சனையிலிருந்து மீள, சொத்து பிரச்சனை தீர, வழக்கில் வெற்றி பெற, ஆண் பெண் வசியம், பிடிக்காத உறவுகளை பிரிக்க, குழந்தையின்மை பிரச்சனை போக்க, தீய பழக்கங்களிலிருந்து விடுபட, விபத்துகள் வராமல் தடுக்க செய்வினை ஏவல் பில்லி சூன்யங்களால் ஆன கோளாறுகளிலிருந்து விடுபட, மாந்திரீக தாந்திரீக கோளாறுகளால் பாதிப்பு அடையாமல் இருக்க, எதிரியிடம் இருந்து பாதுகாக்க, விற்காதை மனை வீடு விற்க, பணம், வேலை போன்ற பிரச்சனைகள் அகல, கல்வியில் மேம்பட, துஷ்ட சக்திகளை விரட்ட, வராமல் காக்க தெய்வீக சக்தியின் மூலமாக மிகவும் சக்தி வாய்ந்த யந்திரங்களாலும் புல்லுருவி மூலிகை ரக்ஷைகளாலும், அபூர்வ சக்தி வாய்ந்த அஞ்சனங்களாலும் அதிசக்தி வாய்ந்த தாயத்துகளாலும் இம்மையத்தில் தீர்த்து வைக்கப்படும்.

இஃது மட்டும் அல்லாமல் பல விதமான நோய்களுக்கு சக்தி வாய்ந்த மூலிகைகளின் மூலம் அந்நோய்கள் தீர்க்கப்படும்.

**மலையாளம் மற்றும் தமிழ் மாந்திரீகமும், தாந்திரீகமும் தெய்வ தேவதைகளின் உபாசனையும் ஆண்/பெண் இருபாலருக்கும் கற்றுத் தரப்படும்.**

அகோர மஹாகாளி உபாசகர், ப்ரசன்ன ஜோதிடர், ஆன்மீக செம்மல்,

**ஸ்ரீ சாய் சுரேஷ்** S.M.P.,

முன்பதிவு பெற்று வரவும்

**தொடர்புக்கு : 89395 46946**

தேவைகேற்ப அற்புத மூலிகைகள், புல்லுருவி ரட்ஷைகள் இம்மையத்தில் கிடைக்கும்.

# பாப, தோஷ சாபநிவர்த்திக்கு உடனடி தீர்வு பலன் அளித்திடும் பரிகார மூலிகை இரக்ஷை

வாசகர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு ஏற்றம் பெறும் வகையில், கர்ம பலன்களைக் நல்ல மாற்றம் தரும் நிலையில், விதியை மதியால் வெல்லக்கூடிய சூட்சும இரகசியங்களை "தமிழ் புத்தாண்டு" மற்றும் "ஆங்கிலப் புத்தாண்டு" "குருப்பெயர்ச்சி" ஆகிய பலன்களில் வெளியிடப்பட்ட ஸ்ரீ ஸ்கந்த ஜீவநாடி மூலம் அந்தந்த இராசியினருக்கு ஜீவநாடியில் சொல்லப்பட்ட பரிகார மூலிகை இரக்ஷை முன்பதிவு செய்பவர்களுக்கு குறுகிய கால இடைவெளியில் கிடைக்கும்.



ஒரு மண்டலம் பூஜை செய்யப்பட்டு உருவேற்றி, உயிரோட்டத்துடன் வழங்கப்படுகிறது. "அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்" நிறுவனத்தின் ஆதரவுடன் அனுபவம் வாய்ந்தோரால் வழங்கப்படுவதால் 100% பலன் கிடைக்கும் என்பது உறுதி. ஜீவநாடிப் பரிகாரங்களைக் கடைபிடித்து பலன் பெற்றோர் ஏராளம். இந்த இரக்ஷை சகலவிதமான பாப, தோஷ, சாபநிவர்த்திக்கும், உடனடி பலனுக்கும், இரக்ஷையுடன் "தமிழ் புத்தாண்டு" மற்றும் "ஆங்கிலப் புத்தாண்டு" "குரு பெயர்ச்சி"யில் வெளிவந்துள்ள ஜீவநாடி ஆலய பரிகாரங்களையும் கண்டிப்பாக தொடர்ந்து கடைபிடித்தால் வாழ்வில் மாற்றம் காண்பது உறுதி. சந்திரன் நின்ற இராசியை உறுதி செய்துக் கொள்வது அவசியமாகும். குறைந்த அளவிலே ஜீவநாடி பரிகார யந்திர இரக்ஷைகள் செய்யப்பட்டுள்ளதால் பாக்கியம் செய்தோர்க்கே கிடைக்கும் பிராப்தம் ஏற்படும். இதுவரை பதிவு செய்தவர்களுக்கு தொடர்ந்து வரிசைப்படி அனுப்பப்பட்டு வருகிறது

**தொடர்பு கொள்க - 94445-41239**

என பெயர் சூட்டி வளர்க்க ஆரம்பித்தான்.

வள்ளி, தினை நிலத்தில் பயிர் செய்யப்பட்ட பயிர்களை பறவைகளிடம் இருந்து காக்கும் பொருட்டு அவற்றை விரட்டும் பணியில் ஈடுபடுகிறாள். அவளைக் கண்ட நாரத முனிவர், நேராக தணிகைமலை சென்று முருகப் பெருமானிடம் செல்கிறார். வள்ளியின் அழகைப் பற்றி அவரிடம் கூறி, அவளை மணக்கச் சொல்கிறார்.

முருகப்பெருமானும் வேடன் போல் முதலில் வருகிறார். வள்ளியிடம் தன் காதலை அவர் தெரிவிக்கும்போது அங்கே நம்பிராஜன் வந்து விடுகிறான். உடனே வேங்கை மரமாக மாறி விடுகிறார். நம்பிராஜன் சென்ற பிறகு திரும்பவும் வேடனாக மாறி வருகிறார். தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு வள்ளியை வற்புறுத்துகிறார். வள்ளி மறுக்கிறாள்.

அப்போது நம்பிராஜன் தன் படைகள் சூழ அங்கு வர, முருகப் பெருமான் அங்கிருந்து மாயமாகி, ஒரு சன்னியாசி கோலத்தில் அங்கு வருகிறார். வள்ளி, நம்பிராஜன் உள்ளிட்டவர்களுக்கு ஆசி வழங்குகிறார். தொடர்ந்து, நம்பிராஜன் திரும்பிச் சென்று விடுகிறான். வள்ளி மட்டும் தனியாக இருக்கிறாள்.

அப்போது, தனக்கு பசிப்பதாக கூறி தினைமாவு கேட்கிறார். வள்ளியும் ஆசையுடன் அதைத் தர அவருக்கு விக்கல் எடுக்கிறது. அவள் தண்ணீர் தர, அந்த சன்னியாசி, "இது வேண்டாம். சூரியனைக் காணாத சுனையில் இருந்து நீர் எடுத்து வந்து தரவேண்டும்" என்கிறார். அதையும் தேடி எடுத்து வந்து கொடுக்கிறாள் வள்ளி. அப்போது, "ஒரு கணவனுக்கு மனைவி செய்ய வேண்டிய பணிவிடைகளை எல்லாம் எனக்கு நீ செய்து விட்டாய். அதனால், நீயே எனக்கு மனைவியாக வந்து விடு" என்கிறார் சன்னியாசி கோலத்தில் இருந்த முருகப் பெருமான்.

வள்ளிக்கு கோபம் வருகிறது. "வயதான, சன்னியாசியான உமக்குத் திருமணமா?" என்று ஆவேசமாக கேட்கிறாள்.

அப்போது, முருகப்பெருமான் தன் அண்ணன் கணபதியை நினைத்து வேண்ட, அவர் யானையாக அங்கு வருகிறார். யானையைக் கண்டு பயந்து வள்ளி அந்த சன்யாசி கிழவரை அப்படியே அணைத்துக் கொள்கிறாள். யானையை விரட்டுமாறு கேட்கிறாள்.

அவரோ "நீ திருமணத்திற்கு ஒத்துக் கொண்டால்தான் யானையை விரட்டுவேன்" என்கிறார். வேறு வழியில்லாத வள்ளி அதற்கு சம்மதிக்கிறாள்.

அதன் பிறகு, சுய உருவத்திற்கு வரும் முருகப் பெருமான், முன்ஜென்ம நினைவைக் கூறி வள்ளியை மணந்துக் கொள்கிறார்.

இப்படி, வள்ளி பிறந்து வளர்ந்த இடம் இன்றும் 'வள்ளிமலை' என்று அழைக்கப்படுகிறது. இன்றைய வட ஆற்காடு மாவட்டத்தில் வாலாஜாப்பேட்டை அருகில் மேற்பட்டு என்ற கிராமத்தில் இம்மலை அமைந்துள்ளது.

இப்படி புராணங்கள் வள்ளி தெய்வானை திருமணத்தை போற்றிப் புகழ்கின்றன. பொதிகை மலை யாத்திரை சென்ற போது வள்ளி தெய்வானை திருமணத்தை நடத்த வேண்டும் என்ற எனது எண்ணத்தை உடன் வந்த அடியார்களிடம் சொன்னேன் உடனே திருமுருகன் பூண்டியில் வசிக்கும் குமாரமான அடியார் விக்ரஹங்களுக்கு ஏற்பாடு செய்தார். அதன் பின்பு முருகனிடம் உத்தரவு கேட்கும் வகையில் அமாவாசை பூஜையில் ஜீவ நாடி கேட்கப்பட்டது. முருகப் பெருமான் பின்வருமாறு உரைத்தார்.

**சீவனாய் இருக்கும் நீங்கள்**

**சிவனுக்கு கல்யாண கோலம் செய்ய**

**சிறப்புடனே முயற்சி நன்று ஆசி ஆசி**

**சீலமாய் இது சிறு விளையாட்டு போலும்**

**சிந்தையில் இந்த காட்சி**

**சீக்ர விவாஹப் பிராப்தி**

**சீலமாய் அஷ்ட ஐஸ்வர்யம் கிட்டும்**

**சித்தர்கள் ப்ரீதியாகும்**

**சிறப்பான ஆசி!ஆசி!ஆசி!**

என்று உரைத்தார். சீவன்களாகிய நீங்கள் சிவனாகிய என்னிடம் வந்து சேரும் ஒரு விளையாட்டு நிகழ்வுதான் இந்தத் திருமணக் காட்சி. மனிதர்கள் இறைவனுக்கு திருமணம் நட்த்தமுடியுமா? முடியாது. ஆனாலும் ஜீவாத்மா பரமாத்மா ஐக்யத்தைக் காட்டும் காட்சிதான் இந்த திருமணம். இது எனக்கு விளையாட்டுக் கல்யாணம். ஆனாலும் பக்திப் பெருக்கால் நட்த்தப்படும் இந்த நிகழ்வைக் கண்ணுற்று சிந்தையில் கொள்பவர்கள் திருமணம் வரம் கிடைக்கப் பெற்று அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அடைந்து சித்தர்களின் ப்ரீதியையும் பெறுவர். எனது சிறப்பான ஆசி உண்டு என்று உரைத்தார். அதன்படி,

ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டம் புதுக்காடு கிராமம் விலாங்குட்டை மலைக்காரன் தோட்டத்தில் உள்ள ஸ்ரீ ஞானஸ்கந்தாஸ்ரமத்தில் நிகழும் மன்மத வருடம் ஆவணி மாதம் 12 ம் தேதி (29.08.2015) சனிக்கிழைமை பௌர்ணமி திதியும்,அவிட்டம் நட்சத்திரமும், விஷ்டி கரணமும்,அதிகந்த யோகமும் கூடிய சுப யோக சுப தினத்தில் காலை 7 மணிக்கு சிம்ம இலக்கினத்தில் சுப்ரமண்யர் வள்ளி தேவசேனா திருமணம் கொங்கு முறைப்படி எல்லா வகையான சீர்களையும் செய்து மங்கல வாழ்த்துப் பாடி

அருமைப் பெரியவர்களை வைத்து நடக்க இருக்கிறது.

எவர் இந்த திருமணத்தைக் காண்கிறார்களோ அவர்கள் அஷ்ட ஐஸ்வர்யங்களை அடைவதோடு திருமண வாழ்வில் பெரிய நன்மைகளை அடைவார்கள் என்றும், நீண்ட காலமாகத் திருமணத் தடை உடையவர்கள் விரைவில் நல்ல இல்லற வாழ்க்கையை அடைவார்கள் என்றும் ஸ்ரீஞானஸ்கந்தர் ஜீவ நாடியில் முருகப் பெருமான் வாக்கு உரைத்து இருக்கிறார். அதே போல் இந்த வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்ரமண்யர் விக்ரஹங்கள் வந்த உடனேயே நீண்ட காலமாகத் திருமணமாகாத ஐந்து நபர்களுக்கு திருமணம் நிச்சயம் ஆகியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதுவரை கொங்கு முறைப்படி இறைவன் திருமணங்கள் நடத்தப்படவில்லை. முதன் முறையாக நமது ஞானஸ்கந்தாஸ்ரமத்தில் இந்த நிகழ்வு நடத்தப்படுகிறது. இந்த திருமண நிகழ்வுகளைப் பற்றி கோவை சரவணம்பட்டியில் உள்ள கௌமார மடாதிபதி தவத்திரு குமர குருபர சுவாமிகளிடம் தெரிவித்தபோது அவர் உளம் மகிழ்ந்து என்னிடம் ஆசி கூறி அவரது அருளாசி இருப்பதாகத் தெரிவித்தார் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். எனவே இந்த திருமணத்தை அனைவரும் கண்டு ஆனந்தம் அடைந்து ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தியின் அருளுக்குப் பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**திருமண நிகழ்வுகள்**

- **முகூர்த்தக் கால் நடுதல்**
- **படைக்கலம் வைத்தல்**
- **கங்கணம் கட்டுதல்**
- **சீர் தண்ணீர் கொண்டு வருதல்**
- **சுப்ரமண்யருக்கு சீர் செய்தல்**
- **தெய்வானைக்கு சீர் செய்தல்**
- **வள்ளிக்கு சீர் செய்தல்**
- **ஆக்கை சுற்றிப் போடுதல்**
- **செஞ்சோறு அஞ்சடை கழித்தல்**
- **நிறை நாழி செய்தல்**
- **கணபதி வணக்கம்**
- **நாட்டுக்கல் வணங்குதல்**
- **சீர் வரிசையுடன் ஆலய வலம் வருதல்**
- **சிவன் பார்வதிக்கு பாத பூஜை செய்தல்**
- **மங்கல வாழ்த்து**
- **சுபமுகூர்த்தம்**
- **விரல் கோர்வை**
- **அம்மி மிதித்து அருந்ததி காட்டுதல்**
- **பரியம் செலுத்துதல்**
- **தாம்பூலம் கொடுத்தல்**
- **கல்யாண விருந்து**
- **புதுமணத் தம்பதிகள் பெண்வீடு செல்லுதல்**
- **மஹா தீபாராதனை**

ஓம் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தி புகழ் ஓங்கட்டும்!!!

# ஜாதகப் பலனறிய ஜோதிட விதிகள்

**18**




சின்னாளப்பட்டி

**ஆர்.தங்கவேலு** D.A., ICAS

**செல்: 99441 28281**


6. இரவில் பிறந்தவர்களுக்கு சந்திரன் பலமிழந்து சந்திரனுக்கு 8இல் பாபர் பார்வையோ (அ) அமைவோ இருப்பின் தரித்திரம்.

7. இராகு (அ) கேது சந்திரனுடன் சேர்ந்தால் வறுமை மற்ற அமைப்புகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பதை முடிவு செய்ய வேண்டும்.

8. இலக்கினத்திற்கோ (அ) சந்திரனுக்கோ 4ல் பாபர்களிருப்பது தரித்திரம்

9. இலக்கினாதிபதி பலவீனமாகி 8க்குடையவரால் பார்க்கப்படுவது தரித்திரம்

10. 6ஆம் அதிபதி 4ஆமிடத்தைப் பார்ப்பது, 8,9ஆம் அதிபதிகள் 5இல் இருப்பது, இலக்கினாதிபதி நீசம் பெறுவது.

11. இலாபாதிபதி பலவீனமாகி, பாபர்கள் 5,9லிருக்கச் சுபர்கள் 6,8,12இல் அமைவது தீமை

12. பாபர்களின் சேர்க்கை பெற்றோ, நீசமடைந்தோ 4 ஆம் அதிபதி இருக்கவும் குரு, சுக்கிரன் நீசம் பெறவும், இலக்கினாதிபதி பாபருடன் இணையவும் வறுமை ஏற்படும்.

13. 1,2,3,4,5,7,9,10,11இல் பாபர்கள் அமைந்து இந்த இடங்களைப் பாபக் கிரகங்களும், பகை நீசம் அஸ்தமனம் பெற்ற கிரகங்களும் பார்வையிட ஏழ்மையே ஏற்படும். இந்த அமைவில் (பாபக்கிரகமிருக்க குழந்தைப் பருவத்திலும் 2 பாபகிரகங்களிருக்க நடுவயதிலும் 3 பாபக்கிரகங்களிருக்க அந்திய காலத்திலும் ஏழ்மை உண்டாகும்.

**பனிரெண்டாம் பாவகம்**

12ஆம்அதிபதி இலக்கினத்திலிருந்தால் நல்ல தோற்றமுடையவனாயினும் பேச்சுத் திறமை யுடையவனாவான்.

12க்குடையவன் 12லேயே இருந்தால் பெருந்தன்மையாகச் செலவு செய்பவனாகவும்,

ஆடு மாடுகள் வைத்திருப்பவனாகவும் இருப்பான்.

12க்குடையவன் 9லிருந்தால் மத சம்பிரதாயங்களில் நம்பிக்கை உடையவனாக, தெய்வபக்தி உள்ளவனாவான். புண்ணிய யாத்திரைகளும் செய்பவனாவான். பாபர்களின் சம்பந்தம் இத்துடன் காணப்பட்டால் தீய செயல்களில் ஈடுபடுவான்.

சுபர்கள் 12ஆம் இடத்தை அடைந்தால் நல்ல காரியங்களுக்காகச் செலவு செய்பவனாகவும் சொத்துக்கள் வாங்குபவனாகவும் இருப்பான்.

குரு இங்கு இருந்தால் கல்விக்காக, நல்ல காரியங்களுக்காகவும் சுக்கிரன் 12ல் இருந்தால் ஆடம்பர வாழ்விற்கும் பெண்களுக்கும் சுகபோகத்திற்கும் செலவு செய்வான்.

12இல் சுபர்கள் பணத்தைச் சேமிக்க வகை செய்யும்.

12இல் பாபர்கள் உடனடி இன்பம் தரும் சூதாட்டம், ரேஸ், லாட்டரி மது, மங்கை, லாகிரி வஸ்துக்கள் வழியில் செலவு செய்ய நேரிடும்.

பொதுவாக 6,8,12ஆம் இடங்களில் எந்தப் பாவகாதிபதியும் இருப்பது நல்லதல்ல. ஆனால் 12ஆம் அதிபதி 6,8இல் இருப்பது நல்லது. ஆண் கிரகம் 12லிருப்பின் ஆண்களுக்கும் பெண் கிரகம் 12லிருப்பின் பெண்களுக்கும் செலவு புரிவான்.

12ஆம் அதிபதி அமர்ந்துள்ள வீட்டிற்கேற்பவும், பார்க்கும் வீட்டிற்கேற்பவும் செலவுகள் நேரிடும். 12ஆம் அதிபதியோடு சுபர் சேர்ந்தால்தான் சம்பந்தப்படும் வீட்டிற்கேற்பவும் சுப பலன்களுக்குச் செலவு புரிவான். பாபர் சம்பந்தம் ஏற்பட்டால் சம்பந்தப்படும் வீடுகளுக்கேற்ப தீய வகையான செலவு வீண் விரயம் செய்வான்.

இதேபோல எந்தக் கிரகத்துடன் 12ஆம் அதிபதி சேர்ந்திருக்கிறதோ அக்கிரகத்திற்குரிய காரகத் தன்மையில் செலவு செய்ய நேரிடும்.

6ஆம் அதிபதியுடன் 12 ஆம் அதிபதி சேர்ந்தால் நோய்கட்கும், வைத்தியத்திற்கும் சத்துருக்கள் வகையிலும் செலவு செய்ய நேரிடும்.

குருவுடன் 12ஆம் அதிபதி சேர (ஆண்) பிள்ளைகளுக்கும் மத சம்பந்தமான செலவுகளுக்கும் உட்பட வேண்டியிருக்கும்.

சுக்கிரனுடன் 12 ஆம் அதிபதி சம்பந்தப்பட்டால் மனைவி, பெண்கள் வகையில் செலவு செய்ய நேரிடும். சந்திரன் சம்பந்தப்பட தாய் வகை

சூரியன் சம்பந்தப்பட தந்தை மற்றும் அரசு வழி புதன் சம்பந்தப்பட நண்பர் மற்ற உலகியல் வழி செவ்வாய் சம்பந்தப்பட சகோதர வழி சண்டைகள் சம்பந்தமாக சனி சம்பந்தப்பட வேலைக்காரர் கீழானவர்கட்கு செலவாகும்.

8ஆம் அதிபதியுடன் 12ஆம் அதிபதி சேர்ந்தால் மரணத்துக்குரிய ஈமக்கிரியை போன்ற வழிகளில் செலவு செய்ய நேரிடும்.

இலக்கினாதிபதியும் 12ஆம் அதிபதியும் சேர்ந்திருந்தோ (அ) சமசப்தமமாகப் பார்த்தோ அமைய 9ஆம் இடத்தில் சுபனிருக்கப் புண்ணியஸ்தலயாத்திரைகளுக்காக செலவு செய்வான்.

5,9,12ஆம் அதிபதிகள் குருவுடன் சம்பந்தப்பட்டால் பிள்ளைகளுக்காகவும் கல்விக்காகவும் மத சம்பந்தமான காரியங்களுக்காகவும் செலவு செய்வான்.

இலக்கினாதிபதி சூரியன் சுக்கிரனுடன் 12இல் இடதுகண் தீமை செவ்வாய் சனி 12லிருக்க பற்கள் நோய் கண்பார்வைக் குறை செவ்வாய் அதிகபட்ச செலவுகள் செய்து கடன்பட நேரிடும்.

செவ்வாய் 8 (அ) 12இல் இருக்கும்போது பெரும்பாலும் வெளியிட வாசம். நோய்க்குச் செலவு சிறைத்தண்டனை நேரிடலாம்.

12இல் குரு அமைவது இளமையில் சுறுசுறுப்பு, வீட்டுவேலைகளிலும் வியாபாரச் செயல்களிலும் மேன்மை அடைவார்கள்.

**இலக்கின யோகங்கள்**

இலக்கின பாவகத்திற்கு 2,12இல் சுபக்கிரகங்களிருப்பது சுப கர்த்தரி யோகம் உடல் வளம் தனயோகம் தரும். பாபக் கிரகங்களிருப்பது பாப கர்த்தரி யோகம். உடல் நலமின்மை. தரித்திரம் தரும்.

2ஆம் இடத்தில் பாபர்களின் சம்பந்தமில்லாத சுபக் கிரகங்கள் அமைய அழகான முகம் — தனயோகம்.

இலக்கினத்திற்கு 6,7,8இல் புதன், குரு, சுக்கிரன் அமைய அதியோகம் நல்லநிலை, வளவாழ்வு, இந்த 3கிரகங்களில் குறையுமளவு யோகம் குறையும்.

உபசய ஸ்தானங்களாகிய 3,6,10,11ல் புதன், குரு, சுக்கிரன் அமைவது ஆதி வசுமன் யோகம் — வளம் தரும்.

இலக்கினம் வர்க்கோத்தமம் பெற்று சந்திரனைத் தவிர 4 கிரகங்களால் மகர இலக்கினச் சனி, செவ்வாய், தனுசு, ரவிமதி ராஜயோகம், மகர இலக்கினத்தில் சந்திர செவ்வாய் தனுசு ரவி இராஜயோகம் மேசஇலக்கின ரவி, துலா மதி சனி, தனுசு குரு இராஜயோகம்

இலக்கினத்தில் புத குரு சுக்கிரன் 7இல் சனி வளமான வாழ்வு இலக்கின குரு 7இல் சனி 10இல் சூரியன் இராஜயோகம் இலக்கின குரு 2இல் செவ்வாய் 4இல் சூரிய சுக்கிரன் 10இல் சந்திரன் 11இல் சனி இந்த இராசிகள் நீசமில்லாதிருப்பின் அதிகாரம் செய்யும் தகுதி.

இலக்கினத்தில் செவ்வாய் சனி, 4இல் சந்திரன், 7இல் குரு, 9இல் சுக்கிரன் 10இல் சூரியன், 11இல் புதன் அரசாளும் யோகம்.

இலக்கினத்தில் பலமுள்ள புதனும் 9இல் வலுவுள்ள சுபரும் மற்றக் கிரகங்கள் 2,3,6,9,10,11இல் ஒன்றிரண்டு கிரகங்களாக அமைய ஆட்சி புரிவான்.

**தொடரும்...**

# தானத்திலே சிறந்தது அன்னதானம் – அதுவே கர்ம வினைகளைக் களைந்திடும் ஜீவ தானம்



முற்பிறப்பின் கர்ம வினைகளை தீர்ப்பதற்கே இப்புவியில் ஒவ்வொரு மனிதனும் பிறவி எடுக்கிறான். அப்படி பிறவி எடுத்தவனின் கர்ம வினைகளை களைந்திடும் மூல வழி அன்னதானம் செய்வது ஒன்றே தான். ஏழ்பிறப்பு தீவினைகள் நீங்கி ஏற்றம் காண, ஏழரைச் சனி, அஷ்டமச் சனி, அர்தாஷ்டம சனி பாதிப்பில் இருந்து விடுபட, புத்திர பாக்கியத் தடை, தடைப்பட்ட மணவாழ்க்கை நீங்க, தொழில் வழி பிரச்சனைகள் தீர, பித்ரு தோஷம் நீங்கவும், தீராத நோய்கள் தீரவும் அன்னதானம் அளிப்பதை வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒருவருக்காவது அன்னதானம் அளிக்க வேண்டும் என்பது சாஸ்த்திர நியதி.

ஒவ்வொருவருடைய பிறந்த நாளின் போதும், திருமண நாளின் போதும், பெரியவர்கள் மறைந்த நாளிலும், சித்தர்களின் ஜென்ம தினத்திலும், குருவின் பிறந்த நாளிலும் அன்னதானம் செய்து வந்தால் எத்தகைய பிரச்சனைகளும் நீங்கி ஏற்றம் காணலாம். பரிகாரங்கள் செய்து தங்களது எல்லாப் பிரச்சனைகளைப் போக்கிக் கொள்ள நினைப்பவர்களுக்கு அன்னதானம் செய்வது ஒன்றே கர்மாவைக் களைந்திடும் சரியான அருமருந்தாகும்.

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். (திருக்குறள்)

உண்ணாமல் நோன்பு இருப்பது மட்டும் தவமாகாது. அப்படி செய்வதால் மட்டும் ஆண்டவனின் அருளை அடைந்து விட முடியாது. உண்ண உணவின்றி வாடும் ஏழையின் பசியை நீக்குவதே அதைவிட மேலான தவமாகிறது. அதுவே ஆண்டவன் குடியிருக்கும் ஆலயமாகிறது.

இத்தகைய அரியதொரு பணியில் ஈடுபட, கடந்த10 ஆண்டுகளாக ஆன்மிகப் பணியில் அயராது அரும் தெய்வப்பணி ஆற்றிடும் திருவருள் சக்தி தன் வாசகர்கள், பாவங்கள் நீங்கி வளமோடு எல்லா நலமும் பெறும் பொருட்டு, அன்னதானம் அளிக்கும் திட்டத்தில் தன்னை ஆட்படுத்திக் கொண்டுள்ளது. எமது வாசகர்கள், தனியாக அன்னதானம் செய்ய இயலாதவர்கள், மனம் இருந்தும் மார்க்கம் இல்லாதவர்கள் இந்தக் கூட்டுத் திட்டத்தில் பங்கேற்று தன் பாவங்களைப் போக்கும் பரிகாரம் தேடலாம்.

திருநள்ளாறு, திருவண்ணாமலை, காசி, இராமேஸ்வரம் போன்ற புண்ணிய ஸ்தலங்கள், வயதான முதியோர் காப்பகங்கள், ஆதரவற்ற அனாதைகள், உடல் ஊனமுற்றோர், கோவில் திருவிழாக்காலங்களில் கலந்துக் கொள்ளும் அடியார்கள் போன்றோர்களுக்கு அன்னதானம் அளித்திட திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த அறக்கட்டளையின் பதிவு செய்யப் பட்டுள்ள 19 விதமான பரோபகார உதவிகளில் குறிப்பிட்ட சில உதவிகள் :–

- ஏழ்மையில் இருப்பவர்களுக்கு உதவுதல்
- ஏழ்மையில் படிக்கும் பள்ளிக் குழந்தைகளின் படிப்பிற்கு உதவுதல்
- ஏழ்மை குழந்தைகளுக்கு துணிமணிகள், புத்தகங்கள், மருத்துவ உதவி போன்றவைகள் அளித்தல்
- உடல் ஊனமுற்ற உள்ளங்களுக்கு உதவுதல்
- பரோபகார நிறுவனங்களுக்கு உதவுதல்
- ஏழ்மையில் இருப்போருக்கு மண வாழ்க்கைக்கு மகிமை சேர்த்தல்
- ஆதரவற்ற வயதான முதியோர்களின் வாழ்வாதார நிலைக்கு உதவுதல் போன்ற பல பரோபகார மனித நேய உதவிகள்.

ஆன்மிகத் தொண்டு செய்வதுடன், பாவங்கள் போக்கும் பரிகாரமாக ஏழ்மையில் இருக்கும் ஜீவன்களுக்கு உதவிடும் தாய்மை குணத்தோடு, தன்னலம் பாராது உங்கள் முன் வலம் வருகிறது 'திருவருள் சக்தி அன்னதான சாரிடபிள் டிரஸ்ட்'. நீங்களும் இதில் பங்கு பெற்று இந்த மண்ணில் பிறந்த கர்மாவை தீர்ப்பதற்கு வழி வகுத்துக் கொள்ளலாம். பிறவி இல்லாப் பெருவாழ்வு அடைவதற்கும் இது அடிகோலும். பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்ற நிலையில், என்றும் பேர் சொல்லும் பெரும் பயனை பெற்றிட வழி வகுக்கும். வருங்கால நம் சந்ததி களும் நம்மை என்றும் வாழ்த்தும். முடிந்த அளவு உதவி செய்து ஏழ்மையில் வாடும் ஜீவன்களுக்கு ஒரு வேளை உணவையாவது அளித்தோம் என்ற ஆத்ம திருப்தியில் ஆண்டவன் அருளுக்கும் பாத்திரமாகலாம்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (திருக்குறள்)

ஏழைகளின் பசித்துன்பத்தை நீக்கும் தானமே என்றும் மேன்மையை அடைகிறது. அதுவே, சேர்த்த செல்வத்தைச் சிறப்புடன் சேமித்து, அழிவுக்கு ஆட்படாமல் பாதுகாத்து வைக்கும் அரியதொரு பொக்கிஷமாகிறது. வருங்கால நம் சந்ததிக்கும் வளமான வாழ்வுக்கு வழி வகுக்கின்றது. ஏழ் பிறப்புக்கும் ஏற்றத்தைக் கொடுக்கும் கற்பக விருட்சமாகிறது.

- **பிரதி பலன் பாராது தானம் செய்வதே பிரதானம்.**
- **இறைக்கின்ற கிணறே சுரக்கும் – என்றும்! கொடுக்கின்ற மனமே வாழ்க்கையில் சிறக்கும்!**

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் "THIRUVARUL SAKTHI ANNADHANA CHARITABLE TRUST" என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க DD/CHEQUE/M.O. மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு உங்களது தெளிவான முகவரியுடன் தொடர்பு கொள்ளும் தொலைபேசி எண்களுடன், பெயர், பிறந்த நாள், திருமண நாள், இராசி, நட்சத்திரம் ஆகியவைகளைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும். புனிதமான அன்னதான சேவையில் உங்களையும் ஈடுபடுத்தி எங்களுடன் ஒத்துழைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

DD/Cheque/M.O. அனுப்ப வேண்டிய முகவரி : **திருவருள் சக்தி அன்னதான சாரிடபிள் டிரஸ்ட்**

## THIRUVARUL SAKTHI ANNADHANA CHARITABLE TRUST,

(REGD. PUBLIC CHARITABLE TRUST- **No. 32/2012** ) 18/67, P.V. Koil 1st Street, Pudupet, Royapettah, Chennai - 600 014.

**Phone : 044 - 2811 6770, Cell : 0-97109 21880 Email : tsannadhanam@gmail.com**

பணமாக அளிக்கும் அன்பர்கள் கீழ்க்கண்ட வங்கி கணக்கில் பணம் செலுத்தி எங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

Mrs. **R. RADHA** - S.B.A/c. : 426681768 - INDIAN BANK (Chennai - Royapettah).

**அன்னதானம் செய்வோம் – கர்ம வினைகளைப் போக்குவோம்.**

**Mrs. R. RADHA, Founder & Managing Trustee**

A/c Details: Thiruvarul Sakthi Annadhana Charitable Trust, A/c No.12820100107660
Federal Bank, Royapettah Branch, Chennai- 600 014. IFSC: FDRL0001282

மேலும் தொடர்புக்கு
**Cell: 72999 21880**

**நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன**

# தூக்கமின்மை நோய்க்கான கிரக சேர்க்கைகள்



**எஸ்.ஞானசந்திரன்**
செல்: 94434 57536

காலையில் கண்விழித்து படுக்கையிலிருந்து எழுகிறபோது களைப்பு, சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடனும், தெம்புடனும் மலர்ச்சியுடன் உள்ளவர்கள் நிச்சயமாகப் பாக்கியசாலிகளே பலருக்கு இந்தப் பாக்கியம் இல்லை என்கின்றன. புள்ளி விவரங்கள். ஜனத் தொகையில் பாதிப்பேருக்கு ஏதாவது ஒரு வாழ்க்கைக் காலகாட்டத்தில் சரியாகத் தூங்க முடியாத பிரச்சனை உள்ளது. விஞ்ஞானம் அசுர வளர்ச்சியடைந்துள்ள இந்தக் காலத்திலும் கூட, தூக்கத்தைப் பற்றிய முழுமையான விவரங்கள் இன்னமும் கண்டறியப்படாமல் தான் உள்ளன என்பது வியப்பளிக்கும் ஒரு செய்தி. தூக்கமின்மைக்கான காரணம் மனிதருக்கு மனிதர் மாறுபடலாம் என்பதும் இந்நோய்க்கான சிகிச்சை முறையை இது தான் என வரையறுத்துக் கூற முடியாத நிலைமையை மருத்துவர்களுக்கு ஏற்படுத்தி விடுகிறது. சில சமயங்களில் மருத்துவர்களிடையே அபிப்பிராய பேதத்தையும் இது ஏற்படுத்தி விடுகிறது.

பிலிப்ஸ் இந்தியா ஹோம் கேர் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் நமது நாட்டில் 93 சதவீதம் பேர் 8 மணி நேரத்துக்குக் குறைவாகவே தூங்குகிறார்கள் எனத் தெரியவந்துள்ளது. பிலிப்ஸ் ஸ்லீப் சர்வே என்கிற தலைப்பில் நாடெங்குமுள்ள 25 முக்கிய நகரங்களில் சுமார் 35 வயது முதல் 65 வயது வரையுள்ள உழைக்கும் வர்க்கத்தினரைத் தேர்வு செய்து மேற்கொள்ளப்பட்ட இவர்களது ஆய்வு மேலும் கண்டறிந்தது என்னவெனில் மேற்படி 93 சதவீதம் பேர்களில் 58 சதவீதம் பேர் சரியான தூக்கம் இல்லாததால் தங்களுடைய வேலைகள் பாதிக்கப்படுகின்றன என்பதை ஒப்புக் கொள்கின்றனர் என்கிறது. இதில் 11 சதவீதம் பேர் தூங்குவதற்காக விடுமுறை எடுத்துக் கொள்வதாகவும் 12 சதவீதம் பேர் அலுவலகங்களிலேயே தூங்கி விடுவதாகவும் கூறியுள்ளனர். 70 சதவீதம் பேர் இரவில் மூன்று முறையாவது விழித்துக் கொள்வதாகவும், சரியான தூக்கம் இல்லாதது தமது ஆரோக்கியம், வேலையில் அக்கறை மற்றும் திறனைப் பாதித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.



மனித உடலின் செயற்பாடுகளில் தூக்கம் என்பது ஒரு புதிரான விஷயம் தான் தூங்கும் போது தான் உடலில் பல இயக்கங்கள் நடைபெறுகின்றன என்பதால் தூங்காமல் பல நாட்கள் இருக்க நேரிடும் போது மரணம் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. களைப்பு நீங்கவும், புத்துணர்ச்சி பெறவும் ஒருவர் எவ்வளவு நேரம் உறங்க வேண்டும் என்பது ஆளாளுக்கு வேறுபடும். சிறு குழல் கைகள் தினமும் 18 மணி நேரம் தூங்க, பெரியவர்கள் சராசரியாக 7 முதல் 9 மணி நேரம் தூங்குவார். எப்படியெனினும் ஒரு மனிதர் எவ்வளவு நேரம் தூங்குகிறார் என்பது முக்கியமல்ல, ஏனெனில் உடலின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு வகையில் உறங்கத் தொடங்குவது தான் காரணம் முதலில் உடலின் மேற்பரப்பு தூங்கி விட, முளை கடைசியாகத் தூங்க ஆரம்பிக்கும்.

உறக்கமானது பல்வேறு கட்டங்களைக் கொண்டதாகும். இதில் மூன்றாவது மற்றும் நான்காவது கட்டங்களே ஆழ்ந்த உறக்கத்தை வழங்கி, உடல் புத்துணர்ச்சி பெற உதவுகின்றன. மேலும், ஆழ்ந்த உறக்கத்தின் போதுதான் நமது நோய் எதிர்ப்பு அமைப்பும் தீவிரமாக இயங்கி, கிருமிகளின் ஊடுருவிலை எதிர்த்துப் போராடுகிறது. தவிர, உடலின் சிதைந்த செல் களும் புதுப்பிக்கப்படுகின்றன. கனவுகள் தோன்றுவதும் உறக்கத்தின் ஒரு பகுதி தான் விழித்திருக்கும் வேளையில் நாம் எதிர் கொள்ளும் அனுபவப்பதிவுகளில் தேவையில்லாதவற்றை முளை வெளியேற்றும் செயல்தான் கனவு ஆகிறது.

தூக்கமின்மைக்கான காரணங்களாக மருத்துவ உலகம் கூறுவனற்றில் உடல் சம்பந்தப்பட்ட வைகளோடு, உள்ளம் சம்பந்தப்பட்டவைகளோடு உள்ளம் சம்பந்தப்பட்டவைகளும் இருக்கின்றன. ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமான கலவையான காரணங்கள் தூங்க விடாமல் தடுக்கின்றன என்கிறாாக்ள் மருத்துவர்கள்

கண்டம் விட்டு கண்டம் செல்லும் ஜெட்விமானப் பயணிகளுக்கு ஏற்படுகின்ற கால மயக்கம் (ஜெட் லேக்) மேலதிகாரியுடனான

மோதல் அல்லது பணிச்சுமை, தேர்வு அல்லது நேர்காணல் குறித்து எழும் அச்ச உணர்வு, ஏதேனும் ஒரு செயல் குறித்த பதட்டம் என்பன குறுகிய கால தூக்கமின்மையயை தர வல்லவன நெருங்கிய உறவினரின் மாணவர். காதல் தோல்வி. மணமுறிவு. உடல்நலக்குறைவு, நோய்கள் போன்றவை வாரக்கணக்கிலோ, மாதக்கணக்கிலோ தூக்கமின்மையைத் தரக்கூடியன ஆகும்.

இவை தவிர, மனக் கவலைகள், மனச்சிதைவு நோய், மூட்டுவலி, தலைவலி, வயிற்றுப்புண் மூச்சிரைப்பு, சீரற்றஇதயத்துடிப்பு சிறுநீரகக் கோளாறுகள் தைராய்டு கோளாறு கருவுற்றிருப்பது, முதுமை என்பனவும், உடல் வலிகள் மற்றும் எதிர்காலம் பற்றி அச்சம் அல்லது நம்பிக்கையின்மை போன்றவைகளும் தூக்கத்தைக் காவு கொள்ளும் காரணங்களாக விளங்குகின்றன.

இவை தவிர, மதுவோ, சில வகை மருந்துகளோ, ஊக்க இரசாயனங்களோ அல்லது தைராய்டு நோய்க்கான மருந்துகளோ தூக்கத்தை வரவிடாது தடுத்து விடுவன ஆகும். உணர்ச்சி தணிக்கும் மருந்துகள், கருத்தடை மாத்திரைகள், சோர்வு நீக்கும் மருந்துகள், இதய நோய்க்கான மருந்துகளும் கூட தூக்கத்தை வர விடாமல் தடுப்பன என்று காணப்பட்டுள்ளது. கொசுத்தொல்லை, உடற்பயிற்சியின்மை, அதிகமான இரைச்சல், அதிக வெளிச்சம், கடும் குளிர், அதிக வெப்பம் என்பனவும் தூக்கத்தின் எதிரிகள் ஆகின்றன. பகலில் தூங்குவதும், நேரம் கிடைத்த போதெல்லாம் தூங்குவதும் உடற்கடிகாரத்தின் சீரான இயக்கத்தைக் குழப்பி, தூக்கமின்மையையே வரவழைக்கும், பசி அல்லது அதிக உணவும் கூட தூக்கத்துக்கு எதிரி தான்.

குறட்டை விடுவது, அடிக்கடி சிறுநீர் கழிக்கச் செல்வது, காலை நேரத் தலைவலி ஞாபகமறதி, எதிலும் கவனமின்மை, அதிகமாகக் கோபப்படுவது அல்லது சினப்பது, மன அழுத்தம், அடிக்கடி மாறும் மனநிலை, சதா கவலைப்படுவது, பிறரிடம் பழகாமல் ஒதுங்கி விடுவது, செயல்பாடுகளில் மந்தநிலை, ஏதேனும் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது போன்ற உணர்வு பொறுமையின்மை போன்றவை தூக்கமின்மை நோயின் அறிகுறிகள் ஆகும்.

**தூக்கமின்மை நோயினால் அவதிப்படுபவர்கள் என்ன செய்ய வேண்டும்?**

1. தினமும் குறிப்பிட்ட நேரத்தில் தூங்கச் சென்று, குறிப்பிட்ட நேரத்தில் விழித்துக் கொள்ளப் பழக வேண்டும்.
2. தூங்குவதற்கு 2 மணி நேரத்துக்கு முன்பு இரவு இரவை உணவை உட்கொள்ள வேண்டும்.
3. காலையில் நடைபயிற்சியோ, உடற்பயிற்சியோ மேற்கொள்வது நல்ல தூக்கம் தரும்
4. ஒரு டம்ளர் பால் அல்லது ஒரு வாழைப் பழம் நல்ல தூக்கம் தரும்.
5. தூங்கும் முன் கடுமையான உடற்பயிற்சி அல்லது கடுமையான உடலுழைப்பு கூடாது.

எப்படியெனினும் தூக்கமின்மை நோயைக் கவனிக்காது விட்டால், அது உங்களின் செயற்பாட்டுத் திறனைப் பாதிப்பதோடு, உயர்ந்த அழுத்தம், நீரிழிவு, இதயநோய்கள் மற்றும் பக்கவாதம் போன்ற நோய்களை வேண்டாத விருந்தாளிகளாக அழைத்து வரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தூக்கமின்மை குறித்த பல்வேறு விளக்கங்களை இதுவரை பார்த்தோம். அக, புறச் சூழ்நிலைகளாலோ, நமது நடவடிக்கைகளில் சிலவற்றினாலோ ஏற்படுகிற தூக்கமின்மையை சீர் செய்ய என்ன செய்யலாம் என்பதையும் நாம் கண்டோம். எவ்வாறெனினும், தூக்கமின்மை ஒரு நோயாக நம்மைப் பாதிக்கும் அளவுக்கு உருவெடுக்குமானால், இதற்கான காரணத்தையோ, பதிலையோ அவரவரின் ஜாதகத்தில் தான் தேடிக் காண வேண்டியிருக்கும்.

என்னென்ன கிரக சேர்க்கைகள் தூக்கமின்மையைத் தரக்கூடும் என்பதை இனிப் பார்க்கலாம்.

1. இலக்கினாதிபதி 12இல் நீச்சம் பெறுவது 6க்குடையவனால் பார்க்கப்பட்டிருப்பது சனி, இராகுவுடன் சம்பந்தப்பட்டிருப்பது, படுத்தால் உடனே தூக்கம் வராது
2. கேது 12இல் இருப்பது தூக்கம் குறைவு
3. பாவக்கிரகங்கள் பலமிழந்த நிலையில் அல்லது வக்கிரம் பெற்ற கிரகம் ஏதேனும் 12ஆம் ஸ்தானத்தில் இருப்பது குறைந்தளவே தூக்கம் உண்டு.
4. 12க்குடையவன் 6அல்லது 8இல் நீச்சம் பெற்றோ வேறு வகையிலும் மிகவும் பலவீனமாகவே இருப்பது தூக்கம் குறைந்தவர்
5. 12க்குடையவர் 6 அல்லது 8க்குடையவனுடன் பரிவர்த்தனையாகி இருப்பதுடன், பாதிப்புற்றும் இருப்பது தூக்கமின்மை நோய் பாதிக்கும்.
6. சுக்கிரன் 12க்குடையவனாகி அல்லது சுக்கிரனும், 12க்குடையவனான கிரகமும் சனி மற்றும் இராகுவினால் பாதிக்கப்பட்டிருந்தது. 12ஆம் பாவமும் இதே சனி மற்றும் இராகுவினால் பாதிக்கப்பட்டிருப்பது இன்சொம்னியா எனப்படும் தூக்கமினமை நோய் உண்டாகும்.
7. சுக்கிரன் 12ஆம் பாவம் 12க்குடையவன் என்பன பிரிக்கும் கிரகங்களான சூரியன், சனி, இராகு மற்றும் இவைகளின் இராசிநாதர்களான கிரகங்களினால் பாதிக்கப்பட்டிருப்பது தூக்கம் குறைவுப்பட்டு இன்சொம்னியா என்கிற தூக்கக் குறைவு நோய் வரும்.
8. சூரியன், சந்திரன் இரண்டும் உச்சமாவது தூக்கம் பாதிக்கும்.

**தொடரும்...**


குருவருள் ஜோதிடம்
No.1 ஜோதிடத் திறனாய்வு மாத இதழ்
செப்டம்பர் 2015
ஸ்ரீ குரு: 7 அருள்: 4 மன்மத ஸ்ரீ ஆவணி - புரட்டாசி
ரூ.30/-
திருமண முகூர்த்த
நல்ல நாள் குறித்திட
மூல நூல்கள் காட்டிடும்
முத்தான வழி முறைகள்
தாம்பத்திய உறவுக்குத்
தகுதியான கிரகப் பொருத்தம்
தம்பதியரைப் பிரித்திட்ட
கிரகநிலை தந்திடும் வருத்தம்
வேதனையை அனுபவிக்க
வைத்திட்ட ஜாதகத்தின் சதி
சோதனையைத் தாங்கிட
வைத்திடும் ஜோதிட விதி
இப்போது
விற்பனையில்
பெண்களின் குணநலன்களை
பெரிதும் அறிந்திட உதவிடும்
பிரதானமான திரிம்சாம்சம்